The 2010 AWARDS
SVIAS, Eastern University, Sri lanka

**Students' Union**
SVIAS, Eastern University, Sri Lanka

# கலை அருவி

*Kalai Aruvi*



**Annual Magazine of Students' Union**
Swamy Vipulananda Institute of Aesthetic Studies
Eastern University - Sri Lanka

# கலை அருவி

*Kalai Aruvi*

## முதலாவது இதழ்

## 2010 - 2011

வெளியீடு

மாணவர் ஒன்றியம்

சு.வி.அ.க. நிறுவகம்
கிழக்குப் பல்கலைக்கழகம்
கல்லடி,மட்டக்களப்பு

| | | |
|---|---|---|
| நூல் | : | கலை அருவி- 2010 |
| இதழாசிரியர்கள் | : | அஹமட் அஷ்பாக்<br>வ. நிர்மலகாந்தன் |
| வெளியீடு | : | மாணவர் ஒன்றியம்<br>சு.வி.அ.க. நிறுவகம்<br>கிழக்குப் பல்கலைக்கழகம்<br>கல்லடி, மட்டக்களப்பு |
| ISSN No | : | **ISSN 2012-9475** |
| பிரதிகள் | : | 500 |
| அட்டைப்படம் | : | அஹமட் அஷ்பாக் |
| கணனி வடிவமைப்பு | : | ஜயபால சுலக்ஸன் |

| | | |
|---|---|---|
| **Title** | : | **Kalai Aruvi - 2010** |
| **Editors** | : | **Mr. MA. Ahamed Ashfak**<br>**Mr. V. Nirmalakanthan** |
| **Published By** | : | **Students' Union**<br>**Swamy Vipulananda Institute of Aesthetic Studies**<br>**Eastern University - Sri Lanka** |
| **ISSN No** | : | **ISSN 2012-9475** |
| **Copies** | : | **500** |
| **Cover Design** | : | **Mr. MA. Ahamed Ashfak**<br>(Visual & Technological Arts) |
| **Page Layout:** | | **Jayabala Jeyasulaksan**<br>(Visual & Technological Arts) |
| **Printed By** | : | **Visual Creation**<br>0752822915 |

# The 2010 AWARDS

SVIAS, Eastern University, Sri lanka

## Students' Union - SVIAS, Eastern University 2010 - 2011

**President**

Mr. R. Tharshan

**Vice President**

Mr. S. Suyenthiran

**Secretary**

Mr. K. Kamalathas

**Treasurer**

Mr. R. Ragavan

**Editor**

Mr. V. Nirmal akanthan

**Members**

Miss. K.Kalaranjini
Mr. R. Sutharsan
Mr. N.Hiswan uz Zaman

**Book Editor**

Mr. MA. Ahamed Ashfak



# உபவேந்தரின் வாழ்த்துச் செய்தி

சுவாமி விபுலானந்த அழகியற்கற்கைகள் நிறுவகத்தின் வரலாற்றிலே மாணவர் ஒன்றியத்தினால் வெளியிடப்படும் சஞ்சிகைக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

மாணவர் சமூகத்தின் அறிவாற்றல் திறன்கள், இயல்புகள் முதலானவற்றை வெளிக்காட்டுவதற்காக அவர்களது சங்கங்கள் ஒன்றியங்கள் என்பன அமைகின்றன. அவ்வகையில் இந்நிறுவகத்தின் மாணவர் ஒன்றியத்தின் வெளியீடான இச்சஞ்சிகை மாணவர்களின் படைப்பாற்றல்கள், அறிவாற்றல்கள், அபிலாசைகள், உணர்வோட்டங்கள்முதலானவற்றை வெளிப்படுத்துவதற்குரிய சிறந்த களமாக அமைந்துள்ளது.

கவின்கலைகளைக் கற்கைநெறியாகக் கொண்டு கலைபயிலும் இந்நிறுவனத்தின் மாணவர்கள் நிகழ்த்துகைக் கலைகளோடு மாத்திரம் தம்மை மட்டும் படுத்திக் கொள்ளாமல் இலக்கிய ஆய்வுகளிலும் படைப்பாற்றல்களிலும் தாம் கொண்டுள்ள ஆர்வத்தினை வெளிப்படுத்துவதாக இந்நூல் அமைகின்றது. இதன் வரவிற்கு உறுதுணையாக நின்ற மாணவர் ஒன்றியத்தை மிகவும் பாராட்டுவதோடு இந்நூல் அடுத்து வரும் காலங்களிலும் தொடர்ச்சியாக வெளிவந்து நிலைபேறடைய வேண்டும்.

**கலாநிதி க. பிரேமகுமார்**
பதில் உபவேந்தர்
கிழக்குப் பழ்கலைக்கழகம்



# பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

சுவாமி விபுலானந்த அழகியற்கற்கைகள் நிறுவகத்தின் மாணவர் ஒன்றியத்தினால் வெளியிடப்படும் முதல் நூலுக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இந்நிறுவகத்தின் மாணவர் ஒன்றியம் தற்போது சிறப்பான முறையில் செயற்பட்டு வருவதோடு மாணவர்களிடையே இலை மறை காயாக மறைந்து கிடக்கும் திறமைகளை வெளிக்கொணரும் வகையில் பல்வேறு கலை நிகழ்ச்சிகளையும் போட்டிகளையும் ஏற்பாடு செய்து அவர்களை ஊக்கப்படுத்தி வருவது மிகவும் பாராட்டத்தக்க விடயமாகும். மாணவர் ஒன்றியத்தின் செயற்பாடுகள் மாணவர்களின் நிகழ்த்துகைசார் கலைத்திறன்களை வெளிக்கொணர முனைவதோடு மாத்திரம் நின்றுவிடாது அவர்களின் எழுத்தாக்கத் திறன்களை வெளிக்கொணர்வதற்கும் முயற்சி எடுத்துள்ளமை வரவேற்கத்தக்கது. இம்முயற்சியின் முதற்படியாகவே இச் சஞ்சிகை வெளிவந்துள்ளது. இதன் வரவு மாணவர்களின் சிந்தனையோட்டம், அறிவாற்றல் என்பவற்றை வெளிப்படுத்துவதற்கு சிறந்த களமாக அமையும் என்பதில் எதுவித ஐயமுமில்லை.

பணிப்பாளர்
**Mrs.B.Rajaeshwaran,**
M.Music,M.Phil(Madras)



## MESSAGE FROM SENIOR ASSISTANT REGISTRAR

I have pleasure in extending message to the maiden publication of "Kalai Aruvi" by the Student Union, Swami Vipulananda Institute of Aesthetic Studies, Eastern University,Sri Lanka.

Our Institute, functioning in the name of Srimat Swami Vipulananda is in need to preserve its identity. As such the effort taken by the Student Union is very much appreciated.

This publication contains articles on Student Union activities, general knowledge, music, dance, visual arts, drama and theatre arts. More and more innovative ideas are expected from the students in their next publication.

Finally, I extend my wishes to the student community to keep on publishing the journals in future.

**T.Vijeyakumar**
Senior Assistant Registrar
SVIAS, EUSL.



## MESSAGE FROM THE SENIOR ASSISTANT BURSAR

It is with much pride that I convey this Message to "Kalaiyaruvi" publication of Students' Union of Swami Vipulananda Institute of Aesthetic Studies, Eastern University, Sri Lanka.

I extend my wishes to the Editor and the members of the Students' Union of SVIAS, EUSL.

Further, I express my heartiest congratulation to the contributors of articles for the interests of the readers of "Kalaiyaruvi".

I hope that the knowledge, skills and talents you earned at Swami Vipulananda Institute of Aesthetic Studies will be much beneficial for you to make your life success in the challenging world.

I wish you all success in your life and career.

**Mrs. S.A. Nirosha Lalani**
B.Sc (Acc), ICA (Inter)

Senior Asst. Bursar
Swami Vipulananda Institute of Aesthetic Studies
Eastern University, Sri Lanka



# கிழக்குப் பல்கலைக்கழக நூலகரின் வாழ்த்துச் செய்தி

கிழக்குப்பல்கலைக்கழக, சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைநெறி மாணவர்களின் முதலாவது வெளியீடு "கலை அருவி". இது மாணவர்களின் அரிய முயற்சிக்கு ஓர் அடையாளம். மாணவர்கள் தங்களின் கல்வி ,ஆராய்ச்சி, அனுபவங்கள் போன்றவற்றைத் தங்களுக்குள்ளேயே தக்கவைக்காது அவை பல்வேறு துறையினரையும் சேரவேண்டும் என்ற இவ் வெளியீட்டு முயற்சி மிகவும் பாராட்டப் படவேண்டியதொன்றாகும். இவர்கள் மென்மேலும் ஊக்கப்படுத்தப்படவும் உற்சாகப்படுத்தப்படவும் வேண்டியவர்களாவர்.

"கலை அருவி" தனெக்கென ஒரு சில கலைகளை மட்டும் மிளிரச்செய்வதுடன் நின்றுவிடாது அறுபத்துமூன்று கலைகளையும் உள்வாங்கி தெளிந்த கலை அருவியாக வளரவேண்டியது இக்கால கட்டத்தின் அவசியம் எனவும் கூறலாம். கலை படிப்பதற்காக மட்டுமல்ல அது பொழுதுபோக்கு, மனித விழுமியங்களில் பயிற்றுவிக்கப்பட்டுவருதல் இன்றைய அவசர உலகில் அத்தியாவசியமானதும் அவசரமானதும் கூட. இத்தகைய ஒரு கலைச் சூழலை ஒவ்வொருவரது மனதிலும் "கலைஅருவி" உருவாக்க வேண்டுமென வாழ்த்துகின்றேன். மேலும் இவ் அருவி ஒரு இடத்தில் ஒரு விடயத்துடன் சலசலக்காது அது ஓடும் இடமெல்லாம் பல்கலை மணத்துடன் தொடர்ந்து வெளிவரவேண்டும் என்று மன நிறைவுடன் வாழ்த்துகின்றேன்.

நன்றி.

**திருமதி த .அருள்நந்தி**
நூலகர்.
கிழக்குப் பல்கலைக்கழகம்
22.06.2011



## இசைத்துறை இணைப்பாளரின் வாழ்த்துச் செய்தி

எமது நிறுவக மாணவர் ஒன்றியத்தின் ஒரு கன்னி முயற்சியாக இக்கலையருவி வெளியிடுவது மிகவும் பாராட்டத்தக்க விடயமாகும். இந்நூல் விரிவுரையாளர்கள், மாணவர்களதும் ஆய்வுகளுடன் வெளிவருவது மேலும் அழகைத்தருகிறது. இந்நிறுவனமானது இசை நடனக்ககல்லூரியாக இருந்த போது சுருதி, இதழ் என பல வெளியீடுகள் வெளியாகி இருந்தது. மீளவும் அது ஒரு ஆய்வுக்கலையாக வெளியாகி வருகின்றது. எனினும் மாணவர்களின் முயற்சியாக கலையருவி என்னும் வெளியீடு வெளியிடப்படுவது குறித்து மாணவர் ஒன்றியத்திற்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம். ஒரு மாணவ சமூகத்தின் அறிவும், ஆளுமையும் அவர்களின் ஆக்கங்களிலேயே தான் வெளிப்படுத்தப்படுகின்றன. அவ்வாறே இக்கலையருவி மாணவர்களின் பல அறிவுள்ள ஆக்கங்களை தாங்கி நிற்கின்றது. சுவாமி விபுலானந்தரின் விபுல விளக்கொளியில் அழியாது முன்னோக்கி எல்லைகள் பல கடந்து இன்னும் பல அரிய கலை பொக்கிஷங்களை தன்னகத்தே கொண்டு தேக்கமற்ற அருவியாக பாய்ந்து முன்னேற எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவிப்பதும் இக்கலை அருவிக்காக உழைத்த அனைவருக்கும் நன்றி கூறுவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

**திருமதி. பிரியதர்சினி ஜெகதீஸ்வரன்,**
இணைப்பாளர்,
இசைத்துறை.

## கட்புல தொழில்நுட்பத்துறை இணைப்பாளரின் வாழ்த்துச் செய்தி



சுவாமி விபுலாநந்தா அழகியற்கற்கைகள் நிறுவகத்தின் மாணவர் ஒன்றியமானது மாணவர்களின் ஆற்றல்களை வெளிக்கொண்டு வரும் பல்வேறுவிதமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதன் ஒரு நடவடிக்கையாகவே இம்மலர் வெளிவருவது மகிழ்ச்சியை அளிக்கின்றது. ஏனெனில் விபுலாநந்தா இசை நடனக்கல்லூரி விபுலாநந்தா அழகியற்கற்கைகள் நிறுவனமாக உயர்ந்ததன் பின் வெளிவரும் முதலாவது மலர் இதுவாகும். மாணவர் ஒன்றியத்தின் முதலாவது அடியெடுத்தல் இதுவெனலாம். இங்கு அனேகமான நடவடிக்கைகள் முதலாவது அடியெடுப்புடனே இருப்பது ஒரு துரதிஸ்ட்டமான ஒன்றாகும். அவ்வாறில்லாமல் இது பல மைல்களைக்கடந்து சாதனைகள் புரிய வேண்டும் என்பது எனது ஆவல்.

இன்றைய மாணவ சமூகம் வாசிப்பு என்ற தேட்டத்தை மறந்து பார்த்தல் மகிழ்தல் என்ற கணனி வலையமைப்புக்குள் சிக்குண்டதாகவே இருக்கின்றது. Internet பார்த்தல், E-Mail பார்த்தல் என்ற பார்வைப்புலத்துக்குள் கட்டுப்பட்டிருப்பதன் காரணத்தினால் ஆழமான வாசிப்பினூடாக வரும் அறிவுருவாக்கம் குறைந்து கொண்டு வருவதாகவே உணர்கின்றேன். நூலகத்தை பயன்படுத்தும் மாணவர்களிலும் பார்க்க Net café, Computer Unit போன்றவற்றைப் பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கை அதிகமாகும். இங்கு நூலகத்திலும் பார்க்க தகவல்களும் வாசிக்க வேண்டியவைகளும் அதிகமாக இருந்த போதிலும் மாணவர்கள் அவர்களின் வயது உந்துதல் காரணமாக இவற்றை விடுத்து பொழுதுபோக்கு அம்சங்களிலே கூடுதலான நேரத்தை செலவிடுவதை அவதானிக்க முடிகின்றது. இன்று கூடுதலாக Face Book, Chatting, என்பவற்றிலே மாணவர்களின் ஓய்வு நேரங்கள் செலவிடப்படுவதாக உணர்கின்றேன். இது ஆரோக்கியமான சமூக அறிவுருவாக்க நடத்தைக்கு உகந்த ஒன்றல்ல. இது ஒரு வகையான வலையமைப்பு ஆதிக்கமாகும். மகிழ்வழிப்பதின் ஊடாக மாணவர்களின் சிந்தனையாற்றலைக் குறைப்பதில் இந்த வலையமைப்பு ஆதிக்கம் கணிசமான பங்களிப்பினை வழங்குகின்றது.

மாணவர்கள் இது தொடர்பாக விழிப்புற்றவர்களாக இருப்பது அவசியமாகும். மாணவர்களுக்கூடாக வரும் இவ்வாறான மலர்கள் மாணவர்களின் சுய சிந்தனைத் தளத்துக்கு அடிகோலுபவை. இச்சிந்தனை காத்திரமானதாகவோ அன்றி காத்திரமற்றதாகவோ இருக்கலாம். ஆனால் மாணவர்கள் சிந்திக்க, எழுத, தங்களுடைய கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ள முனைந்திருக்கிறார்கள் என்பது முக்கியமான விடயமாகும்.

கடந்த இரண்டரை வருடங்களாக இந்நிறுவனத்தில் கற்பித்தல் பணிகளை மேற்கொள்பவன் என்றவகையில் இம்மாணவாகள் எதிர்நோக்கும் பல்வேறுவிதமான சிரமங்களை நன்கு அறிவேன் அந்தச் சிரமங்களுக்கூடாக இவ்வாறான ஒரு மலரை மாணவர்கள் வெளிக்கொண்டு வருவது பாராட்டப்படவேண்டிய ஒன்றாகும்.

மாணவர்களின் இவ்வாறான நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெறுவதற்கும் இம்மலர் சிறப்புற வெளிவருவதற்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

Mr. சு. சிவரெத்தினம்
இணைப்பாளர்
கற்புல தொழிநுட்பக்கலை



## நாடகத்துறை இணைப்பாளரின் வாழ்த்துச் செய்தி

"கலையருவி உன் பணி ஓங்குக"

கிழக்குப்பல்கலைக்கழகம், சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவன மாணவர் ஒன்றியத்தின் முதலாவது வெளியீடாக வரும் "கலை அருவி" என்னும் நூலுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இதில் வெளியாகியுள்ள அனைத்து கட்டுரைகளும், கவிதைகளும் சகல துறை மாணவர்களாலும், துறைசார் விரிவுரையாளர்களாலும் வடிவமைக்கப்பட்டன. தமது திறன்களை, படைப்புக்களை வெளிப்படுத்தி மெருகூட்டி வழியமைத்துக்கொடுக்கும் களமாக இது விளங்குகின்றது. இதன் செம்மையும், விரிவாக்கமும், பொலிவும் பாராட்டுக்குரியது. இதன் பணிகள் மேலும் பல்வேறு துறைகளிலும் வியாபிக்க வேண்டும் இக் "கலை அருவி" தொடர்ந்து வருடம் தோறும் ஊற்றெடுத்துப் பெருகி வரவேண்டும் என வாழ்த்துகின்றேன்.

**Mr. A. விமல்ராஜ்**
இணைப்பாளர்
நாடகத்துறை



# மாணவர்ஒன்றியத் தலைவரின் வாழ்த்துச் செய்தி

சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவனத்தின் மாணவர் ஒன்றியத்தினால் முதற்தடவையாக இந்நாலினை வெளியிடும் வாய்ப்பு எனக்கு கிடைத்ததில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

எமது நிறுவனத்தில் இலை மறை காயாய் இருக்கின்ற ஆய்வாளர்கள், படைப்பாளிகள், மாணவர்களின் எழுத்தாற்றல்களையும் அவர்களது திறைமைகளையும் பறைசாற்றுவதற்கு இந்நூல் ஒரு களமாக அமைகின்றது என கூறலாம்.

எந்த ஒரு விடயமும் எழுத்து ரீதியாக ஆவணப்படுத்தப்படும் போதே அது வரலாற்றில் இடம்பெற முடியும். இந்நூலும் எமது சுவடுகளைப்பதியும் ஆவணமாக அமைந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

தமிழரின் பண்பாட்டு வளர்ச்சியில் கலைகளுக்கு எத்தகைய முக்கியத்துவம் அளிக்கப்பட்டது என்பதையும் இசை எவ்வகையில் மனிதனின் உடல் உள நோய் தீர்க்கும் மருந்தாக அமைகிறது என்பன போன்ற பல்வேறு விடயங்களைத் தெளிவுபடுத்துவதற்காக இந்நூல் அமைகிறது.

இந்நூலிற்கு பல்வேறு தளங்களிலும் ஆக்கங்களை தந்துதவிய மாணவர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் பலருக்கும் எனது நன்றிகளை கூறிக்கொள்வதோடு இந்நூல் வெளிவர பல வழிகளிலும் உதவிய அனைத்து நெஞ்சங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

Mr. D.தர்சன்
தலைவர்,
மாணவர் ஒன்றியம்



# மாணவர்ஒன்றிய செயலாளரின் வாழ்த்துச் செய்தி

சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவனத்தில் உத்தியோகபூர்வமாக வாக்கெடுப்பு நடாத்தி தெரிவு செய்யப்பட்ட மாணவர் ஒன்றியத்திலிருந்து "கலை அருவி" எனும் நூலினை வெளியிடுவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். மாணவர் ஒன்றியித்திலிருந்து வெளிவரும் முதல் நூல் இதுவாகும்.

கலாசசார விழாவினை மையப்படுத்திய இந்நூல் மாணவர்களினதும் விரிவுரையாளர்களினதும் ஆக்கங்கள் இடம்பெறுகின்றன. நூல் ஆக்கக் குழுவாக மாணவர் ஒன்றியமே செயற்பட்டது. மாணவர்களிடையே கலாசார போட்டியானது ஒற்றுமையையும், புரிந்துணர்வையும் ஏற்படுத்தவே நடத்தப்பட்டது.

மேலும் கலாசார போட்டி, கலாசார விழா என்பவற்றை திறம்பட நடாத்துவதற்கும், "கலை அருவி" நூல் வெளி வருவதற்கும் எமக்கு தோல் கொடுத்த அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

க.கமலதாஸ்
செயலாளர்
மாணவர் ஒன்றியம்

## மாணவ ஒன்றிய பதிப்பாசிரியரின் வாழ்த்துச் செய்தி



சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் இந்நிறுவனத்திலிருந்து வெளிவருகின்ற முதலாவது நூலாக இது அமைகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. இந்நூரில் விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்களது ஆக்கங்கள் திறம்பட இடம்பெற்றிருப்பதுடன் நான்கு துறை மாணவர்களது கலைத்துவமான விடயங்களும் அத்துடன் பலதரப்பட்ட பொதுவானதும் முக்கியமானதுமான சுவையான விடயங்களும் இடம்பெற்றிருப்பது சிறப்பிற்குரியது.

மேலும் இந்நூலினை சிறப்பானதாக வெளியிடுவதற்கு ஆலோசனைகள், ஆக்கங்கள், பண உதவி மற்றும் தொழில்நுட்ப வசதிகள் என்பவற்றையும் தந்துதவிய அனைவருக்கும் நான் நன்றி கூற கடமைப்பட்டிருப்பதோடு இந்நூல் முதலாவது நூல் என்ற படியால் ஏதாவது தசவறுகள் விடப்பட்டிருப்பின் அதற்கான மன்னிப்பையும் எதிர்பார்ப்பதோடு இது போன்று தொடர்ச்சியாக இவ்வாறான நூல் வெளியீடுகள் வெளிவர ஆண்டவனை வேண்டி நிற்கின்றேன்.

வ. நிர்மலகாந்தன்,
மாணவ ஒன்றிய பதிப்பாசிரியர்
சு.வி.அ.க. நிறுவகம்

# நூலாசிரியரின் உள்ளத்திலிருந்து...



சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம்,கிழக்குப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் செயற்பாடுகளுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல வெளிவருவதே, கலை அருவி எனும் இச் சஞ்சிகையாகும். இதன் நூலாசிரியர் எனும் வகையில் எனது கருத்துக்களை இங்கு பகிர்ந்து கொள்கிறேன்.

பல்கலைக் கழகக் கல்வி என்பது தேடிக் கற்கப்பட வேண்டியதொன்றாகும். இவ்வாறு தேடலின் பாற்பட்டதே எமது மாணவரின் இக்கன்னிப்படைப்பாகும். மாணவர் தமக்கு முன்னுள்ள சவால்களையும் பிரச்சனைகளையும் புரிந்துகொண்டு செயலாற்றுவது பல்கலைக்கழக வாழ்வில் பெறும் அனுபவங்களாகும். அறிவும் திறன்களும்,சுயமாகக் கற்றுக்கொள்ள வேண்டிய தேவைகளும்,படைப்புத்திறன்களும் அவற்றைப் புதுப்பித்துக்கொள்ளலும் காலத்தின் தேவையாகின்றன. இவ்வாறு பெற்ற அறிவுப் பெருக்கத்திற்கேற்ப பண்புமாற்றங்கள் உருவாகின்றன. புதிய விஞ்ஞானத்தொழில்நுட்ப சமுதாயத்தின் வாரிசுகளாக சமூகத்தின் முன்னேற்ற நடவடிக்கைகளுக்கு முகம் கொடுக்கும் துணிச்சல் மிக்கவர்களாக எம்மை நாம் தயார்ப் படுத்திக் கொள்ளப் பல்கலைக்கழகக் கல்வி வழி காட்டுகின்றது.

சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தில் இசைத்துறை,கட்புலத்துறை,நடன மற்றும் நாடகத்துறை முதலிய அனைத்துத் துறைகளிலும் இருந்து அழகியல் சார்ந்த கட்டுரைகள் இங்கு இடம்பெறுகின்றன. இதில் நுண்கலை மாணவர்களது அழகியல் சார்ந்த கட்டுரைகள், கவிதைகள் மட்டுமின்றி எமது நிறுவக விரிவுரையாளர்களது படைப்புக்களும் இடம்பெற்றுள்ளமையால் "கலை அருவி" என்னும் இச்சஞ்சிகை தரம் வாய்ந்த ஓர் கலைச் சஞ்சிகையாக அமையும்.

இச்சஞ்சிகைக்கு ஆக்கங்களைத் தந்த எமது நிறுவக அழகியல் கலை மாணவர்களுக்கும் நாம் கேட்டதற்கிணங்கத் தரமான விபரணக் கட்டுரைகளைத் தந்த விரிவுரையாளர்களுக்கும் இச்சஞ்சிகையில் இதழாசிரியர் என்ற வகையில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இச்சஞ்சிகையை எமது நிறுவகமாணவர் ஒன்றியத்தின் முதலாவது சஞ்சிகையாக வெளிவருவதனால், இதற்கான ஓர் சிறந்த வழிகாட்டலின்றி இருந்தபோது, இவ்விடயம்தொடர்பாக ஆலோசனைகள், வழிநடத்தல்கள் செய்து உதவிய விரிவுரையாளர்களுக்கும் நன்றிதெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். குறிப்பாகக் கிழக்குப்பல்கலைக்கழக நூலகர் திருமதி. த.அருள்நந்தி [BA(Hons),MLIS] அவர்களுக்கு எமது நிறுவக மாணவர் ஒன்றியத்தின் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இச்சஞ்சிகைக்கு ISSN இலக்கத்தினைப் பெறுவதற்குப் பலதரப்பட்ட சிரமத்தின் மத்தியிலும்,எமது நிறுவக மாணவர் ஒன்றியத்தின் முதலாவது சஞ்சிகையாகக் "கலை அருவி" வெளிவர இருப்பதனால்,அதற்கான இலக்கத்தினைப் பெற்றுத்தந்தமைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இச்சஞ்சிகையைத் தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் எதிர்காலத்தில் வரும் மாணவர் சமூகம் மேலும் சிறப்பாக இதனை வெளியிட வேண்டுமென எதிர்பார்க்கின்றேன்.

-நன்றி-

**Mr. MA. அகமட் அஷ்பாக்.**
நூலாசிரியர்,

பொருளடக்கம்

| | | |
|---|---|---|
| 01) | சங்க காலத்தில் இசை மரபு | 01 |
| 02) | ஹிந்துஸ்தானி இசை வாகேயகாரர்கள் | 04 |
| 03) | இலங்கையின் இசை வளர்ச்சி | 07 |
| 04) | சுமை (கவிதை) | 10 |
| 05) | இசையும் மனித மூளையும் | 11 |
| 06 | உடல் ஆரோக்கியத்தில் இசையின் முக்கியத்துவம் | 13 |
| 07) | முகமூடி நடனங்கள் | 15 |
| 08) | அரங்க உருவாக்கமும் அதன் வளர்ச்சியும் ஒரு பார்வை | 16 |
| 09) | உலகம் அழியுமா? | 19 |
| 10) | உறைந்த உணர்வுகள் (கவிதை) | 21 |
| 11) | இசையும் மொழியும் | 22 |
| 12) | பண்பாடு என்றால் என்ன? | 25 |
| 13) | இலங்கையில் இஸ்லாமிய இசை | 27 |
| 14) | இயற்கையை திருடும் செயற்கை | 30 |
| 15) | குறட்டோவ்ஸ்கியின் எளிமை அரங்கில் நடிகன் | 31 |
| 16) | இசையின் மேன்மையும் ஆற்றலும் | 34 |
| 17) | சுவாமி விபுலாநந்த இசைநடன கல்லூரி, பல்கலைக்கழகத்தோடு இனைக்கப்பட முன்பும் சுவாமி விபுலாநந்த அழகியற் கற்கைகள் நிறுவகமாக உருவாகிய பின்பு ஏற்பட்ட மாற்றங்களும், வளர்ச்சிப் படிகளும் | 36 |
| 18) | இசையியல் தத்துவம் | 41 |
| 19) | குருதிக் குறிப்பு | 42 |
| 20) | சுவாமி விபுலாநந்த அழகியற் கற்கைகள் நிறுவக மாணவர் ஒனறியத்தின் செயற்பாடுகள் | 43 |
| 21) | ஈழத்து சிறுவர் நாவல் இலக்கிய வளர்ச்சியில் மட்டக்களப்பு பிரதேச சிறுவர் நாவல் | 45 |
| 22) | கிரேக்கத்தின் சாடி ஓவிய வெளிப்பாடுகளும் அதன் வளர்ச்சி நிலையும் - ஓர் நோக்கு | 50 |
| 23) | இசைக் கல்வி பயிலும் மாணவர்களின் இடைவிலகலும் அதற்கான காரணங்களும் | 56 |
| 24) | நுண்கலையுள் இசைக்கலை | 61 |
| 25) | சுவாமி விபுலாநந்தர் நோக்கில் சுவாமி விபுலாநந்த அழகியற் கற்கைகள் நிறுவகம் | 66 |

இச்சஞ்சிகையில் வெளிவந்த ஆக்கங்களின் கருத்துக்களுக்கு ஆக்கங்களின் ஆசிரியர்களே பொறுப்பானவர்கள். - இதழாசிரியர்-



*Director*

**Mrs.B.Rajaeshwaran**, M.Music,M.Phil(Madras)

## Svias - Academic Staff



## Svias - Students' Union



கவின் கலைகளில் இசைக்கலை புனிதமானது. மனித நாகரிகம் வளர்ச்சியடைய முன்னரே இசைக்கலை ஒரு தனிப்பாதையாக விளங்கியது. மொழி மூலம் உணர்ச்சிகளை வெளிப்படுத்த முடியாத காலத்திலேயே மனிதன் தன் உணர்ச்சிகளை ஓசை மூலம் வெளிப்படுத்தினான்.

இவ் ஓசைகளே இசை தோன்றக் காரணமாய் இருந்தன. மகிழ்ச்சியை ஆரவாரித்தும் பயத்தை இரைந்தும் துன்பத்தை ஓலமிட்டும் மனிதன் தன் உணர்வுகளை வெளிப்படுத்தினான். இவ்வாறு இனிமையற்ற ஓசை தவிர்ந்த ஏனையவை நாதம் என அழைக்கப்பட்டன. இந்த நாதமே இசைக்கு அடிப்படையாக அமைந்தது. இந்த வகையில் சங்ககால இசைமரபு பற்றி நோக்குவோம்.

சங்க காலத்தில் ஐவகை நிலங்களும் அவற்றிற்குரிய பண்புகளும் இருந்தன. அவையாவன குறிஞ்சிப்பண், முல்லைப்பண், மருதப்பண், நெய்தற்பண், பாலைப்பண் என்பவையாம். விபுலானந்தர் தனது நூலில் பன்னிரண்டு ஸ்வரஸ்தான அமைப்பை உடையது ஆயப்பாலை எனவும், நாற்பத்தெட்டு ஸ்வரஸ்தான அமைப்பை உடையது சதுரப்பாலை எனவும் தொண்ணூற்றியாறு ஸ்வர நரம்புகளை உடையது திரிகோணப்பாலை எனவும் குறிப்பிடுகின்றார். இவை பின்பு ரி-க-த-நி என தமிழிசையில் துத்தம், கைக்கிளை, விளரி, தாரம் என்னும் ஸ்வரஸ்தானங்களுடன் இணைந்து பதினாறு பண்கள் ஆயின என்றார்.



# சங்க காலத்தில் இசை மரபு

மேலும் குறிஞ்சி நிலத்திற்குரிய தோற்கருவியாக பறையும், மருதநிலத்திற்குரிய தோற்கருவியாக முழவும், முல்லை நிலத்திற்குரிய தோற்கருவியாக ஏறு கோட்பறையும், புல்லாங்குழலும், நெய்தல் நிலத்திற்குரிய கருவியாக விளரியாழும் நாவாய்ப்பம்பை முதலியவையும் தோற்கருவியாக துடியும் இசைக்கப்படுகிறது. பட்டினப்பாலை என்னும் சங்க நூல் காவிரிப்பூம்பட்டின பண்டக சாலையில் யாழ்கள் இருந்தன என்று கூறுகிறது.

பரிபாடல் என்பது பண்ணுடன் கூடிய எழுபது இசைப்பாடல்களை கொண்ட ஒரு தொகுதி ஆகும். பரிபாடல் முழுவதும் இசைப்பாடலாகும். இதனை பாடிய புலவர்கள் பதின்மூன்று பேர் இவற்றிற்கு இசை வகுத்தோர் பதின்மார். இப்பாடலில் குறிப்பிடப்பட்டுள்ள பதினொரு பாடல்களின் பண்பாலை யாழ் என்றும் இவற்றுள் ஐந்து பாடல்களின் பண் நேர்திறம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. யாழ், குழல்,முழவு, பாட்டு என எல்லாவற்றையும் உள்ளடக்கிய பெரிய தொகுதியாக பரிபாடல் விளங்குகிறது. பரிபாடலின் பண் வழக்கு தற்போது மறைந்துவிட்டது.

எட்டுத்தொகையைச் சேர்ந்த புறநானூற்றில் பண்கள் பற்றியும் வேய்குழல், ஆம்பற்குழல், சீறியாழ், பேரியாழ், தண்ணுமை, பெருவங்கியம், முழவு முதலிய இசைக்கருவிகள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. காலையில் மருதப்பண்ணும் மாலையில் செவ்வழிப் பண்ணும் இசைக்கப்படும் மரபு இருந்திருக்கிறது. தவிர புறநானூற்றில் நடுகல் வழிபாடு இருந்திருக்கிறது. போரிடும் வீரனுடைய சிறப்புக்கள் கொடை, புகழ், வீரம் என்பவை பற்றி பாடற்பொருள் அமைந்திருந்தது. இத்தகைய பாடல்களை ஒத்தவையே ஆற்றுப்படை நூல்களாகும்.

ஆற்றுப்படுத்தல் என்பது வழிப்படுத்தல் ஆகும். பெரும் பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை ஆகிய நூல்களில் மன்னர்,கலைஞர்களை எவ்வாறு ஆதரித்தனர் என்பது பற்றிக் கூறப்பட்டுள்ளது. வெறியாட்டு எனப்படும் ஆடலுடன் கூடிய பாடல் முருகன் பெயரில் பாடப்பட்ட இசை வடிவமாக காணப்படுகிறது.

இசைத்தமிழின் அடிப்படை இலக்கணம் பற்றிய குறிப்புக்கள் தொல்காப்பியத்திலும் எட்டுத்தொகை பத்துப்பாட்டு, கீழ்க்கணக்கு நூல்களிலும் காணப்படுகிறது. மேலும் தொல்காப்பியத்தில் பண்ணத்தி பரிபாடல் முதலிய இசைப்பகுதிகள் காணப்படுகின்றன. கலிப்பாவினுள் தாழிசைப் பகுதி இசைப்பாட்டாக உள்ளது.

பத்துப்பாட்டு பாடல் தொகுதி நூல்களில் பாணர் - விறலியர் - கூத்தர் - பொருணர் என்ற நால்வகையினர் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. இவர்கள் யாவரும் இசைக்கலையிலும் இசைக்கருவிகளை கையாள்வதிலும் தேர்ச்சி பெற்றவர்கள். பொருணர்ஆற்றுப்படையில் கூறப்பட்டுள்ள வில்யாழே யாழின் தோற்றமாக இருந்திருக்கிறது. யாழின் தோற்றத்தின் ஆரம்பநிலை வில்யாழிருலிந்தே தோற்றம் பெற்றது.

பேரியாழ் இருபத்தொரு நரம்புகளையும் - மகரயாழ் பத்தொன்பது நரம்புகளையும் - சகோட யாழ் பதின்மூன்று நரம்புகளையும் - செங்கோட்டு யாழ் ஏழு நரம்புகளையும் உடையது. யாழை முதலில் கரிகாம் போதியில் [அதாவது செம்பாலை எனக்கூறுவர்] இசைத்துப் பின்பு கிரக பேதத்தினால் மத்திமத்தை ஸட்ஜமாக கொண்டு சங்கராபரணமும் இசைக்கப்பட்டது.

இவ்வாறாக சங்க காலத்தில் பல்வேறு நூல்களிலும் இசை பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. இந்த இசையே பிற்காலத்தில் இசை வளர்ச்சி, தமிழிசை வளர்ச்சி இரண்டிற்கும் முன்னோடியாக இருந்திருக்கிறது என்பது ஐயமில்லை.

சங்க காலத்தில் காணப்பட்ட பண்களும் அவை சுட்டும் நூல்களும்.

| | | |
|---|---|---|
| 1. | ஆம்பல் பண் | நற்றிணை, ஐங்குறுநூறு, குறிஞ்சிப்பாட்டு |
| 2. | காஞ்சிப் பண் | மலைபடுகடாம் - புறநானூறு, சிறுபாணாற்றுப்படை |
| 3. | சாமரப் பண் | சிறுபணாற்றுப்படை |
| 4. | குறிஞ்சிப் பண் | மலைபடுகடாம், நற்றிணை, திருமுருகாற்றுப்படை |
| 5. | செவ்வழிப் பண் | அகநானூறு, புறநானூறு, மதுரைக்காஞ்சி |
| 6. | நைவளப் பண் | குறிஞ்சிப்பாடல், பரிபாடல், சிறுபாணாற்றுப்படை |
| 7. | பஞ்சுரப் பண் | ஐங்குறுநூறு |
| 8. | படுமலைப் பண் | நற்றிணை, குறுந்தொகை, புறநானூறு |
| 9. | பாலைப் பண் | பரிபாடல், பதிற்றுப் பத்து, பெரும் பாணாற்றுப்படை, பொருணாராற்றுப்படை |
| 10. | மருதப் பண் | மதுரைக்காஞ்சி, மலைபடுகடாம் |


சங்க இசைக்கருவிகளும் அவை சுட்டும் நூல்களும்

| | இசைக்கருவிகள் | நூல்கள் |
|---|---|---|
| 1. | யாழ் | புறநானூறு, அகநானூறு, நற்றிணை, பரிபாடல், கலித்தொகை, பதிற்றுப் பத்து, ஐங்குறுநூறு, திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, மலைபடுகடாம் |
| 2. | கின்னரம் | பெரும்பாணாற்றுப்படை |
| 3. | குழல் | பரிபாடல், கலித்தொகை, புறநானூறு, பதிற்றுப் பத்து |
| 4. | சங்கு | திருமுருகாற்றுப்படை, புறநானூறு, பதிற்றுப் பத்து |
| 5. | தும்பு | ஐங்குறுநூறு, பரிபாடல், மலைபடுகடாம் |
| 6. | தண்ணுமை | நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு |
| 7. | முழவு | குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு, பரிபாடல், ஐங்குறுநூறு |
| 8. | முரசு | மதுரைக்காஞ்சி, கலித்தொகை, குறிஞ்சிப்பாட்டு, பரிபாடல், பதிற்றுப் பத்து, அகநானூறு |
| 9. | பறை | புறநானூறு, அகநானூறு, குறுந்தொகை, ஐங்குறுநூறு, மலைபடுகடாம், சிறுபாணாற்றுப்படை |

செ. ரேணுகா
இசைத்துறை
3ம் வருடம்

# MODERN Art

Modern art includes artistic works produced during the period extending roughly from the 1860s to the 1970s, and denotes the style and philosophy of the art produced during that era. The term is usually associated with art in which the traditions of the past have been thrown aside in a spirit of experimentation. Modern artists experimented with new ways of seeing and with fresh ideas about the nature of materials and functions of art. A tendency toward abstraction is characteristic of much modern art. More recent artistic production is often called Contemporary art or Postmodern art.



Ahamed Ashfak,
3rd year , Visual & Technological Arts

# ஹிந்துஸ்தான் இசை வாகேயகாரர்கள்

கீழைத்தேய இசை வரலாற்றில் ஹிந்துஸ்தானி இசை மிகவும் சிறப்பு வாய்ந்தது. இவ்விசை வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்த வாக்கேயகாரர்களுள் தான்சேன், அமீர்குஸ்ரு, பாத்கண்டே போன்ற மூவரும் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் எத்தகைய பங்களிப்புச் செய்துள்ளார்கள் என்பதை சுருக்கமாக நோக்குவோம்.

## தான்சேன்

பேரரசர் அக்பர்ரேவா மகாராஜாவை வென்ற பின் சமாதான ஒப்பந்தத்தின் ஒரு அம்சமாக தான்சேனை தன் அரசவைக்கு பரிசாக அளித்துவிட வேண்டும் என்று குறிப்பிட்டு கேட்டு அவரை தன்னுடன் அழைத்து வந்தார். அக்பரின் அரசவையில் தான்சேன் ஓர் இரத்தினக் கல் போன்று விளங்கினார். இவரது இயற்பெயர் 'ராம்தானுபாண்டே' ஆகும். இவரது தந்தையாரும் சிறந்த சங்கீத வித்துவானாகவும், சமஸ்கிருத மொழியில் விற்பன்னராகவும் விளங்கினார். இவர் சிறந்த பிராமண குடும்பத்தை சேர்ந்தவர். தான்சேன் குவாலியரில் கி.பி.1520 ல் பிறந்தார். இவரது பெற்றோருக்கு பல குழந்தைகள் பிறந்து இறந்ததாகவும், 'மொஹமட் கௌஸ்' என்பவரின் ஆசீர்வாதத்துடன் தான்சேன் பிறந்ததாகவும் கூறப்படுகிறது.

இளமையிலே துடியாட்டம் மிக்கவராகவும், இயற்கையை இரசிப்பவராவும், பறவைகள் ஏனைய குரல்வகைகளை பாவனை செய்வதில் திறமை மிக்கவராகவும் இருந்தார். இவரது திறமைகளைக் கண்ட தந்தை 'மொஹமட் கௌஸ்' என்பவரிடம் இசையைக் கற்க அனுபினார். குறுகிய காலத்திற்குள்ளேயே இசை மட்டுமின்றி ஜோதிடம், இலக்கியம் போன்ற துறைகளிலும் பாண்டித்தியம் பெற்ற தான்சேனை மொஹமட் ஹவுஸ், சுவாமி 'ஹரிதாஸிடம்' இசைபயில அனுப்பி வைத்தார்.

தான்சேன் பழைய குவாலியரில் இருந்து பயிற்றுவித்த இசைக்கல்லூரியில் 'காஜாத் முஹமது ஹவுஸ்' என்பவரிடம் இசை பயின்றார். இவர் ஹிந்துஸ்தானி இசைக்கு பல அரிய சேவைகளைப் புரிந்துள்ளார். பல நாடுகளின் சங்கீதப் பாணிகளை இவர் கற்றிருந்ததால் பல புதிய பாணிகளைப் புகுத்தி ஹிந்துஸ்தானி இசைக்கு தனி ரஞ்சகத்தை உண்டாக்கினார். இவர் இசை நுட்பங்களை விளக்கி 'சங்கீத சாரம், ராகமாலா, ஸ்ரீ கணேசஸ் தோத்திரம்' எனும் நூல்களையும் இயற்றியுள்ளார்.

'ராபாப் எனும் தந்தி வாத்தியத்தையும்' இவர் உருவாக்கியுள்ளார். குவாலியரில் பல இசைக்கல்லூரிகளை நிறுவியும், பல இசை விழாக்களை நடத்தியும் ஹிந்துஸ்தானி இசையை பரப்பி வந்துள்ளார்.

குவாலியரில் அழும் குழந்தைகள் கூட ஸ்வரத்தோடு தான் அழும் என்று அங்கு பழமொழியே இருந்தது. இவர் 'தீபக்ராகத்தை' பாடினால் வெறும் விளக்குகளில் கூட ஜோதி தோன்றி ஒளி வீசத்தொடங்கும். இவர் ஒரு சமயம் யமுனை ஆற்றின் நீரை தீபக்ராகம் பாடி கொதிக்க செய்ததை தானே நேரில் கண்டதாக மொகலாய வரலாற்று ஆசிரியர் 'ஜாலாலுதின் ஷோரணி' தன் நூலில் குறிப்பிட்டுள்ளார். இதே போல் தான்சேன் தீபக் இராகத்தை பாடியதும் அவரை தீ சூழ்ந்தது என்றும் அவருடைய சீடர்கள் 'மேகமல்ஹாத்' எனும் இராகம் பாடியதும் மழை பெய்து அத்தீயை அணைத்தது என்றும், தான்சேன் இறந்ததும் அவரது மகன் தானே உருவாக்கிய 'பிலாஸ் காணி தோடி' என்ற இராகம் பாடியதும் தான்சேன் உயிர் பெற்று மகனின் ராகத்தை கேட்டதும், மகனின் இராகத்தை பாராட்டிவிட்டு மீண்டும் இறந்தார் என

வரலாறு கூறுகிறது.

ராஜாமான் சிங்கின் மனைவி 'மிருக்நயணியும்' சிறந்த பாடகியாவார். மிருக்நயனி சிஷ்யையாகிய கொசனி என்பவளை தான்சேன் மணம் புரிந்தார். தான்சேனும் முஸ்லீமாக மாறி ' மொஹமட் அலிகான்' என பெயர்பெற்று அழைக்கப்பட்டார். இவர் பல துருபத்களை இயற்றியுள்ளார். இவர் அக்பரின் சமஸ்தான வித்துவான் ஆவதற்கு முன் ராஜாராம் சந்தர் ரேவா மானிலத்தின் அரச சபையிலும் வித்துவானாக விளங்கினார். ராஜாராம் சந்தரை கௌரவிக்கும் வகையிலும் பல துருபத்களை இயற்றியுள்ளார்.

'அக்ஹராவில்' அக்பரின் சமஸ்தான வித்துவானாக விளங்கிய போது இவரது கச்சேரியைக் கேட்ட மன்னர் 2 லட்சம் ரொக்கப்பரிசை அளித்ததாக கூறப்படுகிறது. இவர் மியான்கிதேஷ், மியான், சாரங், மியான்கிமல்கார் போன்ற புதிய இராகங்களை அறிமுகப்படுத்தி சிறந்த பாடகராக விளங்கியதுடன் 'ராபாப்' எனும் வாத்தியத்தை வாசிப்பதில் தேர்ச்சி பெற்றார். இவர் 1610 ல் இறைவனடி சேர்ந்தார். இவரது குருவின் சமாதிக்கருகில் இவரது சமாதியும் அமைக்கப்பட்டுள்ளது.

அமீர்குஸ்ரு

அமீர்குஸ்ரு என்பவரின் இயற்பெயர் 'அபூர்அல்ஹஷன் ஜாமுனுத்தீன் குஸ்ரு' என்பதாகும். இவரது தந்தையார் துருக்கி நாட்டைச் சேர்ந்தவர். இவர்கள் துருக்கி நாட்டிலிருந்து வெளியேறி இந்தியாவின் பாட்டாலி எனும் இடத்தில் குடியேறினார்கள். அமீர்குஸ்ருவுக்கு 7 வயதாக இருக்கும் போது தன் தாயாரை இழந்தார்.

சிறு வயதிலேயே உருது, பாரசீகம் போன்ற மொழிகளில் பாடல்களை இயற்றும் வல்லமை பெற்றிருந்தார். குறுகிய காலத்திற்குள்ளேயே பெருமளவு பாடல்களை இயற்றினார். இவர் ஹிந்தி மொழியிலும் புலமை பெற்று டோகாஸ் போன்றவற்றை இயற்றினார். இவர் ஹிந்தி மொழியில் இயற்றிய பாடல்களை இன்றும் பலர் பாடிவருகின்றனர். இவரே ஹிந்துஸ்தானி இசையின் பல இராகங்களில் பாரசீக இசையின் சில அம்சங்களைப் புகுத்தி பல புதிய கலப்பு இசை வடிவங்களை உண்டாக்கினார். 'கவாலி' இராகம் பாடும் முறையும் இவரால்தான் தோற்றுவிக்கப்பட்டது. தென்னிந்திய இசை மேதையான 'கோபால் நாயக்' என்பவருடன் இவர் இசையில் போட்டியிட்டுள்ளார். ஹிந்துஸ்தானிய இசையை வகைப்படுத்தியவர் என்ற பெருமையை இவரே பெற்றுள்ளார். தபேலா, ஸிதார் இசைக்கருவிகளை உருவாக்கியவர் என்றும் கூறப்படுகின்றது. ஹிந்துஸ்தானி இசைக்கருவியான 'பக்கவாஜ்' என்ற தாளக்கருவியை நடுவில் 2 ஆகப்பிளந்து வேறு வேறு கருவிகளாக்கி அவற்றை தபேலா, பாயா என்றும் வீணையிலும் யாழிமுகம் என்ற பகுதியை நீக்கி விட்டு மேலும் சில மாற்றங்களைச் செய்து (ஸிதார்) என்ற கருவியும் கண்டுபிடித்ததாக கூறப்படுகின்றது. இவர் ஹிந்துஸ்தானி இசையின் பிதாமகர் என்றும் போற்றப்படுகின்றார். மேற்கத்தேய இசையைப் போலவே ஹிந்துஸ்தானிய இசையையும் குறியீடுகள் மூலம் எழுத, படிக்க, பாட வழிவகுத்தவராவார்.

இவர் டெல்லி சமஸ்தான சுல்தானின் ஆஸ்தான வித்துவானாக விளங்கினார். 'ஜலால் உல்தின் தில்ஜி' என்பவர் டெல்லி சமஸ்தானாக இருந்த போது இவருக்கு அமீர் என்னும் பட்டத்தைக் கொடுத்து கௌரவித்தார். இவர் இந்திய அரேபிய பாரசீக இசை வகைகளை ஒப்பு நோக்கினார். இவர் காலத்தில் பிரபல்யமாக இருந்த பல சிக்கலான இந்திய பாடல்களை எளிமையாக்கி எல்லாவகையான மாணவர்களும் கற்றுக்கொள்ள வழிவகுத்தார். இவர் பல புதிய இராகங்களான யமன் கல்யாண், பூர்வி, பீலு, பகார் போன்ற இராகங்களை உருவாக்கியுள்ளார். அத்தோடு புதிய உருப்படி வகைகளான தரனா, துல்பான, கஜல்குவலி போன்ற உருப்படிகளையும் அறிமுகப்படுத்தியுள்ளார். இவர் ஜால், திரிதால், பாஸ்டோ போன்ற புதிய தாளங்களையும் அறிமுகப்படுத்தினார். இவர் சிறந்த பாடகராகவும் விளங்கினார். ஒரு முறை கோபால் நாயக் அலாவுதீன் கில்ஜி அரசசபையில் கச்சேரி செய்யும் போது

அமீர் குஸ்ரு மறைந்திருந்து கேட்டு கோபால் நாயக்கே பிரமிக்கும்படி அவர் பாடியதை திருப்பி பாடிக்காட்டியதாக கூறப்படுகின்றது. இவர் காலத்திலிருந்து பாடப்பட்டு வந்து இன்றும் பலரால் பாடப்பட்டு வருகின்ற பாணிக்கு (ஸ்ரைல்) துருபத் or துருபத் காஜகி என்று பெயர். இது தோம்தோ என்ற ஆலாபனையுடன் தொடங்கும். இவர் கி.பி.1325 ம் ஆண்டு இறைவனடி சேர்ந்தார்.

பாத்கண்டே

ஐரோப்பியர் இந்தியாவை ஆண்ட காலத்தில் ஹிந்துஸ்தானி இசை வளர்ச்சி குன்றியிருந்த காலகட்டத்தில் பாத்கண்டே பிறந்து ஹிந்துஸ்தானி சங்கீதத்திற்கு புத்துயிரளித்தார். இவர் பம்பாயில் கி.பி. 1860 ம் ஆண்டு ஆவணி மாதம் 13ம் திகதி பிறந்தார். இவரது தந்தையாராகிய நாராயணராவ் லிகிதராக கடமை புரிந்தார்.

பாத்கண்டே இவரது பெற்றோருக்கு 2ஆவது புதல்வராவார். இவரது தாயார் தெய்வ பக்தியுடைய மங்கையாவார். இவரது தாயார் தாலாட்டு பாடல்களையும், பஜனைப் பாடல்களையும் பாடுவதில் வல்லவர். இவரின் தந்தையார் ஏக்தார் எனும் வாத்தியத்தை வாசிப்பதில் ஆற்றல் பெற்றவர். இவரது தமையனாரும் 'தில்ரூபா' எனும் வாக்கியத்தை வாசிப்பதில் ஆற்றல் பெற்றவர். எனவே இசைச்சூழலிலே பிறந்து வளர்ந்த பாத்கண்டேயும் இயல்பாகவே இசைத்துறையில் புலமை பெற்று 10 வயதிலேயே புல்லாங்குழல் வாசிப்பதில் திறமை காட்டினார்.

இவரது புல்லாங்குழல் வாசிக்கும் திறமைக்கு பல பரிசில்கள் கிடைத்தன. இவர் 'ஹிபாலவதாஸ்' என்பவரிடமும் 'கோபாலகிரிபுவி' என்பவரிடமும் ஸிதார் வாத்தியம் வாசிக்க கற்றுக் கொண்டார். இவர் இசையுலகில் பிரபல்யம் பெற்றிருந்த போதிலும் கல்வியிலும் தம் திறமையை வெளிப்படுத்தினார். 1887ம் ஆண்டு வழக்கறிஞர் பரீட்சையில் சித்தியெய்தி குறுகிய காலத்திலேயே தன் மனைவியையும், குழந்தைகளையும் இழந்து இசைக்கே தன் வாழ்வை அர்ப்பணித்தார். எஞ்சிய தன்வாழ் நாட்களை பம்பாயில் 'பயான் உதேயாக்' மாண்டலின் இசைச்சங்கத்தில் சேர்ந்து இசையுலகிலேயே கழித்தார்.

செயல்முறை, அறிமுறை இரண்டிலும் தன் வாழ்நாட்களை கழித்து திறமை பெற்ற பாத்கண்டே 300 துருபத்களையும் 150 கஜால்களையும் கற்றிருந்தார். ஹிந்துஸ்தானி சங்கீதத்தை முறையானதொரு பத்ததிக்கு கொண்டு வரும் பொருட்டு இந்தியா எங்கும் பயணம் செய்து பல இசை விற்பன்னர்களைச் சந்தித்து தம் அறிவை மேலும் பெருக்கிக் கொண்டார். தென்னிந்தியாவிலும், சென்னை, தஞ்சாவூர், மதுரை, திருவனந்தபுரம் முதலான இடங்களுக்குச் சென்று கர்நாடக இசைபற்றிக் கற்றிருந்தார். 72 மேளகர்த்தா போன்ற சங்கீத விடயங்களை இவர் கற்றார். இவர் பல இலட்சண கீதங்களையும் இயற்றினார். ஏறக்குறைய எல்லா இராகங்களிலும் அமைந்துள்ள உருப்படிகளைக் கொண்டே 'ஸ்வரமாலிகா' என்னும் நூலை வெளியிட்டுள்ளார்.

1910ம் ஆண்டில் ஹிந்துஸ்தானிய இராகங்களைப் பற்றிய விளக்கங்களைக் கூறும் நூல்களை வெளியிட்டுள்ளார். 10 தாட் முறையையும் பிலாவலை அடிப்படை இராகமாகவும் அறிமுகப்படுத்தியவர் இவர். லட்சண சங்கிரக எனும் நூலை வெளியிட்டார். இதில் இராகங்களை விளக்கும் இலட்சண கீதங்கள் காணப்படுகிறன. மாணவர்களுக்குகந்தது. ஞாபகமாக இராக இயல்பை அறிய, நினைவில் வைத்துக்கொள்ள உதவுகிறது. 150 இராகங்களை விபரமாக விளக்கும் 'ஹிந்து ஸ்தானிய சங்கீத பத்ததி' என்னும் நூலை 'மராத்தி' மொழியில் வெளியிட்டுள்ளார். இந்நூல் ஹிந்துஸ்தானி சங்கீதத்தில் வழங்கும் 150 இராகங்கள் பற்றி விபரமாக விளக்கப்பட்டு உள்ளது.

ஜீ.சுஜீதா
இசைத்துறை
3ம் வருடம்

# SVIAS, Eastern University, Sri lanka

*2005/2006 Batch*





# இலங்கையில் இசை வளர்ச்சி

இசைக்கு வசமாகா இதயமேது'

என்ற கூற்றுக்கிணங்க 'வீணைக் கொடியோன்' என சிறப்பாக அழைக்கப்படும் இராவணனின் காலத்தையே இலங்கையில் இசைவளர்ச்சிக்கு வித்திட்ட காலமாக கொள்ளலாம். அக் காலந்தொட்டே இலங்கைக்கும் இசைக்கும் சிறந்ததொரு தொடர்புண்டு. சாமகானமே இசைக்கு முன்னோடி என்பர். இதற்கு எமது தேவார திருமுறைகள் சான்று பகர்கின்றன. இவற்றை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும் போது இதிகாச காலந் தொட்டே இலங்கையின் இசைப்பாரம்பரியம் வளர்ந்தது எனலாம். இலங்கையின் இசைப்பாரம்பரியத்தை உயர் பாரம்பரிய இசை, உப பாரம்பரிய இசை என இருவகைப்படுத்தலாம். இந்தியாவில் காலத்துக்கு காலம் இசையில் ஏற்பட்ட மாற்றங்கள் இலங்கையிலும் பிரதிபலித்தன. இங்கு பெரும் கோயில்களையும், வசதி படைத்தோரையும் சார்ந்தே உப பாரம்பரிய இசையும் வளர்ந்துள்ளது. கோவில்கள் தவிர்ந்த வாழ்க்கை நிகழ்வுகளுடனும் இசை பெரிதும் வளர்ந்து வந்துள்ளது என்று கூறலாம்.

இலங்கை வரலாற்றிலே நாயன்மார்கள் திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம், போன்ற சிவதலங்கள் மீது பாடல்களை பாடியுள்ளனர். இது பல்லவர் காலத்தில் இடம்பெற்றாலும் அதன் பின்வந்த சோழர் காலத்திலும் இந்தியாவில் திருமுறைகள் எவ்வாறு ஓதப்பட்டனவோ அது போலவே இலங்கையிலும் தேவாரங்கள் பண்முறைப்படி ஓதப்பட்டிருக்கின்றன. இலங்கையின் வடபகுதியை ஆரிய சக்கரவர்த்திகள் ஆண்ட போது இலங்கையில் சிறப்பானதொரு இசைப்பாரம்பரியம் காணப்பட்டது. அதே போல் ஒல்லாந்தர், போர்த்துக்கேயர் காலத்தில் தங்களின் மதத்தைப் பரப்ப நாடகப்பாடல்களை தெரிவு செய்தனர். இக்காலத்தில் சைவசமயத்தைப் பாதுகாக்க பாடல்கள் பாடப்பட்டன. ஆங்கிலேயரின் வருகையின் முன் தென்னிந்தியாவின் செல்வாக்கினால் தமிழ் மக்கள் மத்தியில் செழித்து வளர்ந்த ஒரு நாடக வடிவமே கூத்தானது. பின்னர் இவை கிராமிய மக்களிடம் சென்றமையால் தமது பண்டைய பண்பில் இருந்து மாறுபட்டு புதிய வடிவத்தை பெற்றதை நாம் இன்று அறியலாம். 18ம் நூற்றாண்டின் இறுதியில் வாணிபத்தின் பொருட்டு இலங்கைக்கு வந்த வேளாளர் எனும் பரம்பரையினரால் கோயில்கள் கட்டப்பட்டன. இக்கோயில்களின் பூசை நேரங்களில் மங்கள வாத்தியங்களை இசைக்க இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்டு யாழ்ப்பாணத்தின் மாவிட்டபுரம், அளவெட்டி, இணுவில், கரவெட்டி, வல்வெட்டித்துறை ஆகிய பிரதேசங்களில் குடியமர்த்தப்பட்டனர். இவர்களே இலங்கையின் கர்நாடக இசைக்கு வித்திட்டவர்கள். அதே போல கோயில் விழாக்களின் போது இந்தியாவிலிருந்து இசை வேளாளர்களை வரவழைத்து இசைக்கச்சேரிகளை நடத்தினர். இவ்வாறு வருபவர்களைப் பார்த்து இசை ஆர்வலர்கள் அவர்களிடமும், இந்தியா சென்று இந்தியாவிலும் இசையைப் பயின்றனர். இதனால் இசை கற்பவர்களின் ஆர்வம் பெருகியமை இலங்கையில் இசையை வளர்க்கத் தக்கதொரு சந்தர்ப்பமாக அமைந்தது எனலாம்.

19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இலங்கையின் முத்து என போற்றப்படும் சுவாமி விபுலானந்தர் காரைதீவு எனும் இடத்தில் பிறந்து இந்தியா சென்று பேராசிரியராக இருந்த போது இசைப் பேரறிஞராகிய க. பொன்னையாப்பிள்ளை அவர்களின் உதவியோடு இசைத்தமிழினை ஆராய்ந்து 14 ஆண்டுகால பயனாக யாழ் நூலை வெளியிட்டார். இவ்வாராய்ச்சி நூல் இலங்கை மக்களுக்கே உரித்தான பொக்கிஷமாக காணப்படுகிறது. இது இசைத்தமிழ் ஆய்வில் ஒரு திருப்பு முனையாக காணப்பட்டது. இந்நூலை தொடர்ந்து இலங்கையில் பல இசையிலக்கண நூல்களும், பாமாலைகளும் அறிஞர் பெருமக்களால் படைக்கப்பட்டன. இலங்கையில் நாதஸ்வரமும், தவிலும் மிக சிறந்த நிலையை அடைந்தது. தவில் தட்சிணாமூர்த்தி என்பவர் இலங்கையரால் மட்டுமல்லாமல் இந்தியராலும் பாராட்டுப் பெற்றவர். இவரின் உதவியால் இன்று பல நாதஸ்வர கலைஞர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். 1920 களில் நாடகங்களோடு சேர்ந்த இசைமரபு வளர்ந்தது. பல இசைக்கலைஞர்கள் தங்கள் சொந்தக் குரல்களில் பாடி நடித்தனர். இப்பாடல்கள் பாமர மக்களின் மனதிலும் பதியும் வகையில் காணப்பட்டன. ஒரு குறிப்பிட்ட சமூகத்தினரிடையே காணப்பட்ட இசை நடுத்தர மக்களிடமும் பரவலாயிற்று. 'கலைப்புலவர் நவரத்தினத்தின் மனைவி மகேஸ்வரி' இந்திய இசை சம்பந்தமான நூலையும் எழுதினார். இந்திய இசைக் கலைஞர்கள் பலர் இந்தியாவிலிருந்து வந்து இசைக் கச்சேரிகள் நடத்தினர். இதனால் மத்தியதர வர்க்கத்தினரிடையேயும் இசை பரவலாயிற்று.

இலங்கைத் தமிழ் மக்கள் கர்நாடக சங்கீதம் மட்டுமல்லாமல் நாட்டுக்கூத்துக் கலையையும் வளர்த்தனர். காத்தவராயன் கூத்து, வடமோடி கூத்து, தென்மோடிக் கூத்து, வசந்தன் கூத்து போன்றவை மட்டக்களப்பிலும் அதே போன்று யாழ்ப்பாணத்திலும் மேற்கூறப்பட்ட கூத்துக்கள் வளர்க்கப்பட்டன. அதே போல் மலையக மக்களின் வாழ்வோடு பின்னிப்பிணைந்த அர்ச்சுனன்தபசு, காமன்கூத்து, அரிச்சந்திரன் கூத்து என்பன ஆடப்பட்டதோடு தற்காலத்திலும் அது வளர்ச்சி பெற்று வருகிறது. அத்தோடு மாரியம்மன் பாடல்கள், காவடி சிந்து, கும்மிப்பாடல், கோலாட்டபாடல், அம்பாபாடல்(மன்னார் பிரதேசம்) மெல்லிசைப்பாடல் (இவை நிலவு, மீன், நீர், நாடு போன்றவற்றைப் பொருளாகக் கொண்டும் பாடல்கள் பாடப்பட்டுள்ளன.) பொப்பிசைப் பாடல்கள், எழுச்சிப்பாடல்கள் என்பனவும் எழுந்தன.

திரு.MS.பரம், திரு. குமாரசுவாமி போன்றோரின் முயற்சியால் 1931ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட வடஇலங்கை சங்கீத சபை இலங்கையின் இசைவளர்ச்சியில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது. பேராசிரியரின் பாடவிதானத்தோடு இவ் சங்கீத சபை ஆரம்பமானது. குறிப்பிட்ட சமூகத்தாரிடம் காணப்பட்ட இசை அனைவரையும் சென்றடைந்தது. நிறுவன ரீதியாக இசைபயிலும் முறை ஏற்பட்டது. இச்சபை வாய்ப்பாட்டு வயலின், வீணை, புல்லாங்குழல், பரதம், நாடகமும் அரங்கியலும் பண்ணிசை என்னும் துறைகளில் தரம் 1 முதல் 6 வரை பரீட்சைகளை நடாத்தி வருகின்றது. 1971ம் ஆண்டில் இருந்து 6ம் தரம் படித்தவர்களுக்கு ஆசிரியர் தராதரம் கொடுத்ததோடு அவர்களுக்கான ஆற்றுகைப் பரீட்சையும் நடத்தி 'கலாவித்தகர்' எனும் பட்டமும் கொடுத்து வருகிறமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். 1972ம் ஆண்டு இலங்கை அ ர சு



பாடசாலை பாடவிதானத்தில் சங்கீதத்தை ஒரு பாடமாக சேர்த்துக் கொண்டது. அழகியல் பாடத்தில் இசை ஒரு பாடமாக சேர்க்கப்பட்டதன் பின்னர் இசை பயில்பவரின் எண்ணிக்கை அதிகரித்தது. இசைக்கழகங்களும், பயிற்றுனர்களும் பெருகினர். யாழ். ரசிகரஞ்சனாசபா, அகில இலங்கை இசை ஆசிரியர் சங்கம், இசைப்பேரவை, இசைக்கலைஞர்சம்மேளனம், சங்கீதவித்வ சபை, அண்ணாமலை இசைத்தமிழ் மன்றம், அளவெட்டி இசைகலை மன்றம், முத்தமிழ் மன்றம், திருகோணமலை தட்சணகான சபா, மட்டக்களப்பு சங்கீத சபா, கண்டி நுண்கலை மன்றம், கம்பன் கழகம் போன்ற இசைமன்றங்கள் இசை வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றின. கம்பன் கழகம் ஒவ்வொரு வருடமும் இந்திய இசைக் கலைஞர்களையும், இலங்கை இசைக் கலைஞர்களையும் வரவழைத்து கம்பன் விழா எனும் பாரிய இசை வேள்வியை நடத்தி வருகின்றது. இது இசை கற்கும் மாணவர்களையும், இசை ஆர்வலர்களையும் இசையின் பால் ஈர்க்கும் ஒரு விடயமாக காணப்படுகிறது எனலாம். 20ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இராமநாதன் நுண்கலை கல்லூரியின் ஒரு பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட இராமநாதன் அக்கடமியில் இந்திய இசை விற்பனர்களால் இசை போதிக்கப்பட்டு சித்தியடைந்த மாணவர்களுக்கு ' சங்கீத ரத்தினம்' எனும் பட்டம் வழங்கப்பட்டது. 1974ம் ஆண்டு இந்நிறுவனம் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டு சங்கீத டிப்ளோமா பட்டம் பெற்றவர்களுக்கு 'இசைக்கலைமணி' என்ற பட்டத்தை வழங்கினர். 1992ம் ஆண்டு பட்டதாரி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டு 'இசைமாணி' பட்டமும் வழங்கப்பட்டு வருகிறது. இதே போலவே 1981ம் ஆண்டு திரு. செல்லையா இராஜதுரை என்பவரால் மட்டக்களப்பு கல்லடியில் விபுலானந்தரின் பெயரில் 'விபுலானந்த இசை நடனக்கல்லூரி' ஆக்கப்பட்டது. இங்கு டிப்ளோமா பயிற்சி நெறியை முடித்த மாணவர்களுக்கு 'இசைக்கலைமாமணி' பட்டம் வழங்கப்பட்டது. 2005ம் ஆண்டு இக்கல்லூரி கிழக்குப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டு இன்று 'நுண்கலைமாணி' எனும் பட்டம் வழங்கப்பட்டு வருகின்றது. அதே போல தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் கீழ் இயங்கும் பெல்வூட் இசை நடனக் கல்லூரியில் மாணவர்கள் இசை பயில்கின்றனர். அத்தோடு ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரியிலும், மட்டக்களப்பு கல்வியியற் கல்லூரியிலும், யாழ் கல்வியியற் கல்லூரியிலும் ·இசை பயிற்சி பெறுபவர்கள் உள்ளனர். அதே போல் பாடசாலை மாணவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு தமிழ்த்தினப் போட்டிகள், பண்ணிசைப் போட்டிகள் என்பன போதிக்கப்படுகின்றன. இலங்கையில் பிறந்து இந்தியா சென்று பயிற்சிகளைப் பெற்ற பலர் இலங்கையின் இசைவளர்ச்சிக்கு பங்காற்றியுள்ளனர். இசைப்புலவர் N.சண்முகரத்தினம், புத்துவாட்டி S.N. சோமசுந்தரப் புலவர், செல்வி. இராஜேஸ்வரி பாலசுப்ரமணியம் போன்றோர் குறிப்பிடத்தக்கவர். இன்று பல இசை நூல்கள் வெளிவந்த வண்ணம் உள்ளன. திரு S.N. நடராஜஐயர் அறிமுறை விடயங்கள் அடங்கிய பல ஆய்வுகளை மேற் கொண்டு இசைஅகராதி பாகம் II வெளியிட்டார். இலங்கையில் தற்காலத்தில் இசைத்துறையில் பலர் Mphil, MA போன்ற பட்டங்களை பெற்றனர். இணுவில் பிரம்ம ஸ்ரீ வீரமணி ஐயர் பல பாடல்களை இயற்றியும் இசையமைத்தும் உள்ளார். இவரின் பாடல்கள் இந்தியாவிலும் இசைக்கலைஞர்களினாலும் கச்சேரிகளில் பாடப்படுகின்றது குறிப்பிடத்தக்கது.

1970 களில் வந்த திரு. ராஜசேகரன் சைவ பரிபாலன சபை சார்பில் மாணவர்களுக்கு 4 வருட பயிற்சியை அளித்து பண்ணிசைமணி என்ற பட்டத்தை வழங்கினார். பேராசிரியர் சு. வித்தியானந்தனின் முயற்சியால் பல நாட்டுப்பாடல்களும் நூலுருவாக்கப்பட்டன. பேராசிரியர் சி. மௌனகுரு, திரு. மெட்ராஸ் மெயில் போன்றோர் நாட்டுக்கூத்துக்கு புதுவடிவம் அளித்தனர். 20ம் நூற்றாண்டுகளில் இலங்கைக்கே சிறப்பான மெல்லிசை வளர்ச்சியில் பெரும் பங்காற்றியது அண்மையில் மெல்லிசைப்பாடல்கள் அடங்கிய ஒலிப்பேழைகளும் வெளியிடப்பட்டன. இப்பாடல்களில் ஆரம்பகால வளர்ச்சிக்கு முத்துசாமி (இசையமைப்பாளர்) S.K. பரராஜசிங்கம், குலசீலநாதன், முத்தழகு, கலாவதி போன்றோர் பணியாற்றினர். சிங்களவரது பைலா இசையை தழுவி பொப்பிசைப்பாடல்கள் 20ம் நூற்றாண்டில் பாடப்பட்டு வருகின்றன. A.E. மனோகரன் நித்திகனகரட்ணம், பரமேஸ்கோணேஸ் போன்றோர் இத்துறையில் குறிப்பிடத்தக்கவர்கள். இலங்கை பொப்பிசை தென்னிந்தியாவிலும் பிரபல்யம் பெற்றது. நல்ல கருத்துக்கள் பொப் பாடல்கள் வாயிலாக சாதாரண மக்களிடையே போய்ச் சேர்ந்தன என்று கூறலாம்.

இவ்வாறு ஆரம்பகாலம் முதல் இலங்கையைப் பொறுத்தவரையில் இசைக்கலையின் பொற்காலமாக 20ம் நூற்றாண்டைக் குறிப்பிடலாம். இலங்கைக் கலைஞர்கள் பலர் இன்று உலக நாடுகள் பலவற்றிற்கும் சென்று இசைக்கச்சேரிகள் செய்கின்றனர். இதன் மூலம் இலங்கையின் இசைவளம் உலகெலாம் பேசப்படும் உன்னத நிலை உருவாகியுள்ளது.

*சிந்துஜா*
*வசந்தகுமாரன்*
*இசைத்துறை*
*3ம் வருடம்*

# சுமை

பொறுமையை இழந்த
பூமித்தாய்
கொதிக்கிறாள் அலையாய்
கொதிப்பதன் விளைவுகளை
அனுபவிக்கின்றான் மானிடன்
பனிக்கட்டிகள் உருக
கடல் நீர்கள் அதிகரிக்க
நன்நிலங்கள் உவராக
வசிக்க இடங்கள் இன்றி
அலைகின்றான் மானிடன்

நீர் நிலைகள் வற்றி
பாலைவனங்கள் பெருகி
வெப்பக்காற்றை சுவாசித்து
அழிகின்றன உயிரினங்கள்
அதிசயிக்கின்றான் மானிடன்
நோயாளர் தொகையில்
வதைக்கின்றான் அன்னையை
பல இன்னல்கள் கொடுத்து
சுமக்கின்றான் சுமைகளை
தாம் செய்த செயல்களிற்கு
பூகோள வெப்பத்தால்

தம்பித்துரை சோபனா
3ம் வருடம்

உலகெங்கிலும் எல்லோராலும் இசை ஏன் விரும்பப்படுகின்றது என்ற கேள்வி பல ஆய்வுகளுக்கு வழிவிட்டது. ஒருவருக்கு எந்த வகை இசையும் பிடிக்காமல் கூடப் போகலாம். ஆனால் நிச்சயம் அவருடைய மூளை அவருடைய காதில் விழும் இசையை அடையாளம் காணவும், வகைப்படுத்தவும் செய்யும். அவரே அறியாமல் அவரது மூளை இதைச் செய்கிறது. ஒருவருக்கு மெல்லிசை, திரையிசை/பாப், கர்நாடக, ஹிந்துஸ்தானி, கிராமிய, மேற்கத்திய, பாட்டு, குழல், தந்தி என்று இசை வகைகளில் எது பிடிக்கிறது என்பதற்கு கூட ஒருவருடைய மூளைதான் காரணம். ஒருவரின் இசை ரசனையைத் தீர்மானிப்பது மூளையேயாகும்.

அண்மைக்காலமாக மூளையைப் பற்றி அதிக மனித குலம் அதன் செயற்பாடுகளை ஆராய்ந்து இசையை மூளை எப்படி ஏற்கின்றது என்று கண்டு அறிந்து ள்ளது. அதிர்வு களுடனான ஒலியே இசையாகிறது. இசைகருவிகளிலிருந்தோ, குரல்களிலிருந்தோ பிறக்கலாம். அது காற்றின் அமுக்கத்தில் ஏற்படும்




மாற்றங்களின் வழி காதுகளை அடைகிறது. இசைக்கு லயம், சுருதி, மெலடி(இராகம்), கமகம் போன்ற குணங்கள் இருப்பதை நாம் அறிவோம். ஓசை அலைகளை உட்காது வாங்கி பின் அவற்றை அசைவுகளாக்கி காதினுள் அனுப்புகிறது. எட்டாவது க்ரேனியல் நரம்பில் அவை மின் சமிக்ஞைகளாக்கப்படுகின்றன. பின் அவை மூளைக்கு அனுப்பப்படுகின்றன. ஓசைச்செய்திகள் முதலில் தாலமசை அடைந்து பின் அவை மூளையின் இரு புறமும் இருக்கும் டெம்பொரல் லோப்களை அடையும். டெம்பொரல் லோப்பகுதியில் ஒருவருக்கு காயம் ஏற்பட்டால் இசைசம்பந்தமான எதுவுமே செய்ய முடியாது. அவர்களால் இராகங்களை அடையாளம் காணமுடியாது. இதற்கு பெயர் அம்யூசியா என்று அழைக்கப்படுகிறது.

சில ஆய்வாளர்கள் வலது மூளைதான் இசையை அறிகிறது என்றும் சிலர் இடது மூளையும் இச்செயலை செய்கிறது என்றும் சொல்லுகிறார்கள். ஆனால் பொதுவாக இரு தரப்பினரும் இசையைக் கேட்பதற்கு நினைவாற்றல், கற்றல், உணர்வு ஆகியவை தேவை என ஒத்துக்கொள்கின்றனர். இசை அனுபவத்திற்கு மூளையின் எல்லா பாகங்களும் இன்றியமையாத தாகின்றன. பேச்சுக்கு, பார்வைக்கு என்று தனித்தனிப் பகுதிகள் இருப்பது போன்று இசைக்கென்று மூளையில் தனியான பகுதி இல்லை என்று அறிந்திருக்கிறார்கள். இசை மூளையின் பல பகுதிகளிலும் கிரகிக்கப்படுகிறது. தனிநபரின் இசை, ஞானம்/புலமை மற்றும் அனுபவத்தைப் பொறுத்தே அனைத்துப் பகுதிகளில் தீவிரமும், ஆளுமையும் அமைகிறது. 'இதயத்தின் மொழிகள் புரிந்து விடில் மனிதருக்கு மொழியே தேவையில்லை' என்பது பொது மொழி. முன் பகுதி மூளையில் தான் மொழியும், இசையும் சேர்ந்து செயல்படுகிறது. மற்ற மூளைப் பகுதிகள் அதன் நீட்சியாவே இசை தொடர்பான செயல்பாடுகளை செய்கின்றது.

காது ஒலிகளை எப்படி ஏற்கின்றது என்பதை அறியும் போது தான் மூளை இசையை எப்படி கிரகிக்கின்றது என்று நாம் அறிய முடிகின்றது. இசை ஸ்வரங்களை உட்காது வாங்கும் போது சற்று வேறுபடும் ஒவ்வொரு ஸ்வரத்திற்கும் இடையே உள்ள ஒற்றுமை, வேற்றுமையை ஆராய்ந்து அறிந்து ஒலியாக இல்லாமல் இசையாக அறியும். ஒருவர் மேற்கொள்ளும் இசைப்பயிற்சி அவரவர்களின் இசை கேட்கும் செல்களின் எண்ணிக்கையை அதிகரிக்கின்றது. அதனால்தான்

வருடக்கணக்கில் ஒவ்வொரு நாளும் பலமணி நேரம் இசைப்பயிற்சி செய்த இசைஞர் இசைச் சமிக்கையை மிக துல்லியமாகவும், நுணுக்கமாகவும் கேட்க, ரசிக்க, திருத்த முடிகிறது. இசைக்கருவிகளில் மணிக்கணக்கில் சுருதி சேர்க்கும் இசைஞர்கள் ஏன் லேசில் திருப்தியடைவதில்லை என்று புரிகிறதா? இவர்களின் மூளையில் மற்ற பகுதிகளின் செயல்பாடுகளிலும் கூட முன்னேற்றம் காண்பிக்கின்றனர். பியானோ இசை கேட்கும் ஒரு இசைஞரின் மூளையின் கேட்கும் பகுதி மற்றவர்களுடையதை விட 25% அதிகமாகச் செயல்படுகிறது. இவை இசை ஒலிகளுக்கு மட்டுமே பொருந்தும்.

இசைக்கருவிகள் வாசிக்கும் இசைஞர்கள் விரல்களுக்கு அதிக வேலை கொடுக்கிறார்கள். இது குறித்து 1995ல் ஜேர்மனியின் தாமஸ் எல்பர்ட் என்பவர் கூறிவரும் கருத்தானது வயலின் வாசிப்பவர்கள் இடது கையில் கட்டை விரல் தவிர மற்ற நான்கு விரல்களும் வலக்கையின் விரல்களை விட சற்றும் பெரிதாக இருக்கும். ஏனெனில் அந்த நான்கு விரல்களும் மிக நுட்பமான பலவிதமான அசைவுகளை வாசிக்கின்றன. வயலின் வாசிக்காதவர்களின் விரல்களில் இவ்வித்தியாசம் இருக்காது. கீபோர்ட் இசைப்பவர் 2 கைகளையும் அதிகம் உபயோகிக்கிறார்கள் மூளையின் பகுதிகளை இணைக்கும் தசைநார்கள் இசைஞர்களின் மூளையில் அதிகம். ஒத்திசைந்த செயல்திறன் மற்றவர்களை விட இவர்களுக்கு அதிக சிறப்பாய் இருக்கும்.



ஒரு பெண் தலையில் அடிபட்டு குணமடைந்ததும் சாதாரண நினைவோடும் மற்றும் புத்தியோடும்தான் இருந்தாள். ஆனால் முன்பு பல முறை கேட்ட இசையை அவளால் அடையாளம் காண முடியாமல் போனது. ஆச்சரியம் என்ன வென்றால் அதே இசை அவளுள் முன்பு ஏற்படுத்திய உணர்வை ஏற்படுத்தியது. அவளால் அவ்வுண்மையைச் சொல்ல முடிந்தது. மூளையில் ஏற்பட்ட மாற்றத்தால் இந்த மெலடி என்று கணிக்க முடியாதபோதும் முன்னர் ஏற்படுத்திய உணர்வை ஏற்படுத்தத் தவறவில்லை. பல்வேறு வியாதிகளையும் தொடர்ந்து சில இராகங்கள் கேட்பதால் குணப்படுத்தவும், கட்டுப்படுத்தவும் முடியும். சேதமடைந்த மூளையை இசையால் சீர் செய்யலாம் என்று சமீபத்திய கண்டு பிடிப்புகள் நிரூபணம் செய்கின்றது.

மூளையின் செயற்பாடுகளை இன்னும் அதிகம் கண்டறியும் போது இசை மனித குலத்திற்கு இன்னும் பல்வேறு விதத்தில் பயன்படப்போகின்றது. எதிர்காலத்தில் உலகில் நிலவும் எதிர்மறை எண்ணங்களையும், செயல்களையும் கூட இசை கொண்டு அகற்றவும், கட்டுப்படுத்தவும் முடியப்போகிறது. இசையாலான உலகை இசையால் இயக்கும் நாள் வெகுதொலைவில் இல்லை என்று கூறலாம்.

வ.றஜிதா
இசைத்துறை
2ம் வருடம்

# SVIAS, Eastern University, Sri lanka

## *2006/2007 Batch*





# உடல் ஆரோக்கியத்தில் இசையின் முக்கியத்துவம்

ஆயகலைகள் அறுபத்து நான்கு ஆகும். இக்கலையை நுண்கலைகள் என்றும் கூறலாம். மனிதனை மனிதனாக்கும் கலையே இசைக்கலையாகும். உலகம் எப்போது தோன்றுகின்றதோ அப்போதே கலைகளும் தோன்றிவிட்டன. உலகிலே மக்கள் யாவரும் இன்புற்று வாழவும் வாழ்வு பண்பாக அமையவும் கலைகள் பெரிதும் முக்கியத்துவம் வாய்ந்தது எனலாம்.

இசையானது 'ஓம்' எனும் பிரதிபலிப்பாகவே அமைகின்றது. சங்கீதத்திற்கு அடிப்படை ஓம்காரம் ஆகும். இதன் தொடர்பினாலும் இசையினாலும் வெளிப்பட்டு வந்த சப்தஸ்வரங்கள் கலைகள் ஆனது. உலகிலுள்ள ஜீவராசிகளைக் குறிப்பாக மக்களை இறைவனுடன் இணைவதற்கு முதல் படி இசைவுபட வாழ்தல், இசைந்து வாழ்தல் ஆகிய தன்மையை உருவாக்கி ஆன்மா ஈடேற்றத்தை தருவதாகும்.

பொதுவாக இசைக்கு மயங்காத உயிரினங்கள் இல்லை எனலாம். தாவரங்களும் இசையினால் நன்கு வளர்கின்றன. இசையினால் பிணிகள், கவலைகள் ஒழிகின்றன. விஷம் கக்கும் பாம்பினையும் மதம் கொண்ட யானையையும் இசையினால் அடக்க முடியும். இசை செவிக்கு இன்பத்தை ஊட்டுவது மட்டுமன்றி உள்ளத்தையும் பேரின்பத்தில் திளைக்கவைக்கும் வல்லமை கொண்டது.

'என்ன ஒரே கூச்சலாகக் கிடக்கு? ரேடியோவை நிறுத்துங்கோ' என்று பாட்டிமார் கூறுவர். மியூசிக் தெரியாத கிழடுகள் என்று கூறி இளைஞர்கள் வானொலியை பூட்டிக்கொள்வதும் நாம் நடைமுறை வாழ்க்கையில் காணக்கூடிய ஒன்றாகும். ஆனால் அதே வானொலியில் 'தியாகராஜ பாகவதரின் ஷாமளா..' பாட்டைப் போட்டால் அடடா! என்ன சாரீரம் என்று பேசிய படியே அதிலே திளைத்து விடுவார்கள். மொத்தத்தில் எவருமே எதிராளி கிடையாது. இசையை ரசிப்பதில்தான் தலைமுறை இடைவெளி இசைக்கும் மனிதனுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு காணப்படுகிறது. இசையை சர்வதேச மொழி, தேவபாஷை என்று தாராளமாக அழைப்பர். விலங்குகளை மட்டுமன்றி தாவரங்களையும் ஈர்க்கும் சக்தி இசைக்கு உண்டு.


மன அழுத்தத்தை நீக்குவதற்கு ஆனந்த பைரவி இராகத்தினால் முடியும். அதே போன்று மனநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சங்கராபரணம் சிறந்தது என குன்னக்குடி வைத்தியநாதன் கூறுகின்றார். உடலின் 72 ஆயிரம் நரம்புகளையும் 14 முக்கியமான நாடிகளையும் சாந்தமடையச் செய்யும் வல்லமை இசைக்குண்டு என்கிறார்கள். மனிதனை வசியப்படுத்தும் சக்தி கலைக்கு இருப்பதால்தான் கலையைப் பயன்படுத்தி பல நோயை குணமாக்கலாம் என்கிறார்கள் உளவியல் மருத்துவர்கள்.

இசைக்கருவிகள் மூலமாகவும் மனித வாழ்வில் பல உடல், உள ரீதியான முன்னேற்றத்தை ஏற்படுத்த முடியும் என்பது அனுபவ ரீதியான முடிவாகும். சில ராகங்களின் மூலமாக நோயை குணப்படுத்தலாம்.

உதாரணமாக :- ஸாரங்க இராகம் பித்த சம்பந்தமான நோய், நீலாம்பரிராகம் தூக்கம் சம்பந்தமானது, பிலகரி, பூபாளம் மனநோய், கரகப்பிரியா கவலை, இரத்த அழுத்தம், மிருதங்கம் போன்ற தோற்கருவி நரம்பு சம்பந்தமான நோயை நீக்கி உடலுக்கு ஞாபக சக்தி, உற்சாகம் போன்ற நல்லுணர்வுகளை தரவல்லவனவாகும். எனவே இசையானது உடல், உள ரீதியான முன்னேற்றங்கள் அளிப்பதில் பயனுடையதாகின்றது.

நுண்கலைகளிலே ஒருவனுக்கு எது பிடித்தமான இசையாகஇருக்கிறதோ அதை அவன் இரசிக்கும் போது அது மனப்புண்ணுக்கு மருந்தாக அமைகின்றது. சிறு வயதிலே பிள்ளைகளுக்கு கலைகளின் ஞானத்தை ஏற்படுத்திவிட வேண்டும்.

ஆகவே பிள்ளைகளுக்கு கலைகளில் (இசை) ஈடுபாடு சிறக்க வழிசமையுங்கள். தேக ஆரோக்கியம், மனஎழுச்சி போன்ற பலவற்றிற்கு இசை இன்றியமையாதது. ஒருவரின் உடநலத்தைப் பாதுகாப்பதற்கு இசை ஒரு துணையாக உள்ளது என்பது எனது கருத்தாகும். இந்த வகையில் உடல் ஆரோக்கியத்தில் இசை பெரும் முக்கியத்துவம் பெறுகின்றது எனலாம்.



பூ.லோஜினி
இசைத்துறை
3ம் வருடம்



# முகமூடி நடனங்கள்

**யாழ்ப்பாணத்துக்** கோயில்களில் மானம்பூத்திருவிழா, சூரன்போர் முதலியவற்றில் முகமூடி நடனங்களை இன்றும் காணக்கூடியதாக உள்ளது. முகமூடி நடனங்கள் பொதுவாக பல்வேறு உளவியற்பரிமாணங்களை உள்ளடக்கியவையாக காணப்படுகின்றன. சமூகப்பரிமாணங்கள் மற்றும் தெய்வீகப் பரிமாணங்கள் என்றவாறு இந்நடனங்களின் உள்ளடக்கத்தினை பகுப்பாய்வு செய்யலாம்.

முகமூடிகள்

| | | |
|---|---|---|
| பறவை முகமூடி | - | கருடன், கிளி |
| விலங்கு முகமூடி | - | அனுமார், நந்தி, குதிரை |
| மனித முகமூடி | - | கிழவர், கிழவி, கோணங்கி, பிச்சைமுகம், பரதேசிமுகம் |
| பாம்பு முகமூடி | - | நாக முகமூடி |

இணுவில் சிவகாமியம்மை வேட்டைத்திருவிழாவில் இவ்வகை முகமூடிகளையும் அவை ஒவ்வொன்றுக்குமுரிய தனித்தவமான ஆட்டங்களையும், பாடல்களையும் மிக அண்மைக்காலம் வரை கண்டுகொள்ளக் கூடியதாக இருந்தது.

ஆழ்ந்து அமுங்கிய ஆழ்மன உணர்வுகளை வெளியிடல், விலங்கின் உணர்ச்சிகளை வெளிப்படுத்துதல், நாணமின்றி அசைவுகளையும், ஆடல்களையும் வெளிப்படுத்துதல், மனவெழுச்சிகளை கட்டுப்படுத்தி புடமிடாது வெளிப்படையாக வெளிப்படுத்துதல். உணர்ச்சிகளின் உச்ச நிலைக்கு அல்லது எல்லைகளுக்கு போதல் முதலானவை முகமூடி நடனங்களிலே முன்னெடுக்கப்படுகின்றன.

முகமூடி நடனங்களிலே காணப்படும் சமூகவியற்பரிமாணம், உளவியற் பரிமாணம் முதலியவற்றை நோக்கும் பொழுது ஆடுபவரை இனங்காண முடியாப்பண்பு (Impersonation) இந்நடனத்திலே காணப்படுவது இந்நடனத்தின் தனித்துவமாக உள்ளது. அதாவது யார் ஆடுகின்றார் என்று சூழவுள்ளோரால் அறியப்படாத நிலையில் எழும் கட்டவிழ்ப்பு நடனங்களாக இவை அமைகின்றன.

இந்நடனத்தில் முழுக்கிராம மக்களும் கலந்து கொண்டால் முகமூடிக்கலையாக்கத்தில் கிராமத்துக்கைவினைஞர் ஒன்றுபட்டு செயற்பட்ட பண்பையும் காணலாம். மரத்திலான முகமூடிகளை மரவேலை செய்தோர் மேற்கொள்வர் நூற்றல் நெய்தல் தொழிலில் ஈடுபட்டோர் ஒவ்வொரு முகமூடிக்கும் பொருத்தமான ஆடைகளை வழங்குவர். கிராமத்து அண்ணாவிமார் ஒவ்வொரு முகமூடிக்கும் உரிய ஆட்டங்களையும் வடிவமைத்துக் கொடுப்பார். அவற்றுக்குப் பொருத்தமான பாடல்களை புலவர்கள் வழங்குவர்.

கிராமத்து மக்களுக்கு ஏற்படும் நாவூறு அவர்களின் தொழிலில் ஏற்படும் நாவூறுக்கு முகமூடிநடனமே பரிகாரம் என்ற நம்பிக்கை அம்மக்களிடையே நிலவியது. தோட்டங்களின் நடுவில் நாவூறுக்கு வெருளி கட்டுவர். கண்நாவூறு கட்டிடம் எனவும் வாய்ச்சொல்லால் ஏற்படும் நாவூறு வளர்ச்சிக்கட்டை எனவும் அழைக்கப்பட்டது.

தொன்மையான இவ் நடனங்கள் சமூக இயல்புகளோடு நேரடியாகவே இணைந்திருந்தன. எனவே காலத்தால் அழியாமல் இவை போன்ற நடனங்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.

**செ.ஜெ.ஜொய்சி,**
2ம் வருடம்,
(நடனம்)

# அரங்க உருவாக்கமும் அதன் வளர்ச்சியும் ஒரு பார்வை

'உலகப் பொதுநிலையில் வைத்து இனங்கண்டு கொள்ளத்தக்கதாகவும், புரிந்து கொள்ளக் கூடியதாகவும் மனித வாழ்வை வியாக்கியானம் செய்வதே கலை' இக்கலை வடிவத்தினுள் ஆற்றுகைக் கலையாகக் காணப்படுவது நாடகமாகும்.

மனித இனம் தோன்றிய காலம் தொட்டே நாடகமானது சமூகத்தினிடையே முகிழ்ந்தெழுந்து விட்டது. இந்நாடகமானது பல்வேறு பாதைகளில் தோற்றம் பெற்றதாக பலநாடகவியலாளர்கள் கருத்தக்களைக் கூறினாலும் சமயச்சடங்கினடியாகவே நாடகமானது தோற்றம் பெற்றுள்ளது என்பது பலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயமாகும். இவ்வாறாக தோற்றம் பெற்ற நாடகமானது ஆற்றுகை செய்யப்படும் இடமாக அரங்கு காணப்படுகின்றது. இவ்வரங்க கட்டிடக்கலை பற்றி நோக்குமிடத்து

'நாடகம்' என்னும் கலை வடிவம் வாசிப்பதற்கான கலைவடிவமில்லை. இது அளிக்கை செய்யப்படுவற்கான கலை வடிவம். நாடகமானது ஆற்றுகை செய்யப்படும் நோக்கத்துடனே பெருமளவில் எழுதப்படுகின்றது. இவ்வாறு வடிவமைக்கப்படும் நாடகமானது அளிக்கை செய்வதற்கு ஒருகளம் அல்லது ஒரு அரங்கவெளி அவசியமாகின்றது. அரங்கவெளியானது நடிப்பிடமாக மட்டுமல்லாது நடிகனது உணர்வுகளையும் பரிமாற்றிக் கொள்வதற்கு அவசியமான பார்வையாளர் அமர்ந்து கொள்வதற்கான இடமாகவும் உள்ளது. அரங்கு என்பது வெறுமனே பார்த்து ரசிக்கும் இடமல்ல. எல்லாவிதமான இன்ப துன்பங்களையும் பகிர்ந்து கொள்ளும் இடமாகும். அரங்கக்கட்டிடம் என்பதில் நாம் புரிந்து கொள்ளக்கூடிய விடயம் என்னவெனில் தனியே பௌதிக நிலைப்பட்ட அரங்குதான் அரங்கில்லை அல்லது கட்டப்பட்ட அரங்குதான் அரங்கில்லை. உதாரணமாக ஒரு தெருவெளி அரங்கில் இடம்பெறுகின்றது எனின் அதனிடம் அதாவது பார்வையாளர் - நடிகர் நின்று அல்லது இருந்து பார்க்கும் இடம், நடிகர் நடிக்குமிடம் என்பன இரண்டும் இணைந்ததே அரங்கக்கட்டிடம் (Theater architecture) என்பதாகும். இங்கு ஆற்றுகைதான் பிரதானமாகின்றது.

மரபுரீதியான ஆற்றுகை அரங்கில் நடிகர்கள் தமது நடிப்பை ஆற்றுகை செய்யும் இடமாக 'மேடை' (Stage) இதில் ஒரு பகுதியாக (Acting Area) நடிப்பிடம் மற்றொரு பகுதியாக நடிகர்கள் வேடம் புனையவும், ஒப்பனை செய்து கொள்ளவும் தேவையான பின்மேடை (Back Stage) அடுத்து பார்வயாளர் அமர்ந்து கொள்வதற்கான பார்வயாளர் இடம் (Auditoriun) ஆகிய இவ்விரு (மேடை-பார்வயாளர்) பகுதிகளையும் கொண்டதாக அமைகிறது. இவ்விரு பகுதிகளையும் சேர்த்தே நாடக அரங்கு (Play house Theatre) அமைகின்றது.

நாடக அரங்க வரலாற்றில் நாடகத்தின் தோற்றம், தன்மை, அதன்கருப்பொருள், வெளிப்பாடு, உத்திகள் காலத்திற்கு காலம் இடத்திற்கு இடம் எவ்வாறு வேறுபட்டு மாற்றமும், வளர்ச்சியும் அடைந்து வருகின்றது எனில் மாற்றங்கள் எதுவும் நாடகத்தின் தன்மை, வெளிப்பாடு, அதுதோன்றிய காலச்சூழல், சமூகப்பின்னணி இவைகளுக்கப்பால் தன்னிச்சையான போக்கில் நடந்தவை அல்ல. மாறாக அவ்வரங்குகள் அவ்வக்காலத்தில் தோன்றிய நாடகங்களின் தன்மை, வெளிப்பாடு, உத்திமுறைகள், காலப்பின்னணி, சமூகப் பொருளாதார பண்பாட்டுப் பின்னணி இவை சார்ந்து தேவைப்பட்ட நிகழ்த்து முறைகளின் அவசியத்தில் இருந்து தோற்றம் பெற்றிருக்கின்றன.

எந்த ஒரு நாடகமும் தனக்கென ஒரு அரங்கு இல்லாமல் நிகழ்வாக வெளிப்பட சாத்தியமில்லை. நாடகம் தன் வெளிப்பாட்டுக்கென தெரிவு செய்யும் களமாக அரங்க வெளிகாணப்படுகின்றது. அதே வேளை அந்தந்த சமூகத்தினோடு ஒட்டி உறவாடி காணப்படுவதையும் காணக்கூடியதாய் உள்ளது. எனவே அரங்குகளும் இடத்துக்கிடம், நாடகத்திற்கு நாடகம் வேறுபடுவது போல காலத்திற்கு காலமும் மாறுபடுகின்றது.

இந்த வகையில் ஐரோப்பிய அரங்க கட்டிடத்தினை நோக்குமிடத்து மேற்கத்திய நாடகம் தொடங்கப்பட்ட கி.பி.5ம் நூற்றாண்டில் கிரேக்கத்தில் மலைகளுக்கு இடையேயான இயற்கையான இடைவெளிகளில் அரங்குகள் அமைக்கப்பட்டன. அடுக்கடுக்காக அமைந்த அரைவட்டப்படிகளில் அமர்ந்து பார்வையாளர்கள் நாடகத்தைப் பார்த்தனர். தட்டையான வட்டவடிவ மேடை ஒன்றில் நிகழ்வுகள் நிகழ்ந்தன. இம்மேடைக்குப் பின்னால் ஆரம்ப பின்புலம் அமைக்கப்பட்டிருக்கும். எலிசபெத் கால அரங்குகளில் கூரைகள் இருக்கவில்லை. ரசிகர்கள் அடுக்க:டுக்கான மாடங்களில் இருந்து பார்வையிட்டனர். இக்காலகட்டத்தில் முக்கிய மேடையாக செவ்வகவடிவ (முன்துருத்திய) மேடை காணப்பட்டது. இம்மேடையைச் சுற்றி மூன்று பக்கமும் பார்வையாளர் இருப்பார். இத்தாலியில் 'விசென்ஸா' என்னும் இடத்திலுள்ள 'ஒலிம்பிகோ' அரங்கம் முதலாவது உள்ளக அரங்காகும். (1585) பர்மாவிலுள்ள 'பார்னெஸ்' அரங்கம் குதிரைலாட வடிவததில் அமைக்கப்பட்டுள்ளது. முதலாவது நிரந்தர முன்வளைவும் இதில் காணப்படுகின்றது.

பரோக்கிய, ஐரோப்பிய அரச அரங்குகள் இந்த ஏற்பாடுகளை பின்பற்றின. உள்பக்கங்களில் அரச குடும்பங்களுக்கு பெட்டி போன்ற அரங்கு அறைகளும் பொருத்தப்பட்டன. ஜேர்மனியில் 'பேரூத்' என்னுமிடத்தில் 'ரிச்சர்ட் வேகனர்' வடிவமைத்த 'பெஸ்ட்பீல்வரால்' (1876) என்னும் அரங்கம் விசிறிபோன்ற இருக்கை அமைப்புக்களையும், ஆழமான நாடக (நிகழ்) மேடையையும், இருளான ரசிகர் பகுதியையும் கொண்டிருந்தது. பரோக்கிய அடுக்கு அரங்க பாணியை விட்டு பழைய முறையினை பின்பற்றினர். 17-20 நூற்றாண்டில் வளைவு மேடைகளுடான அரங்குகள் பிரபலமாக இருந்தன. 20ம் நூற்றாண்டிலும் கூட இத்தகைய அரங்குகள் பிரபலம் குன்றாவிட்டாலும் முன்துருத்து மேடை, வட்டவடிவ இருப்பிடம் போன்ற பிற அமைப்புக்கள் சேர்க்கப்பட்டன.


மத்திய காலப்பகுதியில் ஆரம்பத்தில் தேவாலயத்திற்கு வெளியே நாடகங்கள் நிகழ்த்தப்பட்டமையால் ஊர்தி அரங்குகள் பிரபலம் பெற்றிருந்தன. பிற்பட்ட காலத்தில் தேவாலயத்தினுள் நாடகம் சென்றமையால் நாடகங்கள் உள்வீதிகளை அரங்காகக் கொண்டு அளிக்கை செய்யப்பட்டது.

பிற்பட்ட காலத்தில் இத்தாலியை தாயகமாகக் கொண்ட புறசீனியம் மேடை (படச்சட்ட மேடை) அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் அளிக்கைகள் யாவும் இதனை மையமாகக் கொண்டே அளிக்கை செய்யப்பட்டன. ஐரோப்பிய அரங்குகள் மேற்கூறப்பட்ட தன்மைகளில் காணப்படுகின்ற அதே வேளையில் ஆசிய அரங்கானது பின்வருமாறு காணப்பட்டது. எந்த ஒரு நாடகமும் தனக்கென ஒரு அரங்கு இல்லாமல் நிகழ்வாக வெளிப்பட சாத்தியமே இல்லை. இப்படி வெளிப்பட வேண்டிய நாடகம் தன் வெளிப்பாட்டுக்கொன தேர்வு செய்து கொள்ளும் ஒரு களமாக அரங்கு உள்ளது. அதே வேளை அந்தந்த சமூகத்தின் மரபு சார்ந்து நாடகம் அளிக்கை செய்வதைக் காணக்கூடியதாக உள்ளது. காலத்திற்குக் காலம், இடத்திற்கு இடம் அரங்க அமைப்பில் வேறுபடுவது தவிர்க்க முடியாத ஒன்றாகும்.

ஆசிய அரங்கானது அதாவது நாடக கட்டிடமானது பண்பாட்டினாலும், சூழலினாலும், சமூக ஒழுங்கமைப்பினாலும் ஒழுங்கமைக்கப்படுகின்ற தன்மையைக் காணலாம். அடிநிலை மக்களிடையேயான உறவு மிகவும் நெருக்கமாகவும், இறுக்கமாகவும் இருக்கும் சூழலில் அந்த நிலையில் நாடகம் யாருக்காக ஆற்றுகை செய்யப்படகிறதோ அவர்கள் நடுவில் இருப்பது அவசியமாகின்றது. இதன் கட்புல கட்டட நிலையின் வெளிப்பாடுதான் 'வட்டக்களரி' திறந்த வெளியில் மக்கள் எல்லாப்பக்கங்களிலும் சூழ்ந்திருக்க அவர்களுக்கு நடுவில் வட்டக்களரி அளிக்கை இடம்பெறும். வட்டக்களரிக்கு எந்த ஒரு திசையும் பிரதான திசையல்ல. அதனை எங்கிருந்தும் பார்க்கலாம். ஆற்றுகை செய்பவர்கள் சுற்றிவர இருக்கும் அனைவருக்கு தம் அளிக்கை விளங்கக் கூடிய வண்ணம் அளிக்கை மேற்கொள்வர். இந்த நிலையில் முதுகு காட்டுதல் என்ற பிரச்சினைக்கு இடமே இல்லை. இவ்வட்டக்களரி பாவனையானது பெருமளவில் கூத்தில் காணப்படுகின்றது.

கூத்தில் நடிகர்கள் சுற்றியாட நடுமேடையில் நிற்கும் அண்ணாவியாரும் சுழன்று சுழன்று மத்தளம் வாசிப்பது கூத்தின் கலை இயல்பு மாத்திரமல்ல. சொல்லாப் பொருளாக சமூகத்தின் ஒன்றினைப்பினையும் சுட்டிநிற்கின்றது. தற்காலத்தில் படச்சட்ட மேடையின் வருகையினால் கூத்தினை படச்சட்ட மேடையில் அளிக்கை செய்யும் மரபும் காணப்படுகின்றது. ஜப்பானிய, சீன அரங்குகள் பிரமாண்டமானதாகவும், முன்துருத்திய மேடையமைப்பை கொண்டதாகவும் காணப்படுகின்றது. இதனை விட முக்கோண அரங்கு, சதுர அரங்கு, நீள்சதுர அரங்கு போன்றனவும் தற்கால பாவனையில் உள்ளது.

இவ்வாறாக நாடகத்தினை அளிக்கை செய்வதற்கு அரங்கவெளியானது இன்றியமையாதது. நல்லதொரு நாடகப்பிரதி உயிர்ப்பு பெறுவது அதன் அளிக்கையில்தான். எனவே இந்த அளிக்கை வெற்றி பெறுவதற்கு அரங்கவெளி முக்கியமாகின்றது. இவ்வாறு அரங்கவெளி முக்கியமானதாக காணப்படுவதால் அதன் வளர்ச்சியும், அரங்க மாற்றமும் காலத்திற்கு காலம் நிகழ்ந்த வண்ணம் உள்ளது.



ம. உஷாந்தி,
2ம் வருடம்,
நாடகத்துறை.

# SVIAS, Eastern University, Sri lanka

*2007/2008 Batch*



# உலகம் அழியுமா?

அடுத்த 450 கோடி ஆண்டுகளுக்கு உலகம் அழியாது என்கிறார் இந்தியவிஞ்ஞானி அய்யம்பெருமாள்.2012-ல் உலகம் அழிவது சர்வ நிச்சயம் என்று அடித்துக் கூறி வருகிறார்கள் சில மேற்கத்திய விஞ்ஞானிகளும் ஜோதிடர்களும்.

இதற்கு ஆதாரமாக ஏழு காரணங்களை அவர்கள் சொல்லி வருகிறார்கள்.

1. மாயன் காலண்டர்:

மாயன் நாகரிகத்தின் கருதுகோள்படி, உலகம் 2012-ல் அழிந்தாக வேண்டும். மாயன் காலண்டரில் இது குறிப்பிடப்பட்டுள்ளதாம். இன்று நாம் பின்பற்றும் தேதி முறை உள்ளிட்ட பல விடயங்களை கிட்டத்தட்ட துல்லியமாக ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கணித்தவர்கள் இவர்கள்தானாம். சூரியன் காலாவதியாகும் தேதியையும இவர்கள் கணித்து வைத்துள்ளார்களாம். அதுதான் இந்த 2012 என்று கூறுகிறார்கள்

.2. சூரியப் புயல்கள்

சூரியனுக்குள் ஏற்படவிருக்கும் பனிப்புயல்கள் காரணமாக ஏற்படும் கதிர்வீச்சு பூமியை பொசுக்கிவிடும் என்கிறார்கள் சூரிய ஆராய்ச்சியாளர்களில் ஒரு பிரிவினர்.

3. அணு சிதைவு

ஐரோப்பிய விஞ்ஞானிகள் சிலர் உலகின் பெரிய மூலக்கூறு உந்து எந்திரத்தைக் கண்டறிந்துள்ளனர். 27 கிலோ மீட்டர் ஆழமுள்ள சுரங்கத்தில் வைத்து அணுக்களை ஒன்றிணைத்து வெடிக்க வைப்பது திட்டம். எதற்காக இது? உலகம் உருவான விதம், உலகை இயக்கும் அடிப்படை கட்டமைப்பைத் தெரிந்து கொள்ள இந்த சோதனையாம். 2012-ல் இந்த சோதனை நடக்கிறதாம். அப்படி நடந்தால் இந்த பூமியே நொறுங்கிவிடுமாம்.

4. பைபிளில் சொல்லப்பட்டிருக்கிறது....

விஞ்ஞானிகள் கூற்று ஒரு பக்கமிருந்தாலும், திரு விவிலிய நூலில் உலகம் (2012-ல் என்று குறிப்பிடப்படவில்லை) அழிந்துவிடும் என்று சொல்லப்பட்டுள்ளதாம். கடவுளுக்கும் சாத்தானுக்கும் கடைசி யுத்தம் (Armageddon) நடக்கும் போது இந்த அழிவு நடக்கும் என்கிறது பைபிள். யுத்த முடிவில் கடவுள் தன் இறுதித் தீர்ப்பை பெருவெள்ளம், ஆழிப் பேரலை, பூகம்பம், கடல்கொள்ளுதல் என எந்த இயற்கை நிகழ்வு மூலமாகவும் வெளிப்படுத்தலாம் என்கிறது விவிலியம். அந்த இறுதித் தீர்ப்பு 2012-ல் வரக்கூடும் என்பது சிலரது கருத்து.

இதே கருத்தை சீனத்து நூல் ஒன்றும், சில இந்து புராண நூல்களும் கூட சொல்கின்றனவாம்.

5. சூப்பர் வல்கனோ

இந்த உலகமே பெரிய எரிமலை ஒன்றில் வாயில் இருப்பதாகவும், அது வெடித்துச் சிதறினால் உலகம் தூள்தூளாகிவிடும் என்றும் அமெரிக்க மண்ணியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். 650000 ஆண்டுகளுக்கு ஒருமுறை இந்த எரிமலை வெடிக்குமாம். அப்படிப் பார்த்தால் இந்த 2012-ல் அந்த எரிமலை வெடிக்கப் போகும் வருடமாம்!

6. கணிதவியல் அடிப்படையில்....

அமெரிக்காவின் பெர்க்கர்லி பல்கலைக் கழக அறிஞர்கள் சிம்பிளாக ஒரு கணக்கு சொல்கிறார்கள். இந்த பூமியின் ஆயுள் எப்போதோ முடிந்துவிட்டதாம். இப்போது அது கொஞ்சம் கொஞ்சமாக அழிந்து வருவதாகவும், 2012-ல் அழிவின் உச்சகட்டம் தொடங்கும் என்றும் கூறுகிறார்கள்.

7. புவியின் காந்தப் புலம்

வடக்கு, தெற்கு என பூமியில் காந்தப் புலம் இருப்பது தெரிந்திருக்கும். இந்த காந்தப் புலம்தான் உலகை நிலைப்படுத்தி இயங்க வைக்கிறது. ஆனால் ஒவ்வொரு 750000 வருடங்களுக்கும் ஒருமுறை பூமியின் காந்தப் புலம் தலைகீழாக மாறுமாம். அப்படி மாறும்போது அடுத்த 100 ஆண்டுகளுக்கு காந்தப் புலம் என்பதே இல்லாமல் போகுமாம். அப்படி இல்லாமல் போகும் தருணத்தில் புற ஊதாக் கதிர்கள் வெளிப்பட்டு மனிதன், விலங்கினம், தாவரங்கள் என அனைத்தையும் நொடியில் பொசுக்கிவிடுமாம்.

-இவையெல்லாம் 2012 அழிவுக்கு ஆதாரமாக சொல்லப்படும் காரணங்கள்.

ஆனால் இந்திய விஞ்ஞானிகள் என்ன சொல்கிறார்கள்?

சென்னை பிர்லா கோளரங்க செயல் இயக்குனர் டாக்டர் பி.எம்.அய்யம்பெருமாள், மேலே கூறப்பட்ட 7 காரணங்களையுமே பொய் என்கிறார்.

சமீபத்திய நிகழ்ச்சி ஒன்றில் அவர் பேசுகையில், 'வருகிற 2012-ம் வருடத்தில் உலகம் அழியும் என்று, சமீபகாலமாக உலகம் எங்கும் தகவல் பரவி வருகிறது. இது வதந்தியா? அல்லது உண்மையா? என்று பலர் கேள்விகள் எழுப்பி வருகின்றனர்.

சூரியனில் இருந்துதான் கிரகங்கள் தோன்றி பிரபஞ்சத்தில் இயங்கி வருகின்றன. சூரியன் தோன்றி 450 கோடி ஆண்டுகள் ஆகின்றன. சூரியனில் இருந்து வினாடிக்கு 750 டன் ஹைட்ரஜன் ஆவி வெளியாகி 746 டன் ஹீலியமாக வெளிப்படுகிறது. மீதமுள்ள 4 டன் ஒளியாகவும், வெப்பமாகவும் வெளிப்படுகிறது.

விஞ்ஞானிகளின் அதிநுட்ப ஆராய்ச்சியில் இன்னும் 450 கோடி ஆண்டுகளுக்கு உலகம் அழிவதற்கு வாய்ப்பே இல்லை. பலர் கூறுவதுபோல் 2012-ல் கண்டிப்பாக உலகம் அழியாது. 2020-ம் ஆண்டு ஒரு குறுங்கோள் பூமியை தாக்கும் என்று கூறுகிறார்கள். அவ்வாறு தாக்கப்படுவதற்கான வாய்ப்புகள் இல்லை. குறுங்கோள் இடம் பெயர்ந்து பூமியை தாக்கும் நிலை ஏற்பட்டால் அக்னி ஏவுகணை மூலமாக குறுங்கோளை பொடிப்பொடியாக தகர்க்கும் சக்தி உலக ஆய்வுக்கூடத்தில் உள்ளது. ஆகவே எந்த சூழ்நிலையிலும் பூமிக்கு ஆபத்து ஏற்படாது.

உலக மக்களின் தேவைக்காக சூரிய சக்தி மூலமாக மின்சாரம் தயாரிக்கும் முயற்சி வெற்றி பெற்றுள்ளது. கடல்நீரை குடிநீராக மாற்றும் முயற்சியும் வெற்றி பெற்றுள்ளது. ஆகவே மின்சாரத்திற்காகவோ, குடிநீருக்காகவோ எதிர்காலத்தில் பயப்படவேண்டிய அவசியம் இருக்காது.

ஒரு மனித உடலின் செல்லில் இருந்து அல்லது மிருகத்தின் ஒரு செல் அணுவில் இருந்து குளோனிங் முறை செய்யப்பட்டு ஆய்வுகள் நடத்தப்பட்டன. அந்த ஆய்வுகள் சோதனையாக மட்டுமே உள்ளது. இதை பெரும்பாலானோர் எதிர்த்து வருகின்றனர். ஆகவே இது ஆய்வுடன் நின்று விட்டது.

பூமி வெப்பமாவதை தடுக்க அதிக அளவில் மரக்கன்றுகளை நட்டு பசுமையாக வைத்துக்கொள்ள வேண்டும். இதன் மூலமாக மாசு கட்டுப்பாடு செய்து அனைவரும் ஆரோக்கியமாக வாழலாம்....' என்றார்.

பல காலமாக உலக அழிவினைக் காரணங்காட்டி ஒரு சில விசமிகள் பலவிதமான கட்டுக்கதைகளையும் கற்பனை வாதத்தினையும் முன்வைக்கின்றார்கள். இது மக்களின் உளவியலை பெருதும் பாதிக்கும் ஒரு விடயம் என்பதே உண்மை.

கண்ணால் காண்பதும் பொய்..... காதால் கேட்பதும் பொய்.........

**செல்வராஜா சிந்தியா**
கட்புலக்கலை
3ம் வருடம்

# உறைந்த உணர்வுகள்

எம்
வாசற்படிகள்
வசந்தங்கள் சுவாசித்து
எத்தனை காலம்

கால தேவனோ
கயவ தேவனோ
யார் இட்ட சாபம் எம்
வாசற்படிகளின் சந்தோஷத்தை
தொலைக்க

எத்தனை உறவுகள்
எத்தனை உயிர்கள்
சிதைவுண்டு
*குலைவுண்டு - கருக்கப்பட்டது
எம்மவர் கண் காணாமல்

எத்தனை பிஞ்சுகள்
எத்தனை மொட்டுக்கள்
மலரு முன்னே பதம் பார்க்கப்பட்டது
எம்
நாட்டு சட்டத்தின் முன்

இருப்பிடத்திற்குள்ளேயும்
வெளியேயும்

கருகிப்போன கன்னிப் பூக்கள்
எத்தனை

கற்பகத் தருவில்
கட்டப்பட்டு குதறப்பட்ட
காளையர்கள்
எத்தனை

மே 17
'பறி' கொடுத்த
'பலி' கொடுத்த
புரிதாப உயிர்கள்
எத்தனை

'அநாதை'
'மலடி'
'விதவை'
'தபுதாரன்'
இழந்தவை போக
இருப்பவை

இழக்க
கூடாதவை
இழக்கப்பட்டு
*'அகலிகையாய்' நாம்.....



கி.மேரி மரிய கொறற்றி
டயஸ்
நாடகத்துறை
3ம் வருடம்

# இசையும் மொழியும்

முன்னுரை

இசை என்ற சொல் அனைத்து நாட்டிற்கும் மனத்திற்கும் மனிதருக்கும் பொதுவானதொரு மொழியாகும். இசையென்பது மனிதர் முதல் மிருகங்கள் வரை உணரப்படுகின்றது. பொதுவாக மொழி என்பதன் அர்த்தமே தொடர்பு செய்தலை அதாவது ஒருவரிடமிருந்து பிறருக்குச் சென்றடைவதைக் குறிப்பதாகும். இசை, சொற்களால் ஆன மொழியுடன் பாடல்களில் இணையும் போதுதான் பாலில் தேன் கலந்தது போல் இசைக்கு இனிமை கூடுகின்றது. இசைத்துறையைப் பொறுத்த வரையில் இசைக்கலைஞர் பாடுவதையோ, வாசிப்பதையோ தனது ஐம்புலன்களாலும் ரசிகன் "மொழி" என்ற தொடர்பு மூலம் உணர்ந்து அனுபவித்து மகிழ்கின்றான் என்பதே அடிப்படையான உண்மையாகும். மேலும் இசையை உலகில் உள்ள அனைவரும் விரும்பிக் கேட்பதனால் இசையை உலகின் பொதுமொழி என்றும் கூறலாம். எம்மொழியாயினும் இசையும், மொழியும் ஒன்றிற்கொன்று பின்னிப்பிணைந்தே வரும்.

கலைகளின் பிரிவு

ஆயகலைகள் அறுபத்து நான்கினுள் இன்றியமையாத கலைகளாக கவின்கலைகள், இன்கலைகள், நுண்கலைகள், நன்கலைகள் என சில கலைகளைப் பகுத்துள்ளனர். இவை சங்கீதம், கவிதை, ஓவியம், சித்திரம், சிற்பம் எனப்படும் ஐந்து கலைகளாகும். வடமொழியில் சங்கீதம் எனப்படுவதையே தமிழில் இசை என்கின்றோம். சங்கீதம் என்பதில் 'சங்' என்றால் நல்ல என்றும் 'கீதம்' என்றால் பாட்டு என்றும் பொருளாகும். மேலும் இசை என்பதற்கு இசைப்பது, சொல்வது, .இசைவது, இணைவது, புகழ்வது என பல வகையான பொருள் உள்ளது.

கிராமிய இசையில் இருந்து தமிழிசையின் தோற்றம்

ஆதிமனிதனானவன் விலங்குகள், பறவைகள் என்பவற்றின் ஒலிகள், இயற்கையில் ஏற்படும் ஒலிகள் என்பவற்றைத்தாம் பேசத்தொடங்கிய காலத்தினை கவனத்திற் கொண்டு ஒலி எழுப்பினான் என்றும் இது பிற்காலத்தில் ஒரு இசைவடிவமானது என்றும் அதுவே கிராமிய பாடல்களாக வளர்ச்சி பெற்றதென்றும் இசைபற்றிய ஓர் பூர்வீக வரலாறு உள்ளது. இவ்வாறான பல்லாயிரக்கணக்கான கிராமிய இசைப்பாடல்கள் இருந்தன. (உதாரணம் தாலாட்டுப்பாடல்). பின்பு இவற்றில் நல்லனவற்றை எல்லாம் தொகுத்து சிலப்பதிகார உரைக்குறிப்பில் 11991 ஆதி இசைகள் என்று குறிப்பிட்டனர். இதிலிருந்து இலக்கண மரபுகளிற்குட்பட்டு இணை, கிளை, பகை, நட்பு என்ற ஸ்வரங்கள் வருமாறு தொகுக்கப் பெற்றவைகளே 103 தமிழ்ப்பண்புகள் ஆகும். எனவே பழங்காலத்து கிராமிய இசையில் இருந்தே தமிழிசையும் பின்பு அதிலிருந்து கர்நாடக இசையும் தோன்றி வளர்ச்சி பெற்று வந்துள்ளன. இத்தகைய பழமையான கிராமியப் பாடல்களைப் பின் பற்றியே தமிழிசை மும்மணிகளும், அருணாசலக்கவி, தியாகராசர், சியாமா சாஸ்திரி, முத்துஸ்வாமி தீட்சிதர், கோபாலகிருஸ்ண பாரதி போன்ற பலரும் நாட்டுப்புற இசையால் கவரப்பட்டு நாட்டுப்புற மெட்டுக்களைத் தம்முடைய பாடல்களுள் புகுத்தி இசை அரங்குகளில் இசைக்கவும் செய்துள்ளனர்.

அடிப்படை மொழி மற்றும் பண்கள்

இசையை மொழி வகையாகப் பிரிக்கும் போது தமிழிசையே தொன்மையானதும் பெருமையானதும் என அறிய முடிகின்றது. மேலும் பண்டைத்தமிழர் தாம் வாழ்ந்த நிலப்பகுதிக்கேற்ப குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என பகுத்துள்ளனர். பாடும் இசையையும் தம் நிலத்திற்கேற்ப குறிஞ்சியாழ், முல்லையாழ், மருதயாழ், நெய்தல்யாழ், பாலையாழ் என பிரித்தனர். இவை ஐந்தும் அம்மக்களால் இசைக்கப்பெற்ற பெரும் பண்களாகும். இக்காலத்தில் கரிகாம்போஜி என அழைக்கப்பெறும் இராகமே தமிழிசையில் செம்பாலைப்பண் என அழைக்கப்பட்ட முதலில் தோன்றிய பண் ஆகும். மேலும் தேவாரப்பதிகங்கள் பாடப்பட்ட காலத்தில் இந்தியா முழுவதும் ஒரே வகையான இசைதான் இருந்தது. பின்தான் இந்துஸ்தானி இசை, கர்நாடக இசை என்ற பிரிவுகள் ஏற்பட்டது எனக் கூறப்படுகின்றது. இந்திய இசைக்கு அடிப்படையாக இருந்தது தமிழ் மொழியில் இயற்றப்பட்டு வந்த தேவாரப்பண்களே என்றால் மிகையாகாது. பண் என்பதற்கு பண்படுத்தப்பட்ட இசை ஒலித்தொடர் அல்லது பாடல்களில் அமைந்துள்ள இசையின் முறையான நிலை எனக்கூறலாம்.

இசையில் மொழியின் வளர்ச்சி

தேவார மூவராகிய சம்பமந்தர், நாவுக்கரசர், சுந்தரர் இவர்களுடன் திருவாசகம் அருளிய மாணிக்கவாசகர் சமயகுரவர் நால்வருடன் பன்னிரு ஆழ்வார்கள் முதலியோர் இயற்றிய நாலாயிரம் திவ்ய பிரபந்த காலத்திற்குப்பின் இசை படிப்படியாக பல்வேறு மொழி நிலைகளில் வளர்ச்சி கண்டது எனலாம்.

ஜயதேவர் கீதகோவிந்தம் என்னும் நிருத்திய நாடகத்தை சமஸ்கிருத மொழியில் இயற்றினார். அவை அஷ்டபதிகள் எனப்பட்டன. இவையே பழங்காலப் பாடல்களில் இன்று நமக்குக் கிடைக்கப்பெற்றுள்ளன. பஜனைகளில் அஷ்டபதிகள் அதிகமாகப் பாடப்பட்டன. கி.பி. 15ம் நூற்றாண்டில் தமிழ் நாட்டில் அருணகிரிநாதரும் கர்நாடக மாநிலத்தில் புரந்தரதாசரும் ஆந்திர பிரதேசத்தில் அன்னமாச்சாரியாரும் முறையே தமிழ், கன்னடம், தெலுங்குப்பாடல்கள் இயற்றி இசை வளர்ச்சிக்குப் பேருதவி புரிந்தனர்.

16ம் நூற்றாண்டில் பத்ராசலம் ராமதாசர் தெலுங்கு, சமஸ்கிருத மொழிகளில் 100 கீர்த்தனைகளை பல்லவி, அனுபல்லவி, சரணம் மற்றும் அங்கங்களுடன் இயற்றியுள்ளனர். இவருக்குப்பின் மார்க்கதரிசி சேவுங்கார் பல கீர்த்தனைகளை சமஸ்கிருத மொழியில் 'கோசல' எனும் முத்திரையுடன் எழுதியுள்ளார். ஷேத்ரக்ஞர் பதங்களும் குறிப்பிடத்தக்கவை. 17ம் நூற்றாண்டைச் சேர்ந்த நாராயணதீர்த்தர் கிருஷ்ண லீலா தரங்கிணி எனும் நூலை சமஸ்கிருத மொழியில் இயற்றினார். இது நீண்ட நாட்டிய நாடகம் ஆகும்.

தெலுங்கு, சமஸ்கிருத மொழியில் இசை வளர்ச்சி

தஞ்சை ஷாஜி மகாராஜா தெலுங்கு மொழியில் இயற்றிய பல்லவிஷேவா பிரபந்தம் பிரபலமான கீர்த்தனைகளைக் கொண்டதாகும். பச்சிமிரியம் ஆதியப்பையா தெலுங்கில் இயற்றிய விரிபோணி என்ற பைரவி ராக வர்ணம் மிகப் பிரபல்யமானது. சமஸ்கிருதத்தில் இராமசுவாமி தீட்சிதரால் இயற்றப்பட்ட அஷ்டோத்திரராக தாள மாலிகை பிரசித்தி பெற்ற மிகப்பெரிய இசை உருப்படி ஆகும். தாளப்பாக்கம் அன்னமாச்சாரியார் தெலுங்கில் இயற்றிய பஜனை பத்ததிக் கீர்த்தனைகள் மிகவும்



பிரசித்தி பெற்றவை. பஜனைப் பத்ததிக்கு இவரே மூலவராவார். பைடால குருமூர்த்தி சாஸ்திரிகளின், கீதங்கள், சௌக்கம் வீரபத்திரஜயாவின் தருக்கள், பதங்கள், தில்லானாக்கள் கவிமாத்ருபூதையா பதங்கள், சதாசிவ பிரும்மேந்தரரின் பக்தி அம்சம் நிறைந்த கீர்த்தனைகள், வாலாஜா பேட்டை வெங்கட்ரமண பாகவதர் கீர்த்தனைகள், முவ்வாலூர் சபாபதி ஐயர் கீர்த்தனைகள், சின்னஸ்வாமி தீட்சிதர், பாலுஸ்வாமி தீட்சிதர் உருப்படிகள், மானம்பூச்சாவடி வெங்கட சுப்பையர் கீர்த்தனைகள், பல்லவி கோபாலையர், பல்லவி துரைச்சாமி அய்யர், வீணைக் குப்பையர் உருப்படிகள், சுப்பராய சாஸ்திரிகளின் கிருதிகள், ஆனைஐயா உருப்படிகள், தஞ்சை நால்வரின் உருப்படிகள், மைசூர் சதாசிவராவ், மகாவைத்தியநாத ஐயர், பட்டணம் சுப்பிரமணிய ஐயர், பல்லவி சேஷய்யர், திருவொற்றியூர் தியாகையர், இராமநாதபுரம் பூச்சி ஸ்ரீநிவாச ஐயங்கார், அரிகேச நல்லூர் முத்தையா பாகவதர், மைசூர் வாசுதேவாச்சாரியார், டைகர் வரதாச்சாரியார் முதலியோர் உருப்படிகள் தெலுங்கு சமஸ்கிருத மொழிகளில் இயற்றப்பட்ட இசை உருப்படிகள் ஆகும்.

முடிவுரை

இறைவனே இசை வடிவானவன் இசைக்கு மொழியே இல்லை என்ற கருத்துக்கள் ஏற்கத்தக்கது எனினும், இசையும் மொழியும் ஒன்றிற்கொன்று இணைந்தே வருவன என மேற்கூறப்பட்ட பல தரப்பட்ட இசை மரபுகளின் மூலமும் பல்வேறு மொழிகளில் உருப்படிகளை இயற்றிய வாக்கேயகாரர்கள் தத்தம் மொழிப்பாடல்கள் மூலம் இசையின் வளர்ச்சிக்கும் பெரும் தொண்டாற்றியுள்ளனர் என்பது இந்த ஆய்வுக்கட்டுரை மூலம் தெள்ளென விளங்குகின்றது.

பார்வை நூல்:-

இந்திய இசைக்கருவூலம்

பக்கிரிசாமி பாரதி, கே.ஏ. குசேலர், பதிப்பகம், 2004.

**வ. கயேந்தினி,**
**3ம் வருட இசைத்துறை,**
**சு.வி.அ.க.நிறுவகம்,**
**கிழக்குப்பல்கலைக் கழகம்**



## கணினி ஹக்கர்ஸ்

சட்டவிரோதமான முறையில் கணினியிலிருந்தோ அல்லது இணையத்திலிருந்தோ தகவல்களை அல்லது உரிமங்களைக் திருடுபவர்களை இவ்வாறு அழைப்பார்கள். இவர்கள் இணையத்தின் மூலமாகவே அதிகமான சட்டவிரோதச் செயற்பாடுகளை மேற்கொள்ளுகின்றனர். சர்வதேச ரீதியில் இவர்களுக்கெதிரான சட்டங்கள் இருப்பினும் யார் அவர்கள் என்பதை கண்டுபிடிப்பது கடினமே. IP முகவரி மற்றும் உயர் தொழில்நுட்பங்களை வைத்தே அவர்கள் யார் என்பதை இனங்காண முடியும்.

**ஜெ.ஜெ.சுலக்ஸ்**
கட்புலக்கலை
3ம் வருடம்

# SVIAS, Eastern University, Sri lanka

## *2008/2009 Batch*



# பண்பாடு என்றால் என்ன?

கல்ச்சர் (Culture) என்கின்ற ஆங்கிலச் சொல்லால் குறிப்பிடப்படுகின்ற இப்பொருளுக்கு இணையாக தமிழில் கலாசாரம் என்கின்ற வார்த்தையும், பண்பாடு என்கின்ற வார்த்தையும் பயன்படுத்தப்படுகின்றன. இதில் கலாசாரம் என்பது வடசொல் என்பது மட்டுமன்றி Culture என்கின்ற ஆங்கிலச் சொல் உணர்த்துகின்ற பொருளை முழுமையாக தமிழில் சுட்டும் வார்த்தையாகவும் இல்லை கலாசாரம் என்பது கலைகளின் சாரம் என்றாகி விடுகின்றது. பண்பாடு என்கின்ற சொல்லே சரியான சொல். இச்சொல்லை ரசிகமணி டி.கே.சி. அவர்கள் தான் முதன்முதலாக உருவாக்கி பயன்படுத்தியதாகப் பெரியவர்கள் கூறுவார்கள். Culture என்பது வினைச் சொல்லாக வரும் போது 'பண்படுத்து' என்றும், பெயர்ச் சொல்லாக வரும் போது 'பண்பாடு' என்றும் சொல்லலாம். இவற்றின் வேர்ச்சொல்லாக 'பண்பு' என்ற சொல் இருக்கின்றது.

பண்பு என்றால் என்ன? 'பண்பெனப் படுவது பாடறிந்து ஒழுகுதல்' என்கின்றது கலித்தொகை. நாம் சமூகத்தின் பாடு அறிந்து அதாவது சமூகத்தின் போக்கு, செல்நெறி, பழக்கம் போன்ற பல பாடுகளை அறிந்து அதன்படி ஒழுகுதலே பண்பாகும். இதனை வள்ளுவரின் இவ்வரிகளோடு சேர்த்துப் புரிந்து கொள்வது எளிதாக இருக்கும்.

'உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்

கல்லார் அறிவிலா தார்'

கல்வி கேள்விகளில் கற்றுத் தேர்ந்தவராக இருந்தாலும் உலகத்தோடு ஒத்து வாழ்கின்ற பண்பாடு இல்லாதவர் அறிவில்லாதவர் என்கிறார் வள்ளுவர். ஆகவே ஊர் போகின்ற போக்குப்படி நாங்களும் போனால் பண்புள்ளவன், பண்பட்டவன், பண்பாடு உள்ளவன் எனக் கூறுவர். ஊர் மோசமான போக்கிலே போனாலும் நாம் அது போகின்ற போக்கிலே போக வேண்டும். அதுக்குத் தக்கபடி நம்மை பண்படுத்திக் கொள்ள வேண்டும் என்பது இதில் சொல்லாமல் உள்ளுறையும் பொருளாக இருக்கினறது. ' நீ ரோமாபுரியில் இருக்கும் போது ஒரு ரோமனைப் போல நடந்து கொள்' என்கின்ற ஆங்கிலப் பழமொழியையும் இவ்விடத்தில் பொருத்திப் பார்க்கலாம்.

ஊரின் பண்பாடு என்பது என்ன? அது எப்படி உருவானது? அதைத்தானே நாம் பொதுவாக பண்பாடு என்கின்றோம். பண்பாடு என்றால் என்ன? என்பதற்கு பலவிதமான வியாக்கியானங்களைப் பலரும் சொல்லியிருக்கின்றார்கள், சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். முதலில் அதில் சிலவற்றைப் பார்ப்போம்.

1. ஒரு மக்கள் குழு வாழும் முறைதான் பண்பாடு எனப்படும்.
2. ஒரு தனிமனிதன் தன் குழுவிடமிருந்து உள்வாங்கும் சமூகப்பாரம்பரியமே பண்பாடு
3. மனித நடத்தைகளை ஒழுங்குபடுத்துவதற்கான ஒரு ஏற்பாடுதான் பண்பாடு.
4. வரலாறு நெடுக மனிதகுலம் கற்றுக் கொண்டவற்றின் மொத்தக் குவியலே பண்பாடு.
5. படித்த நாகரீகமான நடத்தைதான் பண்பாடு.

6. நம்மைச் சுற்றியுள்ள, சுற்றுச்சூழலுடனும், சுற்றியுள்ள மனிதர்களுடனும் ஒத்திசைந்து வாழ நம்மைத்தயார் செய்யும் உத்திகள் மற்றும் தொழில் நுட்பங்களின் தொகுதியே பண்பாடு.

7. பாதுகாத்து தகுதி பெற்ற மனிதப்படைப்புச் சக்தியின் முழுமையே பண்பாடு.

இதே போன்று இன்னும் புரியும் படியாகவும், புரியாமலும் பற்பல வியாக்கியானங்கள் கூறப்படுகின்றன. நம்மைப் பொறுத்தவரை மேற்கூறிய எல்லாவற்றிலும் உள்ள கருத்துக்களை எல்லாம் தொகுத்துப் பார்க்கையில் பண்பாடு என்பது மனிதர்களின் பழக்கவழக்கங்கள், (உணவு, உடை, உறையுள்) நடை, உடை, பாவனைகள், நம்பிக்கைகள், வழிபாட்டு முறைகள், சிந்திக்கும் முறை, பேசும் மொழி, பொருள் உற்பதி முறைகள், உறவு முறைகள் போன்ற எல்லாவற்றையும் உள்ளடக்கிய ஒரு குறிப்பிட்ட மனிதக்குழுவின் வாழும் முறைதான் அக்குழுவின் பண்பாடு. இது உட்கார்ந்து யாரும் சொல்லிக் கொடுத்து யாருக்கும் வருவதில்லை. வாழ்க்கையின் ஊடாகத் தாமே உட்கிரகித்து கொள்வதாகும். காற்றை சுவாசிப்பது போல நாம் எந்தச் சமூகத்தில் பிறந்திருக்கின்றோமோ அச்சமூகத்தின் பண்பாட்டை நாம் சுவாசித்து உள்வாங்கிக் கொள்கின்றோம். நாம் எந்தப் பண்பாட்டில் பிறக்கின்றோமோ அங்குள்ள காற்றைத்தான் சுவாசித்தாக வேண்டும். பண்பாட்டை நாம் தேர்வு செய்வதில்லை. ஏற்கனவே தயார் நிலையில் உள்ள ஒரு பண்பாட்டில்தான் பிறக்கின்றோம். அதை உள்வாங்கிக் கொண்டு அதன்படி சிந்தித்து வாழத் தொடங்குகின்றோம்.

குரங்கிலிருந்து பிரிந்து மனிதன், இனங்களாக வாழத் தொடங்கிய நாளில் பண்பாடு பிறக்கின்றது. ஒற்றைக் குரங்காக அலைந்த நாட்களில் ஏற்பட்ட அனுபவங்கள், பழக்கவழக்கங்கள் எல்லாம் பண்பாட்டில் அடங்காது. இனக்குழுக்களாகக் கூடி இயற்கையுடன் நடாத்திய அன்றாடப் போராட்டத்தின் ஊடாகப் பெற்ற அறிவையும், பயத்தையும், வியப்பையும், ஆனந்தத்தையும் குழுவோடு பகிர்ந்து கொள்ளத் தொடங்கிய போதுதான் சில சடங்குகள், பழக்கங்கள், உறவுகள் எனப் பண்பாட்டின் கூறுகள் முகிழ்கின்றன. வாழ்வனுபவத்தினூடாக பெற்றதுதான் பண்பாடு.

இயற்கையாக கிடைப்பதில் எதைச் சாப்பிடலாம், எதைச் சாப்பிடக் கூடாது, எதை அப்படியே சாப்பிடலாம், எதை வேகவைத்துச் சாப்பிட வேண்டும் எதிலே வைத்துச் சாப்பிடுவது? உருட்டி சாப்பிடுவதா? அள்ளி சாப்பிடுவதா? எல்லோரும் வட்டமாக கூடி உட்கார்ந்து சாப்பிடுவதா? பெண்கள் தனியாக ஆண்கள் தனியாக சாப்பிடுவதா? பெரியவர்கள் சாப்பிட்ட பின் குழந்தைகளுக்கு கொடுப்பதா? குழந்தைகள் சாப்பிட்ட பின் மூத்தோர் சாப்பிடுவதா? என்றெல்லாம் ஒரு குழு கலந்து பேசி ஒரு பழக்கத்தை வழக்கமாக்குகின்றது என்றால் அங்கே ஒரு பண்பாட்டுக் கூறு பிறக்கின்றது. இப்படி உணவு, உடை, வழிபாட்டு முறை என ஒவ்வொரு பண்பாட்டுக்கூறும் உருவாகின்றது. எல்லாக்கூறும் அடங்கிய தொகுப்பே அக்குழுவின் பண்பாடு ஆகின்றது

காஞ்சனா துரைராசா
நாடகத்துறை
3ம் வருடம்



# இலங்கையில் இஸ்லாமிய இசை

## வளர்ச்சியும் அதனை ஊக்குவித்தவர்களும்

இலங்கை முஸ்லிம்கள் எல்லா சமயத்து மக்களுடனும் ஒன்றித்து எல்லா கலைகளிலும் பிரகாசிக்க வேண்டும் என்ற நன் நோக்குடன் அன்று தொட்டு இன்று வரை பிரகாசிக்கின்றனர். அந்த வகையில் இவர்கள் இசைத்துறையையும் விட்டு வைக்கவில்லை. இசைத் துறையிலும் நல்ல பரீட்சயம் உள்ளவர்களாகக் கைதேர்ந்தவர்களாகத் திகழ்கின்றனர்.

இலங்கை சுதந்திரக்காற்றை சுவாசிப்பதற்கு முன்பிருந்தே பார்ஸி நாடகக்குழுக்கள் மும்பாயிலிருந்து இலங்கை நோக்கி வரத் தொடங்கியிருந்தன. அக்காலகட்டத்தில் லைலா மஜ்னு, குலேபகாவலி, ராமாயணம், இந்தர்ஸபா, அலாவுதீனும் அற்புத விளக்கும், அலிபாபா போன்ற நாட்டிய நாடகங்கள் நாலா பக்கமும் மேடையேறின. நாடகத்தில் எழுதப்பட்டு இசையமைக்கப்பட்ட பாடல்களும் இந்த நாடகக் குழுக்களோடு நாடு கடந்து வந்த இசையமைப்பாளர்களும், பாடகர்களும்முஸ்லிம்கள் என்று சொன்னால் மிகையாகாது.

இந்த இசையமைப்பாளர்கள் மூலம் கவாலி, கஸல், பஜன், தும்ரி, கியால், ஹிந்துஸ்தானி போன்ற இசைகள் ரசனையை ஊட்டின. இப்பாடல்களில் சிங்கள மொழி சகோதரர்கள் பெரிதும் ஈர்க்கப்பட்டனர். அதனால் சிங்கள மொழிப்பாடல்களில் ஹிந்துஸ்தானி இசையின் சாயல்கள் புகுத்தப்பட்டன. இத்தகைய இசை ஊக்கத்தில் முஸ்லிம் இசையமைப்பாளர்கள் முன்னின்று உழைத்தார்கள். 1903ம் ஆண்டு இலங்கையில் 'கிரமபோன்' பாவனைக்கு வந்த போது இலங்கை இஸ்லாமிய இசையமைப்பாளர்கள் கிரமபோனில் காலூன்றியதுடன் தங்கள் வீடுகளில் 'கிரமபோனை' வாங்கியும் வைத்துக் கொண்டனர்.

இந்திய இஸ்லாமிய இசையமைப்பாளர்களான அப்துல் லத்தீப், ஜனாப் நவாப்ஹான், பெயாரி ஸாஹிப், அப்துல் ஸத்தார் போன்றவர்கள் சிங்கள நாடகங்களுக்கு வாத்தியம் இசைத்தார்கள். உதாரணமாகக் கூறினால் சிங்கள நாடகத்தின் பிரபல எழுத்தாளர் ஜோன் டி சில்வா உருவாக்கிய 'சிரிசங்கபே', 'நளதமயந்தி', 'ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன்' போன்ற நாடகங்களுக்கு மேற்கூறிய இஸ்லாமிய இசையமைப்பாளர்களே இசையூட்டினார்கள். இதனால் சிங்கள மக்களின் இதயங்களில் சீரான இடத்தைப் பிடித்தனர். 'லத்தீப்பாய்' பாடலின் மூலம் பல்லின மக்களையும் கவர்ந்தார்கள். 1940 களில் சிங்களப்பாடல்கள் இசைத்தட்டுகளில் வெளிவர ஆரமப்பித்தன. இக்கால கட்டங்களில் பாடல்களை சிங்கள சகோதரர்கள் இயற்ற பாடுவோரர்களாக. இஸ்லாமியக் கலைஞர்களான லத்தீப்பாய், இப்றாஹீம் மாஸ்பா, முஹிதீன் பேக் ஆகியோர் திகழ்ந்தனர்.

1947ல் இலங்கையில் சிங்கள சினிமா களைகட்டியது. அதன் வளர்ச்சிக்கு உந்து சக்தியாகத் திகழ்ந்தவர்கள் முஸ்லிம் இசையமைப்பாளர்களே. 'அசோகமாலா' என்ற படத்திற்கு ஹவுஸ்மாஸ்டர் இசையமைத்தார். அக்காலத்தில் ஹவுஸ்மாஸ்டரின் இசைக்குழு மிகவும் பிரபல்யம் பெற்றிருந்தது. இன்றைய சிங்கள மக்களின் இசையில் இதயமாகக் கவர்ந்து விட்ட இசைமேதை அமரதேவா அவர்கள். இவர் ஹவுஸ்மாஸ்டரின் இசைக் குழுவில் வயலின் வாசிக்கும் வாத்தியக் கலைஞராகப் பணியாற்றினார். இக்குழுவில் விஷேட பாடகராக இஸ்லாமிய ஜனரஞ்சகப் பாடகர் முஹைதீன் பேக் பங்கேற்றார். இப்படியான காரியங்கள் மூலம் இஸ்லாமியர்களின்

இசைத்துறை நாடளாவிய ரீதியில் நல்ல வரவேற்பைப் பெற்றது எனலாம்.

இஸ்லாமியகீதப் பாடகர்கள் எனும் வகையில் ஏ.ஆர். ஸெய்னுல் ஆப்தீன், கரீம் இருவரும் குறிப்பிடத் தக்கவர்களாகத் திகழ்ந்தனர். 1947ல் இஸ்லாமியகீத பாடகர்களுக்கான அடிப்படை இசைப்பயிற்சி வழங்கத் தீர்மானிக்கப்பட்டதுடன் மாலைநேர வகுப்புகளும் இடம்பெற்றன. இப்படியே படிப்படியாக வளர்ந்த முஸ்லிம் கலைஞர்கள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவையின் மூலம் பட்டை தீட்டப்பட்டு நாடளாவிய ரீதியில் சிறந்த பாடகர்களாகவும், இசையமைப்பாளர்களாகவும் திகழ்கின்றனர்.

இலங்கை இஸ்லாமிய இசை உலகில் ஏ.ஜே.கரீமின் பிரகாசம் இஸ்லாமிய இசை வளர்ச்சியை எடுத்துக்காட்டி நிற்கின்றது. அந்த வகையில் இவருடைய பணி இஸ்லாமிய வளர்ச்சிக்கு எந்தளவிற்கு துணை புரிந்தது என சற்று நோக்கும் போது 1928ம் ஆண்டு மே மாதம் 16ம் திகதி பிறந்த இவர் சிறுவயதில் இருந்தே இசைப்பிரியராகக் காணப்பட்டார். காரணம் இவருடை தந்தை ஓர் சிறந்த இசையமைப்பாளர். 35 ஆண்டுகள் பொலிஸ் வாத்தியக் குழுவில் கிளாரிநெட் [Clorinet] வாசிக்கும் கலைஞராகப் பிரபல்யம் அடைந்தவர். அதே அத்திவாரத்தில் ஆழக்கால்பதித்து அதே பொலிஸ் வாத்தியக் குழுவில் சேர்ந்து பணியாற்றினார். இரண்டாம் உலகப்போர் முடிந்த கையுடன் இரண்டரை ஆண்டுகள் இனிமையாக இசைப்பணியாற்றினார். பின்னர் கலாசூரி கரீம் அவர்கள் சிங்கள மொழிப் பாடல்களிலும் இஸ்லாமிய கீதங்களிலும் மிகவும் பிரபலம் பெற்றிருந்த பாடகர் அல்ஹாஜ் முஹைதீன் பேக் அவர்களின் இசைக்குழுவில் அங்கத்துவம் பெற்று வானொலிப் பாடல்களுக்கு கிளாரிநெட் வாசிப்பதில் ஈடுபட்டார்.

# இசை

இசையெனும் மொழி
நட்சத்திர ஒளி கறந்து
பூக்கள் நறுமணம் பிழிந்து
ஒரு சொல் செய்தேன்
இசையே உலகெங்கும்
உன்வசம் என்று!

மூங்கில் புதர்களிடையே
வண்டுகளின் புதிரால்
ரீங்கார இசையா?
தென்றல் காற்றில் தவழ்ந்து
வருகின்றது குழலின்
இனிய நாதம்!

பூமியெங்கும் தென்றலாய் காற்று
காற்றைச் சுற்றி இசை
இசைக்குள் மூழ்கி கிடக்கும்
ஜீவராசிகள்! - என்றும்
இனிய ஸ்பரிசங்கள் இசை!

அதிகாலை பொழுதில்
குயில்களின்
சங்கீதம் அழகான
மழலைகளின் கானம்
பட்சிகளின் சில்லென்ற ஓசை
அருவி கொட்டும் கீதம் - இசை!

காற்றை நுரைக்க வைக்கிறாய்
பூக்களை பூப்பிக்கின்றாய்
ஒற்றைச் சொல் உரைக்கின்றேன்
பூமியின் வட்டமிடும் தேவதை
இசை! இசை! இசையே!

தேவராசா. றஜிதா
இசைத்துறை
3ம் வருடம்

இலங்கை கர்நாடக இசைக் கலைஞர்களுக்கு கலாசூரி கரீமின் தேவை மிகவும் வேண்டிதாயிற்று. அவ்வேளை கர்நாடக இசைக் கலைஞர்களான கே.கே. அந்தனி, செல்வி. லீலா ராஜா, ஆர். முத்துஸாமி, டி.எல். மணிபாகவதர் ஆகியோரது இசைநிகழ்வுகளில் கலாசூரி கரீம் பங்கேற்கின்றார். இவரது பிரபலம் டவர் மண்டபத்தில் நல்ல கிராக்கியை ஏற்படுத்தியது. ஓர்கான் ரொட்ரிகோ, சிரிசேன விமலவீர, லோரன்ஸ் மாஸ்டர், துங்க சேன போன்ற பலரது டவர் அரங்கு நாடகங்களுக்கு கலாசூரி கரீம் கிளாரிநெட் வாசித்தார். 1947ம் ஆண்டில் வானொலி கலைஞர் தேர்வில் சித்தியடைந்து பிரபலமடைந்தார். இலங்கை சிங்கள பட வரலாற்றில் கலாசூரி கரீமவர்களது பங்களிப்பு காத்திரமாக அமைந்திருந்ததாக வரலாற்றுத் தடையங்கள் கூறுகின்றன.

1951ல் இலங்கை வானொலி பணிப்பாளர் நாயகம் கிளிபர்ட்டொப் அவர்கள் கலாசூரி கரீமின் திறமையைக் கண்டு வானொலி வர்த்தக சேவைக்கு வாத்தியக் குழு ஒன்றை உருவாக்க இவரையே பணித்து விட்டார். இலங்கை வானொலி முஸ்லிம் நிகழ்ச்சியில் இஸ்லாமிய கீதங்களுக்கான இசைக்கலைஞராக அன்று தொடக்கம் இன்று வரை சேவையாற்றி வருவதை யாரும் மறுக்க முடியாதொன்றாகும். இலங்கை தொலைக்காட்சி வரலாறுகளிலும் கலாசூரி கரீமின் பாங்கு கண்களை வசீகரிக்கின்றன. 1952ல் இலங்கைக்கு விஜயம் செய்த இந்தியப் பாடகர் முஹமத் ராபி அதே போல் இஸ்லாமிய தென் இந்தியப் பாடகர் நாகூர் ஈ.எம். ஹனீபா, பி.கே.ஹபீபுல்லாஹ், காரைக்கால் தாவூத், எஸ். ஹுஸைன் தீன் ஆகியோர் இலங்கைக்கு விஜயம் செய்து இஸ்லாமிய இன்னிசைக் கச்சேரிகள் நடத்திய போது கலாசூரி கரீம் அவர்கள் கிளாரிநெட் [Clorinet] வாசித்து நல்லதெரு மன இணக்கத்தை ஏற்படுத்தினார் என்று சொல்வது மிகையாகாது.

1980 முதல் கம் உதாவ. கிராமோதயக் கொண்டாட்டங்களிலும் இவரது விரல்கள் இசை மீட்கத் தவறவில்லை. 1986ல் முன்னால் ஜனாதிபதி மேதகு ஆர். பிரேமதாஸ அவர்களால் 'ஓசிஜசி' விருது வழங்கி இவர் கௌரவிக்கப்பட்டார்.

இஸ்லாமிய இசை உலகில் இவர்களைப் போன்றவர்களாலேயே ஆரம்பத்தில் இருந்து இன்று வரை நமது இஸ்லாமிய இசை வளர்ந்து பிரகாசித்துக் கொண்டு நிற்கின்றது என்று கூறுவது யாராலும் மறுக்க முடியாது. இத்தகைய தகவல்கள் நமது இசைத்துறை மாணவர்களுக்கு மிகவும் பிரயோசனமாகும். அவர்களுடைய இசை பற்றிய தேடல்களுக்கு இது நல்ல விமர்சன கருத்துக்களாக அமைந்துள்ளன.

**ந. வர்மிலா**
இசைத்துறை
3ம் வருடம்





# இயற்கையை திருடும் செயற்கை



பருவத்தில் மழையில்லை
பருவத்தில் காற்றுமில்லை
பருவ விளைச்சலுமில்லை
பருவத்திற்கேற்ப காலங்களுமில்லை
பஞ்பூதங்களுக்குள் பேதம் – பாவம்
இயற்கையை கொலை செய்யும் செயற்கை
கலகத்தின் பிடியில் சிக்கித்தவிக்கும் இயற்கை
காலங்களின் பிடியில்
மூழ்கித்தவிக்கும் இயற்கை
கடல் வந்து உடல் தின்பதும்
பூகம்பமாவதும் பூதங்கள் சினம்
கொண்டு பிணம் தின்ன வருவதும்
இயற்கையே ஏன் இந்த மாற்றம் – எதற்காக
எங்கள் மீது இந்த சீற்றம்
விமானம் ஏறுகிறாய் விண்ணை
தாண்டுகிறாய் விஞ்ஞானம் என்ற
பெயரில் கண்ணை தோண்டுகிறாய்
என் உடல் கூறாக்கி என்
பலம் வேறாக்கி எண்ணெய்
வளமும் நீ எடுப்பதாலென இயம்பியது
இயற்கையை இரகசியமாய் இன்றும்
செயற்கையே திருடுகின்றாய்

வு.பிரபாஜினி
இசைத்துறை
3ம் வருடம்

# குறட்டோவ்ஸ்கியின் எளிமை அரங்கில் நடிகன்

அரங்கானது தனது காலத்தில் தான் வாழும் சமூகத்தின் உள்ளுணர்வினை வெளிக்கொணர்வதாக இருக்க வேண்டும். இது விடயப்பொருட்களைச் சமூகத்திடமிருந்து பெற்று மீளவும் அவற்றைக் கலையாக்க முறைமையுடன் சமூகத்திற்கு வழங்குகின்றது. அரங்கு பற்றி ஒகஸ்தாப் போவால் அரங்கு ஏனைய கலைகளை விட சமூகத்தால் மிக இறுக்கமான முறையில் நிர்ணயிக்கப்படும் ஒன்றாகவுள்ளது. மக்களோ: அது கொள்ளும் நெருக்கமான தொடர்பும், நம்பவைப்பதில் அது கொண்டுள்ள கூடிய வலுவுமே இதற்குக் காரணமாக அமைகின்றது. அரங்கு உண்மையில் ஒரு புரட்சிகரமான ஆயுதம். இந்தக் காரணத்திற்காகத்தான் நாம் அரங்கைப் பயன்படுத்த வேண்டும் என்கின்றார். அரங்கானது எல்லாப் பண்பாடுகளிலும் உண்டு. இது மக்களை இணைக்கும் சாதனமாக இருக்கும். அதேவேளை அவர்களுக்குப் பரீட்சயமான கலைவடிவமாகவும் அமைகின்றது. அந்த வகையில் மேலைத்தேய அரங்கின் ஒரு வளர்ச்சிப் படிமுறையாகவே குறட்டோவ்ஸ்கியின் 'எளிமை அரங்கு' தோற்றம் பெற்றது. இவ்வரங்கின் சிறப்பம்சங்கள் இவ்அரங்கிற்கும், ஏனைய அரங்கிற்குமான தொடர்பு. ஒற்றுமைகள், வேற்றுமைகள் என்பவற்றை இக்கட்டுரை விபரிக்கின்றது.

## வாழ்க்கை வரலாறு

போலந்து நாட்டில் பிறந்த இவர் 20ம் நூற்றாண்டின் உலக அரங்கிலே மிகவும் வலுவான செல்வாக்குச் செலுத்திய இன்னொரு அரங்கப் பரிமாணத்தை உருவாக்கினார். ஸ்ரெனிஸ்லவஸ்கியினுடைய செல்வந்த அரங்கிற்கு எதிராகத் தோற்றம் பெற்றதே இவருடைய வறிய அல்லது எளிமை அரங்கக் கோட்பாடாகும். இவருடைய சிறுபராய குடும்ப வாழ்வு இரண்டாம் உலக மகாயுத்தம் இடம்பெற்ற காலத்தின் தாக்கத்துக்கே உட்பட்டமையால் எதிர்பாராத விதமாக சீரழிக்கப்பட்டது. அத்தோடு குடும்ப அங்கத்தவர்களும் இரு பகுதியினராயினர். இவருடைய மாமனார் கிறிஸ்தவ பாதிரியாராக இருந்த அக்காலத்தில் குரோட்டோவஸ்கியும், அவனுடைய சகோதரன், தாய் போன்றவர்களும் நாசிக் கொள்கைக்காரர்களால் துரத்தப்பட்டனர். அவர்கள் மாமனாரிடம் அடைக்கலம் புகுந்து கொண்டதும் சமயம் சார்ந்த விடயங்களைப் பேசுவதற்கு காரணமாக அமைந்தது. இவர் 1954ல் உயரரங்கப் பாடசாலை ஒன்றில் (High Teatricol School) தனது பட்டப்படிப்பை நிறைவு செய்தார். Degree in acting என்னும் பட்டத்தைப் பெற்றிருந்த இவர் மொஸ்கோ அரங்கிற் செயற்பட்ட காலப்பகுதியில் தனது பட்டப்படிப்பிற்காக 'லுனாட்கர்சி' அரங்க நிலையத்தில் நெறியாள்கைக் கற்றிருந்தார்.

மேல்நாட்டு நாடக கோட்பாட்டாளரான இவர் ஆசிய பயணங்களை மேற்கொண்டிருந்தார். இவரும் விமர்சகரான லூட்விக்கும் இணைந்து பரீட்சாத்த மேடையான 'ஆய்வுகூட நாடக மேடையை' நிறுவினார்கள். 1968ம் ஆண்டு இவரது முதல் நாடகமான 'Apocalysis um Figures' ஆற்றுகை செய்ப்பட்டு சிறந்த படைப்பாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. இவர் மருத்துவர், ஓவியர், பல்கலைக்கழக மாணவர்கள் போன்ற பல துறைகளிலிருந்தும் நடிகர்களை இணைத்து உலகின் பல பாகங்களுக்கும் சென்று தனது படைப்புகளுக்கான மூலங்களைத் தேடுவதற்காகப் பயணங்களை மேற்கொள்ளத் தொடங்கினார். இவரைப் பொறுத்தவரையில் கலை, கலைஞன், கலப்படைப்புத் தொடர்பாகத் தத்துவார்த்த சிந்தனைகள் இழையோடிக் காணப்பட்டமையால் கலை வாழ்வு தொடர்ந்து 'கலையானது எதிர்காலத்தில் உண்டாக்கும் உண்மையான கலைஞர்கள் எதிர்த்துக் கொண்டே இருப்பார்கள்.

கலையில் நானொரு புதியவன். ஆகவே எப்பொழும் நான் எதிர்ப்பைக் காட்டிக் கொண்டேயிருப்பேன். கலைத்துறையில் மெய்யான எதிர்ப்பு நித்தியமானது. அழிந்து போகாது. அழிந்து போகவிடவும் முடியாது.' எனக்குரோட்டவஸ்கி குறிப்பிட்டிருக்கின்றார்.

இவருடைய வாழ்க்கை வரலாற்றோடு இணைந்த அரங்கச் செயற்பாடுகள் நான்கு கட்டங்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

1. முதலாவது கட்டத்தில் அரங்கத் தயாரிப்புக்களில் ஈடுபட்டார்.
2. இரண்டாவது காலகட்டத்தில் 'பங்கு கொள்ளலுக்கான அரங்கு ஒன்றை நோக்கிய முயற்சி'யில் ஈடுபட்டார்.
3. மூன்றாவது கட்டத்தில் அரங்கியல் மூலகங்களைத் தேடுவதற்கான முயற்சி.
4. நான்காவது கட்டத்தில் சட்டரங்கொன்றினை உருவாக்குதல்.

இவ்வரங்கச் செயற்பாட்டை ஏனைய நாடுகளின் செல்வாக்கிற்கும் உட்படுத்தி வெற்றிகண்ட இவர் 14 ஜனவரி 1999ல் தனது இறப்பின் மூலம் அரங்க வாழ்வுக்கு ஓய்வு கொடுத்தார். எளிமை அரங்கின் சிறப்பம்சங்கள்

20ம் நூற்றாண்டின் அரங்கில் இரு பெரும் முக்கியஸ்தர்களாக குரோட்டோவஸ்கியும், ஸ்ரெனிஸ்லவஸ்கியும் காணப்படுகின்றனர். ஸ்ரெனிஸ்லவஸ்கி அரங்கின் உண்மையையும், குரோட்டோவஸ்கி அரங்கில் உண்மையையும் தேடினார்கள். குரோட்டோவஸ்கியைப் பொறுத்தவரை 'அரங்கென்பது சமூகத்தை இணைப்பதறகான குழுமச்சடங்காகும். இங்குதான் அவர்களது இன அடையாளங்களையும், தொன்மங்களையும் வேர்களுக் குணர்த்தி பொய்மைகளையும், மூடநம்பிக்கைகளையும் களையக் கூடியதாக இருக்க வேண்டும்.' எனக் குறிப்பிட்டுள்ளார். இவரது அரங்கு மூலவளங்களில் வறியதாகவும், படைப்பின் வெளிப்பாட்டில் செல்வந்த அரங்காகவும் இருந்தது.

எளிமை அரங்கினை உருவாக்க அவர் தன்னைத்தானே கேட்டுக்கொண்ட வினாவாக அரங்கில் வேடஉடை, ஒப்பனைகள், ஒளியமைப்பு, மேடைப்பொருட்கள், கைப்பொருட்கள், இலக்கியப்பாடம், கேட்போர் கூடம் என்பன இல்லாமல் அரங்க நடவடிக்கைகள் மேற்கொள்ள முடியாதா? என்பதாக இருந்த இதற்கு அவருக்குக் கிடைத்த பதில் 'ஆம்' என்பதாகும். இதனை அவர் ஏற்றுக்கொண்டமையால் தான் மேற்கூறப்பட்ட அரங்க மூலகங்கள் இல்லாமல் தனது அரங்க நடவடிக்கைகளைச் சிறப்புற மேற்கொள்ள முடியும் என்ற தீர்க்கமான முடிவுக்கு வந்தார். இவருடைய கருத்துப்படி வேடஉடை, ஒப்பனைகள், ஒளியமைப்பு, ஒலி விளைவுகள் இல்லாமற்கூட அரங்கு இருக்கலாம். ஆனால் நடிகருக்கும், பார்வையாளருக்குமான உறவு நிலை இல்லாமல் இருக்க முடியாது என்ற தீவிரமான முடிவினை கொண்டிருந்தார்.

குரோட்டோவஸ்கியினுடைய அரங்கச் செயற்பாடுகளில் நடிகர், பார்வையாளர் போன்றவர்களுக்கான உறவு நிலை நெருக்கமாகக் காணப்பட்டது. அரங்கில் நிகழ்த்துபவன் முக்கியத்துவப்படுத்தப்படுவது போன்று அதனைப் பார்ப்பவனும் முக்கியத்துவப்படுத்தப்படுகின்றான். இந்த அத்தியவசியமான செயலைக் கொண்ட இரண்டு மக்கள் குழுக்களுக்கிடையிலான இவ்வெதிர்ப்படுகை தான் 'எளிமை அரங்கின்' சிறப்பம்சங்களாகும். செல்வந்த அரங்கு அதிக செலவு கூடிய அரங்கு எனக்குறிப்பிடும் இவர் இவ்வரங்கை எல்லாத்தரப்பினரும் பயன்படுத்தி அளிக்கைகளைச் செய்ய முடியும். எனத்திட்ட வட்டமான முடிவினை எடுத்ததன் விளைவாகவே குறைந்த செலவுடன் ஆற்றுகைகளைச் செய்யக்கூடிய பரீட்சார்த்த முறையிலமைந்த எளிமை அரங்கைத் தோற்றுவித்து அரங்க வரலாற்றில் வெற்றி கண்டார்.

எளிமை அரங்கில் நடிகன்

20ம் நூற்றாண்டில் புதியதொரு திருப்பு முனையாக அமைந்த இவரது எளிமை அரங்கு, நடிகன், அவன் பெறும் பயிற்சிகள், அவன் பார்வையாளருடன் கொள்ளுகின்ற உறவு, அவன் பயன்படுத்துகின்ற அரங்கவெளி, ஒளியமைப்பு, வேடஉடை, ஒப்பனை, கைப்பொருட் பயன்பாடு, காட்சியமைப்பு, இசை என்பவற்றைப் பயன்படுத்திய முறைகளில் தனித்துவங்களை வெளிப்படுத்தி நிற்கின்றது. இவரது அரங்கானது நடிகனை மையப்படுத்தியதாகவே அமைந்துள்ளது. இங்கு நடிப்பென்பது 'நடிகனானவன் பிரதான ஆற்றுவோனாகத் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு தனது சொந்த உடல் அவயவங்களினால் நடிப்புத்துணைச் சாதனங்களாக இருந்த ஒளியமைப்பு, இசையமைப்பு, வேடஉடை, ஒப்பனை, காட்சியமைப்புப் போன்றவற்றை உருவாக்கி நடிக்க வேண்டியவனாக இருந்தான். இவர் பணத்துக்கும், கைதட்டலுக்கும் அவாவுகின்ற வழமையான தன்முனைப்பு வகை சார்ந்த நடிகனிலிருந்து வேறுபட்ட நடிகனை உருவாக்கினார். இங்கு நடிகனானவன் பல்வேறு ஒலி அதிர்வினைகளாலும், அபிநய எதிர்வினைகளாலும் பதியப்படும் ஒருபயணத்தில் புறப்படுகின்றான். அவன் நியாயமான முறையில் அமைந்ததொரு இணைந்த வெளிப்பாட்டாலும், பாகத்தை கட்டுப்பாட்டோடு கட்டமைக்கப்படுவதாலும், சொந்தப்படிமுறை என்பது ஒரு விடுவிப்பாக அமையாது என்றும் அது சாயலற்றதொரு நிலைக்குச் சென்று அழிந்து விடும் என்றும் தான் நம்புவதாகக் குரோட்டோவஸ்கி குறிப்பிட்டிருக்கின்றார்.

எளிமை அரங்க நடிகன் தான் கூறவந்த செய்தியைப் பார்வையாளருடன் தொடர்புபடுத்துவதற்காகப் பலபல அரங்கியற் கோலங்களைப் படைப்பதற்குத் தனது உடலையும், குரலையும், கற்பனையையும் இணைத்து வெளிப்படுத்தி வெற்றி காண்கின்றார். இங்கு உருவாக்கப்பட்டிருக்கின்ற நடிகன் தனது சுயதேடலின் மூலம் பல்வேறு சமூக மட்டங்களிலும் அவதானிக்கப்பட்ட விடயங்களை இணைத்து எந்த விதமான மனச்சிக்கலோ, மனக்குழப்பமோ இல்லாது தன்னை முற்று முழுதாகப் பார்வையாளர்களுக்கு கையளித்துவிடுகின்ற நடிப்பாக அமைகின்றது. இங்கு நடிகர் பெறும் பயிற்சியின் மூலம் அரங்கில் தன்னையும் தன் உடலையும் உணர்ந்து கொண்டு தான் ஏற்றுக் கொண்ட பாத்திரங்களின் செய்கைகள், உணர்ச்சிகள் ஆகியவற்றை விளக்கி வெளிப்படுத்தப்படும் உணர்ச்சிகளைச் சிறுமையாக்காமல் உயர்த்திக் காட்டும் வல்லமை கொண்டவனாகச் செயற்படுகின்றான்.

குரோட்டோவஸ்கியைப் பொறுத்தவரை தனது தயாரிப்பு முறைகளில் பகிரங்கம், சுதந்திரம் என்ற 2 கூறுகளைப் பயன்படுத்தினார். இவரது மனித செயற்பாடுகளில் அசைவுகள், குரல், லயம், வெளி என்பன அரங்கச் செயற்பாட்டின் பணிகளாகவே உள்ளன. இவரது சடங்கு அரங்கானது,

1.அசைவுகள் 2.நடனங்கள் 3.பாடல்கள்

4.மந்திர ஜெபங்கள் 5.மொழிக்கட்டமைப்பு 6. லயம்

7.வெளி என்பவற்றை தக்கபடியாக பயன்படுத்தி உருவாக்கப்பட்டது.

இவருடைய எளிமை அரங்கானது ஒகஸ்தாப்போலின் ஒடுக்கப்பட்டோரின் அரங்கு, பாதல்சர்க்காரின் 3வது அரங்கு, சிதம்பரநாதனின் சமூக மாற்றத்துக்கான அரங்கு என்பவற்றுடன் நெருங்கிய ஒற்றுமைத்தன்மை கொண்டது. ஆகவே காலத்திற்கு காலம் பல்வேறு அரங்கக் கோட்பாடுகள் தோற்றம் பெற்றிருக்கிறது. அரங்கத்துறையில் ஏற்பட்ட வளர்ச்சியினாலும் காத்திரமான தன்மையினாலும் அரங்கக்கோட்பாடுகள் ஒவ்வொன்றும் நீண்ட காலமாக நிலைத்து நிற்காமல் போனமையும் புதிய அரங்கக் கோட்பாடுகள் தோற்றம் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

**பூ.நிசாந்தி,**
**2ம் வருடம்,**
**நாடகத்துறை.**

# இசையின் மேன்மையும் ஆற்றலும்



இசை என்ற சொல்லுக்கு இசைய வைப்பது என்பது பொருள். மனிதனையும் மற்ற உயிரினங்களையும் ஏன் இறைவனையுமே இசைய வைக்கின்ற இணங்கச் செய்கின்ற ஓர் அரும் சாதனை இசை. ஆங்கிலத்தில் இசையை Music என்று அழைப்பர். Music என்ற சொல் Mousa என்ற கிரேக்க சொல்லிலிருந்து வந்துள்ளது. Muses என்ற கிரேக்க தேவதைகள் விரும்பி ஊக்குவித்த ஒரு கலை. பின்பு Music என்று அழைக்கப்பட்டது. இசை என்பது கட்டுப்பாடுள்ள இனிமையான ஒலியாகும். கட்டுப்பாடில்லாத, இனிமையைத்தராத ஒலியை இரைச்சல் என்று கூறுகிறோம். இசை ஒலியை வடமொழியில் நாதம் என்று அழைக்கின்றனர்.

மக்கள் வாழ்க்கைக்கு இசை இனியதோர் துணை. முந்நாளில் இலக்கியங்கள் கூறுகையில் உழைப்பவரின் களைப்பினைப் போக்கும் இசையாற்றல் கள்வரின் உள்ளத்தை மயக்கி அவர்தம் அடாத கொடுமைகளிலிருந்து வழிச்செல்வோரைக் காத்ததாக கூறுகின்றன. சங்க காலத்தில் கூறப்பட்ட இந்த உண்மை நமது தலைமுறையிலும் கூட நடைபெற்றிருக்கிறது. பிடில் எனும் இசைக்கருவியினை இசையரங்கிற்கு அறிமுகமாக்கிய இசையண்ணல் வடிவேல் பிள்ளையின் பிடில் இசையைக் கேட்டு மயங்கிய வழிப்பறியாளர் தாம் கவர்ந்த பொருளை மட்டுமன்றி தங்களிடம் இருந்த பொருளையும் வழங்கிப் பாராட்டினாராம் என்று கூறுவதிலிருந்து இசையின் மேன்மை புலப்படுகிறது.

குறிப்பாக வண்டுகளின் இசை கேட்டுப் புதர்களும் வாய் மலர்ந்தன என்று இசை பற்றிய ஒரு குறிப்பும் உண்டு.

'அரும்பருகே சுரும்பருவ அறுபதம் பண்பாட அணிமயில்கள் நடமாடும் அணிபொழில் சூழ் அயலின் கரும்பருகே கருங்குவளை கண்வளரும் கழனிக் கமலங்கள் முகமலரும்.......'

என்று ஏழிசையாய் இசைப்பயனாய் இறைவனைக் காணும் சுந்தரர் இசையியல்பை மேற்கூறிய பாடலில் தெளிவாக எடுத்துக்காட்டுகிறார்.

இவ்வாறு காலத்தால் முந்திய இசையானது இயற்கையிலே பிறந்து இனிமையிலே வடிவெடுத்த வடிவமாகும். இறைவன் இசை வடிவமாய் இருக்கிறார் என்பது ஒரு முதுமொழியாகும். அப்பர் பெருமான் 'ஓசைஒலியெல்லாம் ஆனாய் நீயே' என்று இறைவனை எண்ணி உள்ளம் உருகுகிறார். சம்பந்தர் இறைவனை 'பண்ணமர் வீணையினான்' என்று நாம் கேட்டு வருகிறோம். இவ்வாறு இறைவனுக்கும், இசைக்கும் நெருங்கிய தொடர்புடையதால் இசை தெய்வீகக் கலை என்றும் அழைக்கப்படுகிறது.

நாம் நமது வாழ்க்கையில் இசையை நோக்குமிடத்து பிறப்பில் இருந்து இறக்கும் வரை மனிதன் இசையில் ஊன்றியிருக்கின்றான். அழும் குழந்தை தாலாட்டுப்பாட்டைக்

கேட்டவுடன் அழுகையை நிறுத்திவிட்டு தூங்க ஆரம்பிக்கிறது. தூக்கமில்லாமல் அல்லல்படுவோர் அனைவரும் நல்ல இசையை ஒலிப்பதிவு நாடா வழியாக கேட்பதன் விளைவாக நல்லுறக்கம் கொள்வதாகவும் ஒவ்வொரு நாளும் குரலிசைப்பயிற்சி செய்வதால் குறட்டையிடும் பழக்கத்தை நீக்கமுடியும் என்றும் மருத்துவ ஆய்வாளர் டாக்டர். எலிசபெத் ஸகாட் கூறுகிறார். உடல் நலம், மனநலம் குன்றிய நோயாளிகளும் மனஇறுக்க நிலையால் பாதிக்கப்பட்டவர்களும் நல்ல இசையைக் கேட்பதால் நற்பயன் அடைவதாக மருத்துவர்கள் கூறுகின்றனர்.

வயது முதிர்ச்சி காரணமாக நினைவாற்றலை இழந்தவர்கள் நல்லிசை வழியாக அதை மீண்டும் பெறக்கூடும் என்றும் மாணவ மாணவியர் இசை மூலமாக பல அரிய கருத்துக்களைப் பெறவும் இவ்விசை துணைபுரிகிறது. பக்திப்பாடல்கள் மக்கள் மனதை இறைவன் பக்கம் ஈர்க்கின்றன. கடின வேலை செய்யும் உழைப்பாளிகள் தங்கள் களைப்பைத் தீர்க்க பாடிக்கொண்டே வேலைசெய்கின்றனர். இறக்கும் போதும் இறந்தவரின் உடலைப்புதைப்பதற்கு எடுத்துச் செல்லும் போதும் ஒப்பாரிப்பாடல் பாடப்படுகிறது. எனவே பிறப்பிலிருந்து இறப்பு வரை மனிதன் இசையோடு இணைந்துள்ளான் என்பதை உணர்கிறோம்.

குறிப்பாக இசையின் மேன்மையைப் புலப்படுத்த ஓர் இசைக்கலைஞர் தீபக் என்ற ராகம்பாடி நெருப்பு உண்டாக்க செய்ததாகவும் தீட்சிதர் அமிர்தவர்சனி ராகம்பாடி மழையை வருவித்ததாகவும் வரலாற்றில் காண்கிறோம். இந்த இராகத்தைப் போல நீலாம்பரி இராகம் பாடினால் வரட்சி காலத்திலும் மழையைப் பெறலாம் என்று பெரிதும் நம்பப்படுகிறது. மேலும் பசுக்கள் இனிய இசையை கேட்பதின் விளைவாக நிரம்பப்பால் கொடுப்பதாகவும் பயிர்களும் நன்கு வளர்வதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர். நோக்குமிடத்து இவ்விசை மனிதனின் அரும்பெரும் சாதனம். ஆகவே இசை மனித வாழ்வை வளப்படுத்துவதற்காக இறைவன் அளித்துள்ள பெருங்கொடை என்றால் அது மிகையாது.



கோகிலா குணராசா
இசைத்துறை
3ம் வருடம்

# சுவாமி விபுலாநந்த இசைநடன கல்லூரி, பல்கலைக்கழகத்தோடு இணைக்கப்பட முன்பும் சுவாமி விபுலாநந்த அழகியற் கற்கைகள் நிறுவகமாக, உருவாகிய பின்பு ஏற்பட்ட மாற்றங்களும், வளர்ச்சிப் படிகளும்

மரபுக் கலைகளுக்கு பிறப்பிடமான மட்டக்களப்பு மண்ணில் 1982ம் ஆண்டு பங்குனி மாதம் 26ம் திகதி முன்னால் பிரதேச அபிவிருத்தி அமைச்சர் மாண்புமிகு "திரு. செல்லையா இராசதுரை" அவர்களால் கல்லடி உப்போடையில் முத்தமிழ் வித்தகர் திருநாமத்தில் ஒரு இசைக்கல்லூரி நிறுவுவதற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. அன்றைய மதியமே அக்கல்லூரிக்கு முதல்வராக நியமிக்கப்பட்ட தமிழக ஆஸ்தான வித்துவான் தஞ்சாவூர் க.பொ.சிவானந்தம் அவர்களால் விபுலாநந்த மணிமண்டபத்தில் சம்பிரதாய பூர்வமாக பெரியோர்களின் ஆசியுடன் இக்கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. தவிர்க்க முடியாத காரணத்தினால் தனது தாயகம் திரும்ப வேண்டி இருந்த க.பொ.சிவானந்தம் அவர்கள் கல்லூரி நிர்வாகத்தை 'சங்கீத பூஷணம் திரு. மு.சு. நடராசா' அவர்களிடம் ஒப்படைத்தார்.

இதனைத் தொடர்ந்து வைகாசி 29ம் திகதி சுபமுகூர்த்தத்தில் மட்டக்களப்பு இராம கிருஷ்ண மிஷன் தலைவர் 'சுவாமி ஜீவனானந்தஜி' அவர்களால் விஷேட பூஜை நடாத்தப்பட்டு மாணவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டு கல்லூரி அதிபர் 'சங்கீத பூஷணம் திரு. முசு. நடராசா' அவர்களாலும் மற்றும் சக போதனாசிரியர்களாலும் மாணவர்களுக்கு வாய்ப்பாட்டு, வீணை, வயலின், நடனம் ஆகிய கலைகள் வித்தியாரம்பம் செய்யப்பட்டது.

மேலும் இக்கல்லூரியின் பாடத்திட்டமானது அண்ணாமலை பல்கலைக்கழக இசைப்பிரிவின் பாடத்திட்டத்தை மையமாக வைத்தே அமைக்கப்பட்டிருந்தது. இங்கு வாய்ப்பாட்டை பிரதான பாடமாக கொள்பவர்கள் துணைப்பாடமாக ஒரு வாத்தியத்தையும், வாத்தியம், நடனம் என்பவற்றை பிரதான பாடமாக கொள்பவர்கள் துணைப்பாடமாக வாய்ப்பாட்டையும் பயிலவேண்டும் என வரையறை செய்யப்பட்டது. இங்கு கலை பயிலும் மாணவர்கள் நான்கு வருட கால பயிற்சியின் பின் 'இசைக்கலைமாமணி', "பரத கலைமாமணி" என்ற பட்டத்தைப் பெற்றனர். முத்தமிழின் மாண்பை பறைசாற்றும் இக்கல்லூரி அமைவதற்கு பரந்த நிலத்தை நிறைந்த மனத்துடன் தந்துதவியது இராமகிருஷ்ண ஸ்தாபனத்தார் ஆகும்.



யாழ் இராமநாதன் நுண்கலைக்கல்லூரியைப் போன்ற ஒன்றை இங்கு நிறுவுவதும், கர்நாடக இசையும், பரதநாட்டியமும் இம்மண்ணில் வேரூன்றி தளைக்க வேண்டும் என்ற செல்லையா இராசதுரை அவர்களது நோக்கின் பேரிலே இக்கல்லூரியினை நிறுவ வழியமைத்தார். எனவே இக்கல்லூரி அவரது அமைச்சான 'இந்துக்கலாச்சார அமைச்சின்' கீழ் இருந்தது. இவரின் பின் அமைச்சராக வந்த 'பி.பி.தேவராஜ்' இக்கல்லூரியின்

முன்னேற்றத்தில் பங்கெடுத்தார். குறிப்பாக இவரின் செயலாளரான "சண்முகலிங்கம்" இக் கல்லூரியின் நலன் கருதி பல பணிகளை மேற்கொண்டவராவார். இக்கல்லூரியின் பாடத்திட்டத்தை ஒழுங்கமைத்தவர் சண்முகலிங்கமே ஆவார்.

அக்காலத்தில் இவ் இசைநடனக் கல்லூரி வழங்கிய பட்டங்கள் கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப் பட்டமையினால் இதனைக் கிழக்குப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கும் படி மாணவர்கள் வேண்டுகோள் விடுத்தனர். பலபோராட்டங்களின் பின் 1999ல் இது கிழக்குப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டு இதனை பல்கலைக்கழக அந்தஸ்துடன் உயர்த்தும் முயற்சிகளை கிழக்குப் பல்கலைக்கழகம் மேற்கொண்டது. 18 வருடஙகள் தாண்டியதன் பின்பு கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்து கலாச்சார அமைச்சராக இருந்த போது கிழக்குப் பல்கலைக்கழகத்தோடு சம்பிரதாய பூர்வமாக 2001ம் ஆண்டு சித்திரை 20ம் திகதி இணைக்கப்பட்டது. (இக்கல்லூரி "சுவாமி விபுலாநந்த அழகியற் கற்கைகள் நிறுவகம்" என பெயர் மாற்றமடந்த). பல்கலைக்கழகமாக அந்தஸ்து பெற்ற போதிலும் பல்கலைக்கழக செயற்பாடுகள் குறைவாகவே காணப்பட்டது.

கல்லூரியாக இருந்த போது பதிலதிபராக கடமையாற்றிய திருமதி. பாலாம்பிகை இராஜேஸ்வரன் அவர்களே மீண்டும் பதிலதிபராக நியமிக்கப்பட்டார். ஏற்கனவே போதனாசிரியராக இருந்தோரில் நான்கு பேருக்கு உயர்கல்வி பயிற்சி அளித்து விரிவுரையாளர்களாகவும் ஏனையோர் போதனாசிரியர்களாகவும் நியமிக்கப்பட்டனர். இக்கல்லூரி பல்கலைக்கழகமாக மாற்றப்பட்ட போது நிறுவக இணைப்பாளராக 2001ல் இருந்து 2004ம் ஆண்டு வரை பேராசிரியர் சி.மௌனகுரு அவர்கள் இருந்தார். இவர் அக்காலத்தில் பல்துறை அறிஞர்களை சந்தித்து புனருத்தாரணங்களை மேற்கொள்ளும் பாரிய பணியினை மேற்கொண்டார். இதன் பின்னர் பேராசிரியர் அம்மன்கிளி முருகதாஸ், திரு.பாலசுகுமார் ஆகியோர் இணைப்பாளராக கடமை யாற்றினார்.



பின்னர் 2005ம் ஆண்டில் வாய்ப்பாட்டுக்கு இருவர் வயலினுக்கு மூவர், வீணைக்கு இருவர், மிருதங்கத்திற்கு இருவர் என விரிவுரையாளர்கள் கடமையாற்றினர். 2000ம் ஆண்டில் கல்லூரியின் அதிபராக இருந்த திருமதி. கமலாதேவி ஞானதாஸ் ஓய்வு பெற்றதன் காரணத்தால் நடனத்திற்கு நிரந்தர விரிவுரையாளர்கள் இருக்கவில்லை. போதனாசிரியராக 2006ல் செல்வி. சர்மிளா கொரெய்ரா கடமையாற்றினர். மேலும் தமிழ் நுண்கலை, தென்னிந்திய பண்பாட்டு வரலாறு ஆகிய பாடங்களுக்கு பகுதி நேர விரிவுரையாளராக திரு. சு. ஸ்ரான்லி பிரபாகரன் கடமை புரிந்தார். சமஸ்கிருதத்திற்கு திரு. M.பாலகைலாசநாதசர்மா அவர்களும் விரிவுரைகளை நிகழ்த்தினார்.

பட்டப்படிப்பு ஆரம்பிக்கப்பட்ட பின்னர் முதலாவது மாணவர் குழுவாக இந்நிறுவனம் கல்லூரியாக இருந்த போது டிப்ளோமா பட்டம் பெற்ற மாணவர்களும், கண்டி வெல்வூட் கல்லூரியில் டிப்ளோமா பட்டம் பெற்ற மாணவர்களும் இணைக்கப்பட்டனர். இவர்களது கற்கைநெறி இரண்டு வருட விலக்கு வழங்கப்பட்டு இரண்டு வருடகாலமாக காணப்பட்டது. இவர்களுக்கு விரிவுரை வழங்க திரு.பத்மலிங்கம் யாழ் பல்கலைக்கழகத்தில் இருந்து மாற்றம் பெற்று வந்தார். அத்தோடு ஒப்பந்த அடிப்படையில் திரு. A.K. கருணாகரன் அவர்களும் இணைத்துக் கொள்ளப்பட்டார்.

இக்கால கட்டத்தில் பரீட்சகர்களாக வாய்ப்பாட்டுக்கு கலாபூஷணம் ஜீவன்ஜோசப் அவர்களும், சங்கீத வித்துவான் A.K. கருணாகரன் அவர்களும், பேராசிரியர் S. ராமநாதன் (சென்னை பல்கலைக்கழகம்) போன்றோரும் நடனத்திற்கு கலாபூஷணம் திருமதி. லீலாம்பிகை செல்வராசா, திருமதி. ஹரிதேவி ஜெயசுந்தரா, கலாபூஷணம் திருமதி. கலாதேவி ஞானதாஸ் போன்றோர் கடமை புரிந்தனர். முதலாவது பட்டம் பெற்ற மாணவர்களுள் இசைப்பிரிவில் திருமதி. ஜயந்தினி, நடனத்திற்கு திருமதி. மாதுமையாள் வரதராஜனும் உதவி விரிவுரையாளராக நியமிக்கப்பட்டனர்.

இதன் பின்னர் நிறுவகத்தின் பணிப்பாளராக பதிலதிபராக இருந்த திருமதி. பாலாம்பிகை இராஜேஸ்வரன் அவர்களே நியமிக்கப்பட்டார். மேலும் துறைசார்ந்த இணைப்பாளராக இசைக்கு திருமதி. பிரியதர்ஷினி ஜெதீஸ்வரன் அவர்களும் நடன, நாடகத்திற்கு திரு. M.பாலகைலாச நாதசர்மா அவர்களும் கட்புல தொழில் நுட்பகலைக்கு திருமதி. ஜயந்தி திஸாநாயக்க அவர்களும் கடமைபுரிந்தனர். இதன்பின் நடனநாடக துறைக்கும் திருமதி. வத்சலாதேவி சங்கரநாராயணனும், இதன்பின் தற்போது இத்துறைக்கு திரு. விமல்ராஜ் இணைப்பாளராக இருந்தார். கட்புல தொழில் நுட்ப துறைக்கு திரு.சிவரெட்ணம் அவர்களும் இசைத்துறைக்கு 2009-2010ல் செல்வி சியாமளாங்கி கருணாகரனும் தற்போது திருமதி. பிரியதர்ஷனி ஜெதீஸ்வரன் அவர்களும் இணைப்பாளராக கடமை புரிகிறார்.

2005/2006 ல் இருந்து க.பொ.த. பரீட்சை பெறுபேற்றின் வெட்டுப்புள்ளி அடிப்படையிலும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் இவ்நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட நேர்முகப்பரீட்சையிலும் தேர்வு செய்யப்பட்ட மாணவர்களே இங்கு கல்விபயில அனுமதிக்கப்பட்டனர். ஆனால் தற்போது 2010/2011 ல் வருகை தந்திருக்கும் மாணவர்கள் கல்வி உயர்தரப்பரீட்சை வெட்டுப்புள்ளியின் அடிப்படையில் மட்டுமே தெரிவு செய்யப்பட்டுள்ளனர். 2005/2006 ல் இசை, நடனம் ஆகிய துறைகளில் மட்டுமே மாணவர்கள் அனுமதிக்கப்பட்டனர். ஆனால் இதன் பிற்பாடு 2006/2007இல் இசை, நடனம் ஆகியதுறைகளோடு நாடகமும், அரங்கியலும் கட்புல தொழில்நுட்ப கலைகள் ஆகிய துறைகளிலும் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

## மாணவர் விபரம்

2005/2006 ஆம் ஆண்டில்

| | |
|---|---|
| இசை | 35 |
| நடனம் | 27 |
| மொத்த மாணவர்கள் | 62 |

2006/2007 ஆம் ஆண்டில்

| | |
|---|---|
| இசை | 47 |
| நடனம் | 23 |
| நாடகமும் அரங்கியலும் | 49 |
| தொழில் நுட்பக்கலை | 08 |
| மொத்த மாணவர்கள் | 127 |

2007/2008 ஆம் ஆண்டில்

| | |
|---|---|
| இசை | 31 |
| நடனம் | 30 |
| நாடகமும் அரங்கியலும் | 54 |
| தொழில் நுட்பக்கலை | 47 |
| மொத்த மாணவர்கள் | 162 |

2008/2009 ஆம் ஆண்டில்

| | |
|---|---|
| இசை | 46 |
| நடனம் | 34 |
| நாடகமும் அரங்கியலும் | 48 |
| தொழில் நுட்பக்கலை | 50 |
| மொத்த மாணவர்கள் | 178 |

2009/2010 ஆம் ஆண்டில்

| | |
|---|---|
| இசை | 79 |
| நடனம் | 51 |
| நாடகமும் அரங்கியலும் | 54 |
| தொழில் நுட்பக்கலை | 50 |
| மொத்த மாணவர்கள | 234 |

## விரிவுரையாளர்கள் விபரம்

| | |
|---|---|
| Mrs. B. Rajashwaran | Director, Senior Lecturer Gr. II |
| Mrs. V. Sangaranarayanan | Lecturer (Prob) |
| Miss. S. Subramaniam | Lecturer (Prob) |
| Mr. V. Sritharan | Lecturer (Prob) |
| Mrs. P. Jetheeswaran | Lecturer (Prob) |
| Mrs. J. Dissanayake | Lecturer (Prob) |
| Miss. K. Siyamalangi | Lecturer (Prob) |
| Mr. EN. Wads Worth | Lecturer (Prob) |
| Mrs. A. Bright | Lecturer(Prob) |
| Mrs. G. Mahendran | Lecturer (Prob) |
| Mrs. T. Prabagar | Lecturer (Prob) |
| Mrs. J.Vignarajan | Lecturer (Prob) |
| Mrs. CS. Ranjithkumar | Lecturer (Prob) |
| Mrs. V. Paheerathan | Lecturer (Prob) |
| Mr. A.Vimalraj | Lecturer (Prob) |
| Mrs. J. Gnanadas | Lecturer (Prob) |
| Miss. T.Ushanthy | Lecturer (Prob) |
| Miss. R. Thushiyanthy | Lecturer (Prob) |
| Mr. T. Pratheepan | Lecturer (Prob) |
| Miss. S. Nirmaleswari | Lecturer (Prob) |
| Mr. K. Mohanathasan | Lecturer (Prob) |
| Mrs. Uma Srishanker | Lecturer (Prob) |
| Mr. S.Sivaratnam | Lecturer (Prob) |
| Mr.R. Pragash | Lecturer (Prob) |
| Mr. M. Balakailasanthasarama | Senior Lecturer Gr.II |
| Mr. B. Prashanthan | Asst. Librarian |
| Mr. S. Sriharan | Instructor in Com. Tech. Gr. II |
| Mr. T. Vijeyakumar | Snr. Asst. Registrar |
| Mrs. SA. Nirosha Lalani | Snr. Asst. Bursar |
| Mr. JM. Jeromy mark | Temp. Asst. Lect – 2008-2010 |

திரு. சத்தியசீலன் அவர்கள் இந்நிறுவனத்தில் முதலாவது சிரேஸ்ட உதவி பதிவாளர் பொறுப்பில் இருந்தார். பின்னர் 2006ல் சுவாமி விபுலானந்தா அழகியற்கற்கைகள் நிறுவகத்துக்கென்றே சிரேஸ்ட உதவிப் பதிவாளராக திரு.விஜயகுமார் அவர்கள் நியமிக்கப்பட்டார். இதே போல் கிழக்குப்பல்கலைக் கழகத்தின் நிதியாளரின் கீழேயே இங்கு நிதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. 2010ல் இந்நிறுவனத்துக்கென நிதியாளராக S.A. நிரோசாலலாணி நியமிக்கப்பட்டார்.

நூலகம் பற்றி....

கல்லூரியாக இருக்கும் போது ஒரு சிறிய அறையில் நூலக சட்டதிட்டங்களுக்கு உட்படாமலே நூலகம் இயங்கியது. பின்னர் 2005ம் ஆண்டு பல்கலைக் கழகமாக மாற்றப்பட்ட பின்பு கிழக்குப்பல்கலைக் கழகத்தின் கீழ் உதவி நூலகராக பிரசாந்தன் நியமிக்கப்பட்டார். இவரின் கீழ் ஒப்பந்த ஊழியராக ஒருவர் பணியாற்றினார். பின்னர் இந்நிறுவகத்தின் பிரதான மண்டபத்தின் முற்பகுதியில் நூலகம் இடமாற்றப்பட்டு, 2000 சதுர அடியில் விரிவாக்கப்பட்டு 5500 புத்தகங்களுக்கு மேல் தன்னகத்தே கொண்டு இயங்கி வருகின்றது.

மேலும் இந்நிறுவகத்திலே மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்களுக்கென சௌக்கிய பராமரிப்பு (மருத்துவ சேவை) நிலையம் அமைந்துள்ளது. சேவையினை வழங்வதற்கும், அவசர மருத்துவ சேவையை வழங்கும் பொருட்டு வருகை தரு மருத்துவர் ஒருவரும், தாதியார் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார்.

மேலும் பல்கலைக் கழகத்தினுள் விளையாட்டு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவ்விளையாட்டு செயற்பாடுகள் தொட்ரபில் விளையாட்டுக்கு பொறுப்பான விரிவுரையாளர்கள் உடற்கல்வி போதனாசிரியர்கள் விளையாட்டு குழுவினர் மற்றும் விளையாட்டு ஆலோசனைக் குழுவினர் பொறுப்பாக உள்ளனர். அகில இலங்கை பல்கலைக் கழகத்திற்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகளில் எமது நிறுவனத்தைச் சார்ந்த மாணவர்களும், தங்களின் அதிசிறந்த திறமைகளை வெளிக்காட்டினார்கள்.

முத்தமிழ் வளர்த்த விபுலானந்தருக்கு வெறுமனே கட்டுரைகள், நினைவு விழாக்கள், உருவச்சிலைகள் போதாது என நினைத்து அவற்றை விட உயர்ந்த வகையில் என்றென்றும் முத்தமிழ் வித்தகரின் பெயர் காலத்தால் அழியாது நிலைக்க வேண்டும் என்ற உயரிய சிந்தனையின் வெளிப்பாடாக நிறுவப்பட்ட இவ்விசை நடனக்கல்லூரி பல்கலைக்கழகமாக வளர்ச்சி அடைந்த போதிலும் என்றும் விபுலானந்தரின் புகழ் நிலைக்க வைப்பதும், விபுலானந்தரின் எண்ணங்கள் நிலைக்க வைப்பதுமான பொறுப்பு கலைத்தாதுவராக காலத்துக்கு காலம் இந்நிறுவகத்துக்கு வருகை தரும் மாணவர்கள் கையிலே தங்கியுள்ளது.

சு.தனுஷா
4ம் வருடம்
இசைத்துறை

# இசையியல் தத்துவம்

இயற்றுதல் நிகழ்த்துதல் பயிற்றுதல் யாவும்
இசையியலாகிப் பண்பாட்டினுள் அடங்கும்
வியப்புடன் மென்மையும் முரணிலாத் தன்மையும்
விதந்திடும் மகிழ்ச்சியிலாழ்த்தியே நிற்கும்

துன்பமகற்றி இன்பத்தில் வாழ்த்தும்
துயரற்ற வாழ்வு இசையினால் நிலைக்கும்
பண்புயர் நாட்டியமும் கவிதையும் கலைகளும்
பரந்திடும் வேரென இசை ஊன்றி நிற்கும்



மொழியினால் புகழ முடியாத இடமெல்லாம்
முரணிலா இசை புகழ்ந்துயர்ந்துமே நிற்கும்
அழிவிலா ஆன்மாவின் பேச்சொலியாகி
அசைந்திடாதமிர்தமாய்க் கவர்ந்துமே ஈர்க்கும்

தெழிற்றுறை ஊக்கியாய் இசையுயர்ந்தோங்கும்
தொடர்ந்தது நோயாளி குழந்தையைத் தடவி
விழிப்புடன் உறங்கிட வழிவகை செய்யும்
விலை நிகரில்லாத இசையியல் இதுதான்

உள்ளம் தெரிந்து ஊக்கமும் அறிவும்
உடற்சுறு சுறுப்புடன் உயர்களிக்கும்
தெள்ளமுதான இசையியல் தத்துவம்
தெளிந்த அறிவுடன் உலகெலாம் பரவும்



இன்னிசை ஒத்திசை தொகையிசை என்றெல்லாம்
பண்ணிசை ராகங்கள் பரப்பிடும் இயல்பை
மண்ணிடை மனித குலத்துக் களித்து
மாண்புடன் பெருங்கொடை யென இசை ஓங்கும்

சத்தமே செவிக்கு அருவருப்பாகினால்
சரளமாய் இசை இன்பமளிக்கும்
இப்பெரும் இசையியல் தத்துவம் நோக்கிட
அறிவுடை மேதைகளாய் ஆய்வுகள் செய்வீர்

த.சிந்துஜா
இசைத்துறை
3ம் வருடம்

# குருதிக் குறிப்பு



என் பிறப்பின் மூல மந்திரங்களைத் தேடி நான்
தொலைகின்றேன் —நான்
அநாவசியமான வெளியீடுதானே
யாரிடமோ கேட்கவும் முனைகின்றேன்.
எங்கள் தேசத்தில் நிகழுகின்ற
ஒவ்வொரு உயிப்புக்களும்
பலிகொடுப்புக்காக
நேர்ந்து விடப்படுகின்றது

அம்மாவே என்னை மீண்டும்
உன் கருவறைக்குள் எடுத்துக்கொள்
தாய்க் குலமே உங்கள் பிள்ளைகளை
கருவறைக்குள் சிறையடைப்புச் செய்யுங்கள்
நிச்சியக்கப்பட்ட தேசம்
எமக்கென்று கிடைக்கும்வரை
உயிர்ப்புக்கள் ஒத்திவைக்கப்படட்டும்
நாங்கள் சன்னங்களுக்கு தலைவணங்க
ஒருபோதும் தயாராக இல்லை

பிணச் சுவாசங்கள் எங்கள்
நுரையீரல்களைத் தீண்டும் போது
கடவுளர்களின் மீது – தூசணைகள்
தூவவும் தோன்றுதே
சதைப் பிண்டங்களுக்குள்
கால்புதைத்து குருதிப் புனலில்
குளித்து வானமே கூரையாக்கப்பட்டு
வயசுக்கு வந்த குமரிகள்
தாரைவார்க்கப்பட்ட சரித்திரமே.....

இந்த நூற்றாண்டு
இழந்ததும்
எமக்கு நேர்ந்ததும்
இன்னுமொரு நூற்றாண்டில்
மறைக்கப்படலாம் ஆயினும்
உயிர்ப்புக்கள் நிகழவேண்டாம்
இன்னுமொரு வானம்
இன்னுமொரு பூமி தேடலாமா?
தேடினால....... அது
நிச்சயிக்கப்பட்டதாக வேண்டும்.।

சிவரா.பிரதீப்
நாடகத்துறை
3ம் வருடம்

# சுவாமி விபுலாநந்த அழகியற் கற்கைகள் நிறுவக மாணவர் ஒன்றியத்தின் செயற்பாடுகள்

என்னும் வாக்கியத்திற்கு அமைவாக மாணவர்களின் நிறை குறைகளைத் தீர்ப்பதற்காக உருவாக்கப்பட்டதே மாணவர் ஒன்றியமாகும். அந்த வகையில் தற்போது செயற்பட்டு வரும் மாணவர் ஒன்றியத்தின் தலைவராக இ. தர்சன் மற்றும் உப தலைவராக S.சுஜேந்திரனும், செயலாளராக க.கமலதாஸ், பொருலாளராக R.ராகவன், பத்திரிகையாசிரியராக V. நிர்மலகாந்தனும் உறுப்பினர்களாக K.கலாரஞ்சி, R.சுதர்சன், A.சமான் ஆகியோர் செயற்பட்டு வருகின்றனர்.






மாணவர்களால் எந்த நோக்கத்திற்காக மாணவர் ஒன்றியம் உருவாக்கப்பட்டதோ அந்த நோக்கத்தை நிறைவு செய்யும் வகையில் இம்மாணவர் ஒன்றியத்தின் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அந்த வகையில் இதுவரை அவர்களது செயற்பாடுகள்

**கருத்தரங்கு ஒழுங்கு செய்தமை.**

நாடகமும் அரங்கியல் பாட நெறியினை பயிலும் உயர்தர மாணவர்களுக்கு அவர்களின் பரீட்சை நோக்கத்திற்காக 24,25ம் திகதிகளில் கருத்தரங்கை ஒழுங்கு செய்தார்கள். இக்கருத்தரங்கை சி.மௌகுரு, A.விமல்ராஜ், T.கௌரீசன், S.சந்திரகுமார், இ.ஜெகநாதன், மு.மோகன்தாசன், சு.சேகர் போன்றோரால் நடாத்தப்பட்டது. இது அம்மாணவர்களின் பரீட்சைக்கு உறுதுணையாக அமைந்தது.



**சிரமதானம் மேற்கொள்ளப்பட்டமை.**

நாடு முழுவதுமாக பரவிவந்த டெங்கு நோயினை கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் பல இடங்களிலும் சிரமதானப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அநத வகையில் எமது நிறுவகத்திலும், மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் 4/8/2010 அன்று எமது நிறுவக மாணவர்கள், விரிவுரையாளர்களின் ஒத்துழைப்புடன் சிரமதானம் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.



### கலாச்சார போட்டிகள் நடாத்தியமை.

நிறுவகத்தினது சகல துறை மாணவர்களினதும் திறமைகளை வெளிக்கொணரும் களமாகவும், அவர்களை ஊக்கப்படுத்தும் நோக்கத்துடனும் மாணவர் ஒன்றியத்தினால் கலாச்சார போட்டிகள் . நடாத்தப்பட்டன. அந்த வகையில் இசை, நடனம், நாடகம், கற்புலக்கலை பாடநெறிகளை பயிலும் மாணவர்கள் தமது திறமைகளை வெளிப்படுத்தினார்கள். இதற்கு நடுவர்களாக மேற்குறிப்பிட்ட துறைகளில் தேர்ச்சி பெற்ற கலைஞர்கள் அழைக்கப்பட்டிருந்தார்கள். இதில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

### வெள்ள நிவாரணம் வழங்கியமை.

கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட எமது நிறுவக மாணவர்களுக்கு உதவி புரியும் நோக்குடன் மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நிறுவக மாணவர்கள் ஒன்றிணைந்து 'ஓயாத கரங்கள்' என்னும் தொனிப்பொருளின் கீழ் 24/01/2011 அன்று இப்பணியினை மேற்கொண்டார்கள்.
இரத்த தானத்தினை ஒழுங்கு செய்தமை.

இரத்ததானம், மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் 01/03/2011 அன்று எமது நிறுவகத்தில் ஒழுங்கு செய்யப்பட்டது. இது Dr. T.Gowrishangaran, Mrs. R.V.Gearage & Dr. Mrs.T. Amarantha போன்றோரின் தலைமையில் மேற்கொள்ளப்பட்டது. இதில் பல நிறுவக விரிவுரையாளர்கள், ஊழியர்கள், மாணவர்கள் இரத்ததானம் செய்ய முன் வந்தார்கள். இதன்போது சேகரிக்கப்பட்ட இரத்தம் 'மட்டக்களப்பு இரத்த வங்கியிடம்' கையளிக்கப்பட்டது.

### மாணவர் ஒன்றியம் சிற்றுண்டிச்சாலை நடாத்துதல்.

நிறுவக மாணவர்களின் நலனை கருத்தில் கொண்டு மாணவர் ஒன்றியம் சிற்றுண்டிச்சாலையை பொறுப்பேற்று நடாத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறாக நேரடியாக மட்டுமன்றி மறைமுகமாகவும் பல உதவிகளை செய்து வருகின்ற இம்மாணவர்கள் ஒன்றியத்தின் செயற்பாடுகள் பாராட்டுக்குரியதாகும். இவர்களுடைய இப்பணி தொடர்ந்தும் செம்மையுடன் நடைபெற வாழ்த்துகின்றோம்.



# ஈழத்து சிறுவர் நாவல் இலக்கிய வளர்ச்சியில்
## மட்டக்களப்பு பிரதேச சிறுவர் நாவல்

சிறுவர் நாவல் என்பது சிறுவர்களின் உளத்திற்கும், அனுபவத்திற்கும், சொற்களஞ்சியத்திற்கும் ஏற்புடையதாய் அவர்களது கற்பனையையும், படைப்பாற்றல் திறனையும், ரசனை உணர்வையும் விருத்தி செய்யும் வகையில் அவர்களுக்கு விளங்கும் மொழியில் படைக்கப்படும் கதை இலக்கிய வடிவமாகும். இது வளர்ந்தோருக்கான நாவல் போலன்றி சிறுவர்களுக்கு விருப்பமான விடயங்கள், சம்பவங்களைக் கருப்பொருளாகக் கொண்டிருக்க வேண்டும். சிறுவர்களுக்கு விருப்பமானவை பாத்திரங்களாக அமைதல் சிறப்பிற்குரியது. விறுவிறுப்பான கதையோட்டம் காணப்படுவதோடு சிக்கல் தன்மை குறைவாகவும் காணப்பட வேண்டும். சிறுவர் நாவல்கள் நேரடியான அறப்போதனை அற்றவைகளாகவும், அளவில் சிறியதாகவும் அமைந்திருத்தல் அவசியமானதாகும்.

ஈழத்து சிறுவர் இலக்கிய வரலாற்றை எடுத்துக்கொண்டால் அதில் சிறுவர் நாவல்களுக்கான வரலாறு மிகக் குறுகிய காலப்பகுதிகளை உள்ளடக்கியதாகவே காணாப்படுகின்றது. 1968ல் நவசோதி எழுதிய 'ஓடிப்போனவன்' என்ற நாவலே ஈழத்தின் முதலாவது சிறுவர் நாவலாக கொள்ளப்படுகின்றது. இன் நாவலுக்கு முன்னர் கீதோபதேசம், சிசுபாலசரிதம், இராமன் கதை, பாண்டவர் கதை, நீரரமகளீர், பூஞ்சோலைக் காவலன், வினோதனின் சாகசம் முதலான கதைகள் வெளிவந்துள்ளன. இவை சிறுவர் கதைகளிலும் பார்க்க நீண்ட வடிவமாக அமைந்திருப்பதால் நெடுங்கதை வடிவமாகக் கொள்ளப்படத் தக்கன எனலாம். ஆனால் இவை பெரும்பாலும் புராண, இதிகாச, வடமொழிக் கதைகளின் தழுவல்களாகவே அமைந்திருந்தன. சுயஆக்கம் என்ற வகையில் நவசோதியின் ஓடிப்போனவன் என்ற நாவலே சிறுவர் நாவலாகக் கொள்ளப்படுகின்றது. இனைத் தொடர்ந்து என். சண்முகலிங்கனின் சான்றோன் எனக்கேட்டதாய், ச.அருளானந்தனின் பளிங்குத்தீவு, காட்டில் கலவரம் முதலான சிறுவர் நாவல்கள் வெளிவரத்தொடங்கின. ஈழத்து சிறுவர் நாவல் வளர்ச்சியில் இரண்டாயிரமாம் ஆண்டுகளிலிருந்தே கணிசமான நாவல்கள் வெளிவரத் தொடங்குகின்றன. அந்த வகையில் ஓ.கே. குணநாதனின் மாவீரன் புள்ளிமான், மரம்வெட்டியும் ஒரு தேவதையும், வீரஆனந்தன், சுதந்திரம், மாயக்கிழவி, தர்மத்தின் வெற்றி, வெள்ளைக் குதிரை போன்றனவும் ச.அருளானந்தனின் பயங்கொள்ளலாகாது பாப்பா, வாக்கினிலே இனிமை வேண்டும், உல்லாசப்பயணம், மனதில் உறுதி வேண்டும் முதலானவையும் இணுவை சே.நாகராஜனின் காட்டில் ஒரு வாரம், செங்கையாழியானின் பூதத்தீவுப்புதிர், சே. யோகநாதனின் காட்டில் வாழும் கரடி நாட்டுக்கு வந்த கதை, சின்னஞ்சிறு கிளியே, காற்றின் குழந்தைகள், சூரியனைத் தேடியவன், யோ. சத்தியனின் ஆயிரம் கொக்குகள், அமுதனின் உலகம், தங்கமுடிப்பூனயார், சிவப்பு விமானம், தங்கப்புதையல், யோ. சுந்தரலட்சுமியின் அழகிய பூ, வீரச்சிறுவன் ஜம்பு முதலானவையும் வெளிவந்தன. இன்றுவரை வெளிவந்து கொண்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

ஈழத்தில் வெளிவந்த சிறுவர் நாவல்களில் கணிசமானவை மட்டக்களப்பு பிரதேச சிறுவர் நாவல்கள் என கூறமுடியும். மட்டக்களப்பு பிரதேசம் எனக்கூறும் போது அவை மட்டக்களப்பு மண்வாசனையை வெளிப்படுத்துவதாகவோ மட்டக்களப்பு

இலக்கிய கர்த்தாக்களால் எழுதப்பட்டவையாகவோ அமைந்திருப்பதைக் காணலாம். மட்டக்களப்பு மண்வாசனையை களமாகக் கொண்ட முதலாவது சிறுவர் நாவலாக என். சன்முகலிங்கனின் "சான்றோன் எனக்கேட்ட தாய்" என்ற சிறுவர் நாவல் அமைகின்றது. இந்நாவல் மட்டக்களப்பில் சூறாவளியினால் ஏற்பட்ட அழிவுகளை மையமாகக் கொண்டு மட்டக்களப்பு மண்வாசனையோடு படைக்கப்பட்டுள்ளது.

ச.அருளானந்தனின் 'காட்டில் கலவரம்' என்ற சிறுவர் நாவலும் மட்டக்களப்பினைக் களமாகக் கொணடு படைக்கப்பட்டுள்ளது. இந்நாவலில் மட்டக்களப்பு பிரதேசத்தின் சிறப்பும், அதன் அழகும் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களும் எடுத்துக்காட்டப்படுகின்றன. மட்டுநகர் வாவி, படுவான்கரைப்பிரதேசம், கோட்டைமுனைப்பாலம் முதலானவை குறிப்பிடப்படுகின்றன.

"மட்டுநகரின் சொர்க்கம் இந்தப் பாலந்தாண்டா இதில் நின்று

கொண்டே கிழக்கின் சூரிய உதயத்தையும், மேற்கில் சூரியன் மறைவதையும்காணலாம்....... அவன் கால்கள் பாலத்தை தாண்டி பொலீஸ் நிலையத்தையும், பொதுச்சந்தையையும் தாண்டி வாவிக் கரையோர வீதியால் நடந்தன." (காட்டில் கலவரம் 1999, பக்:42)

இதன் மூலம் மட்டக்களப்பு பிரதேசத்தை களமாகக் கொணடு சிறுவர் நாவல்கள் படைக்கப்பட்டிருப்பதை அறிய முடிகின்றது.

மட்டக்களப்பு பிரதேசம் சார் இலக்கிய கர்த்தாக்களினால் படைக்கப்பட்ட சிறுவர் நாவல்களுக்கு எடுத்துக்காட்டாக ஓ.கே. குணநாதனின் மாவீரன் புள்ளிமான், மரம் வெட்டியும் தேவதையும், வீர ஆனந்தன், சுதந்திரம், மாயக்கிழவி, தர்மத்தின் வெற்றி, வெள்ளைக்குதிரை முதலானவற்றை குறிப்பிடலாம். இந்நாவல்கள் ஈழத்து சிறுவர் நாவல் வளர்ச்சிக்கு உருவம், உள்ளடக்கம் சார் விடயங்களில் முக்கிய பங்களிப்பு செய்துள்ளன எனக்கூற முடியும். உள்ளடக்கத்தை எடுத்துக் கொண்டால் பயங்கரம், மர்மம், சமூகக்கருத்துக்கள், யுத்த சூழ்நிலை, அறிவியல் முதலானவற்றை கருவாகக் கொண்டு நாவல்கள் புனையப்பட்டுள்ளன. மாயக்கிழவி, வீரஆனந்தன் முதலான கதைகளில் திகிலூட்டும் மர்மச் சம்பவங்கள் கருவாக இடம்பெறுகின்றன.

வெள்ளைக்குதிரை என்ற நாவல் சமகால யுத்த சூழ்நிலையை விபரிப்பதாக அமைந்துள்ளது. இந்நாவல் உள்நாட்டுப் போருக்கு முகங்கொடுத்து வரும் வன்னிப்பிரதேசத்தைக் களமாகக் கொண்டுள்ளது. அப்பிரதேச மக்களின் வாழ்க்கை அவலங்கள், மிதிவெடி அபாயம், அப்பாவிகளின் மரணம், பாலியல் வல்லுறவு, இளந்தலை முறையினர் எதிர்கொள்ளும் கஷ்டங்கள் போன்றவற்றையும் யுத்தத்தின் பல்வேறு பரிமாணங்களையும் எடுத்துக் காட்டுவதோடு அமைதியான வாழ்க்கையின் அவசியத்தையும்வலியுறுத்துகின்றன. சமகால யுத்தசூழ்நிலை சிறுவர் இலக்கிய வடிவங்களில் அதாவது பாடல்களில் ஒரு சிலரால் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. நாவல்கள், கதைகளில் இவை விரிவாக விளக்கப்படவில்லை. இச்சிறுவர் நாவலிலேயே இவைபற்றி பேசப்பட்டுள்ளதோடு அவை கருவாகவும் அமைந்துள்ளமை சிறப்பிற்குரியது எனக்கூறலாம். இந்நாவல் சிறுவர்களுக்கு விருப்பமான விதத்தில்



மர்மம், விறுவிறுப்பு,துணிகரம், மனோரதியம் என்பன கலந்து எழுதப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பு பிரதேச சிறுவர் நாவல்களில் அறிவியல் கருத்துக்கள் கருவாக இடம்பெறுவதையும் அவதானிக்க முடிகின்றது. 'மரம் வெட்டியும் ஒரு தேவதையும்' என்ற கதையில் இதனை அவதானிக்கலாம். இக்கதையில் சுற்றுப்புறச் சூழலின் அவசியமும் அதைப் பேணவேண்டியதன் கடமையும் வலியுறுத்தப்படுகின்றது. சூழற்சமநிலை குலைக்கப்படுவதால் ஏற்படும் விளைவுகள் சிறுவர்களுக்குச் சிறந்த முறையில் அறிவியல் நோக்கில் முன்வைக்கப்பட்டுள்ளன.

> "மரங்கள் வெட்டுவதனால் காடுகளை அழிப்பதினால் மண்ணரிப்பு
>
> ஏற்படுகின்றது. மண்ணில் ஈரலிப்புத்தன்மை இல்லாமற் போகின்றது.
>
> வெப்பம் அதிகரிக்கின்றது. வரட்சி ஏற்படுகின்றது......."

(மரம் வெட்டியும் ஒரு தேவதையும், 2007, பக்:46)

இக்கதை தேவதைக்கதைகளைப் போன்று மனோரதியப்பாங்கில் கூறப்பட்டாலும் அறிவியல் நோக்கில் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளதை அவானிக்க முடிகின்றது.

மட்டக்களப்பு பிரதேச சிறுவர் நாவல்களின் வெளிப்பாட்டு முறை ஈழத்துச் சிறுவர் நாவல்களிலும் பார்க்க வளர்ச்சி நிலையை எட்டியுள்ளதைக் காணலாம். சிந்திக்கத்தூண்டும் வகையில் தீர்வுகளை முன்வைக்கும் உத்தி 'மாவீரன் புள்ளிமான்' என்ற நாவலிலேயே இடம் பெறுகின்றது. இந்நாவலின் முன்கதையைக் கூறிவிட்டு அதன் பிற்பகுதியை எவ்வாறு நிறைவு செய்யலாம் என்பதைச் சிறுவர்கள் பல்வேறு தளங்களில் சிந்திக்கும் வகையில் நாவலாசிரியர் நாவல் படைத்துள்ளார். இந்நாவலில் ஆறு தீர்வுகளை முன்வைப்பதோடு ஏழாவது தீர்வை சிறுவர்கள் சிந்தித்து எழுத வாய்ப்பளிக்கின்றார்.

> "சுட்டிகளே நீங்கள் சிந்தித்த தீர்வுக்கான கதையை இங்கே
>
> எழுதுங்கள் பார்க்கலாம்" (மாவீரன் புள்ளிமான்,2004, பக்:101)

எனக்கூறுவதோடு அந்நூலிலே தீர்வு எழுதுவதற்காக நான்கு பக்கங்களை வெற்றிடமாக ஒதுக்கியுள்ளார். முற்பகுதிக் கதையைக் கூறியுள்ள ஆசிரியர் தீர்வுக்கு முன்,

"அன்பான சுட்டிகளே இந்த மான் எப்படியிந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்போகின்றது. நீங்கள் சிந்தியுங்கள். ஒரு கடதாசியில் அந்தத் தீர்வை எழுதி வையுங்கள் பின்னர் இங்கே காணப்படும் தீர்வுடன் உங்களுடைய தீர்வும் ஒத்துப்போகின்றதா? என்று ஒப்பிட்டுப்பாருங்கள்" (மாவீரன் புள்ளிமான், 2004, பக்:26)

எனக்கூறுகின்றார். இவ்வுத்தியைக் கையாண்டு சிறுவர்களைச் சிந்திக்கத் தூண்டுவதும் அவர்களுடைய படைப்பாற்றலை வளர்ப்பதும் ஆசிரியரின் நோக்கமெனலாம். இதனாலேயே இச்சிறுவர் நாவல் ஏனைய சிறுவர் நாவல்களிலும் பார்க்க தனித்துவமுடையதாகவும், முக்கியத்துவமுடையதாகவும் கொள்ளப்படுகின்றது.



சிறுவர் கதைகள் நாவல்களில் பெரும்பாலும் யதார்த்தம் குறைவாகவே காணப்படுகின்றது. கற்பனை, மனோரதியம், மர்மம் முதலானவையே அவற்றில் மலிந்திருக்கும். மட்டக்களப்பு பிரதேச சிறுவர் நாவல்களில் பெரும்பாலானவை யதார்த்தப் போக்குடையவையாக அமைந்துள்ளன. ஓ.கே. குணநாதனின் நாவல்களில் யதார்த்த ரீதியான களச்சித்தரிப்பு இடம்பெறுவதை அவதானிக்கலாம். என்.சண்முகலிங்கனின் 'சான்றோர் எனக்கேட்ட தாய்' என்ற நாவலில் மட்டக்களப்பில் ஏற்பட்ட சூறாவளி அனர்த்தம் யதார்த்தமாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. இதனை இந்நாவலின் முன்னுரையில் ஆசிரியர் கூறுவதிலிருந்து உணரலாம்.


'கிட்டத்தட்ட பதினைந்து ஆண்டுகளுக்கு முன் மட்டக்களப்பு கண்ட சூறாவளி அனர்த்தங்களின் பின்னணியில் எழுந்த சிறுவர் நாவல் இது. அன்று நிவாரணங்களில் என் நண்பன் குகனும் நானும் எதிர்கொண்ட சம்பவங்களுடன் சிறுவர் உயிர்ப்பலி தொடர்பான செய்திகளும் சேர உயிர்த்ததே 'சான்றோர் எனக்கேட்ட தாய்' (சான்றோர் எனக்கேட்ட தாய், 1993, முன்னுரை)

சிறுவர் நாவல்கள் சிறுவர்களுக்கு அறிவூட்டுவனவாகவும், நம்பகமான உண்மைகளை விளக்குவனவாகவும் அமைதல் சிறப்பிற்குரியது. நடைமுறையிலுள்ள விடயங்கள், தகவல்களைக்கூட சிறுவர்களுக்கு உணர்த்துவதற்கு நாவல்கள் உதவுகின்றன. போலியோ மருந்து கொடுக்கும் போது சர்வதேச ரீதியில் யுத்தநிறுத்தம் செய்யப்படும் தகவலைக் கூறுவதாகப் பின்வரும் நாவலிலுள்ள கூற்றுக்கள் அமைந்துள்ளன.

"அக்கா சிறுவர்களுக்கு கால் ஊனமாகப் போகக்கூடாது என்பதற்காகத்தானே சர்வதேச ரீதியில் போலியோ மருந்து கொடுக்கும் தினங்களில் இராணுவமும், போராளிகளும் யுத்த நிறுத்தங்கூட செய்கிறார்கள். இப்பொறிவெடியிற் சிக்கி சிறுவர்கள் கால்களை இழப்பதென்றால் போலியோ மருந்து கொடுக்க வேண்டிய அவசியமில்லையே" (வெள்ளைக்குதிரை, 2003, பக்:96)

இதன் மூலம் நாவல் போலியோ மருந்து பற்றிய தகவல்களையும், யுத்தத்தால் ஏற்படுகின்ற இழப்புக்களையும் சிறுவர்களுக்கு தெளிவுபடுத்துவதைக் காணலாம்.

இவ்வாறாக இப்பிரதேச சிறுவர் நாவல்கள் உள்ளடக்கம், வெளிப்பாட்டு முறையில் புதிய நுட்ப முறைகளைக் கையாண்டு ஈழத்து சிறுவர் நாவல் வரலாற்றில் தனக்கென தனியிடம் பிடித்துக்கொண்டாலும் அவற்றிலும் ஏனைய சிறுவர் நாவல்களில் காணப்படுவது போன்ற சில குறைபாடுகளையும் அவதானிக்கலாம். அதாவது சிறுவர் நாவல்களில் மிக நீண்ட வர்ணனைகள், நீண்ட அறிவுரைகள் இடம்பெறுவது சிறப்பிற்குரியதன்று. ஓ.கே. குணநாதனின் நாவல்களில் சிற்சில இடங்களில் இத்தகைய நீண்ட வர்ணனைகள், அறிவுரைகளைக் காணலாம்.



'மரம் வெட்டியும் ஒரு தேவதையும்' என்ற கதையில் மரம் வெட்டி மரத்தை வெட்டுவதற்குச் செல்லும் ஒவ்வொரு வேளையிலும் பல்வேறு வேடங்களில் வந்து தேவதை மரம் வெட்டிக்கு அறிவுரை கூறித்தடுக்கிறது. இவ்வறிவுரைகள் நீண்டவைகளாக அமைவதோடு மரம் வெட்டுவதால் சூழற்சமநிலை குலைக்கப்படுவதை பல்வேறு இடங்களிலும் மீண்டும் மீண்டும் வலியுறுத்துவதாக அமைகின்றது.

''மரமில்லாமல் ஒன்றுமே உயிர்வாழ முடியாது. மனிதன் மரங்களை அழிப்பதால் உலகம் அழிந்து கொண்டு வருகின்றது. மரங்களின் அழிவினால் வளிமண்டலத்தில் $Co_2$ அதிகரித்து விட்டது. இதனால் பூமியைப் பாதுகாக்கின்ற ஓசோன் படையில் துவாரங்கள் விழுந்து விட்டன. ஓசோன் படையில் துவாரங்கள் விழுந்ததனால் அந்தத் துவாரங்களினூடாக ஊதாக்கதிர்கள் மனிதனைத் தாக்கிப் புற்றுநோயை உருவாக்குகின்றன. பூமியில் வெப்பநிலை கூடுகின்றது. மழையில்லை. வரட்சியேற்படுகின்றது. காலநிலை மாறி வெள்ளப்பெருக்கு, சூறாவளி, நிலநடுக்கம், சுனாமி, எரிமலை வெடிப்பு போன்ற பேரழிவுகள் அதிகரித்து விட்டன. இன்னும் தொடர்ந்து காடுகளை அழித்தால் நினைத்துப்பார்க்க முடியவில்லை. உலகம் அழிந்து விடும்'

(மரம் வெட்டியும் ஒரு தேவதையும், 2007, பக்:53)

தேவதையின் இவ்வறிவுரை சிறுவர்களுக்கு அறிவியற் கருத்துக்களைத் தருவதாக அமைந்தாலும் மிக நீண்டு செல்வதால் சிறுவர்களின் வாசிக்கும் ஆர்வத்தைக் குறைத்து விடும் எனக்கூறலாம். மட்டக்களப்பு பிரதேச சிறுவர் நாவல்கள் இத்தகைய சிற்சில குறைபாடுகளைக் கொண்டிருந்தாலும் அவை ஈழத்து ஏனைய பிரதேச சிறுவர் நாவல்களோடு ஒப்பிடும் போது சிறுவர் உளவியல், மனவளர்ச்சி, அறிவு வளர்ச்சிக்கேற்ப படைக்கப்பட்டிருப்பதையும் சிறுவர்களைக் கவரக்கூடிய வகையிலான அட்டை, வர்ணப்படங்களுடன் வெளிவந்திருப்பதும் சிறப்பிற்குரியது. இதனால் ஈழத்து சிறுவர் நாவல் வளர்ச்சியில் மட்டக்களப்பு பிரதேச சிறுவர் நாவல்கள் மைல் கற்களாக விளங்குகின்றன எனக்கூறலாம்.

உசாத்துணை நூல்கள்


1. அருளானந்தம்.ச - காட்டில் கலவரம், அருள் வெளியீடு, திருகோணமலை, 1999.
2. குணநாதன்.ஓ.கே. - மாவீரன் புள்ளிமான், எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம், மட்டக்களப்பு, 2004.
3. குணநாதன்.ஓ.கே. - மரம் வெட்டியும் ஒரு தேவதையும், எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம், மட்டக்களப்பு, 2007.
4. குணநாதன்.ஓ.கே. - வெள்ளைக்குதிரை, எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம், மட்டக்களப்பு, 2003.
5. குணநாதன்.ஓ.கே. - சுதந்திரம், பிரியா பிரசுரம், 1995.
6. சண்முகலிங்கன். என் - சான்றோன் எனக்கேட்ட தாய், நாகலிங்கம் நூலாலயம், தெல்லிப்பளை, 1993.
7. கைலாசபதி.க - நவீன இலக்கியத்தின் அடிப்படைகள், குமரன் புத்தக இல்லம், கொழும்பு, 2002.
8. யோகராசா.செ - ஈழத்து சிறுவர் இலக்கியக் களஞ்சியம், குமரன் புத்தக இல்லம், கொழும்பு, 2007.


ஸ்ரீமதி.
*வானதி பகீரதன்*

# கிரேக்கத்தின் சாடி ஓவிய வெளிப்பாடுகளும் அதன் வளர்ச்சி நிலையும் - ஓர் நோக்கு

ஐரோப்பியக் கலைகளின் தாயகமாக கிரேக்கம் கொள்ளப்படுகின்றது.கிரேக்கத்தின் இயற்கை அமைப்பு, மலைகள், மத்தியதரைக் காலநிலை, அவர்களிடம் வளர்ந்த பகுத்தறிவு, சிந்தனை, வாழ்க்கை பற்றிய ஆழமான சிந்தனை, உயர் ஜனநாயகம் என்பன கலையின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றின. கிரேக்க வரலாற்றினை பல வகுப்புக்களாக வரலாற்றாசிரியர்கள் வகைப்படுத்துவர். இவ் வகையில் 'Gardner' கிரேக்க வரலாற்றறை பின்வருமாறு வகைப்படுத்தியள்ளார்.

1.Geometric – Archac Period

2.கி.மு 5ம் நூற்றாண்டு காலக் கலை

  a.மாறுகாலகட்டம் (Classic Art)

  b.ஆரம்ப செந்நெறிக் காலகட்டம் (The Early Classic)

3.கி.மு. 4ம் நூற்றாண்டு காலக் கலை

  a.பிந்திய செந்நெறி காலம்.

  b.ஹெலனிஸ்ரிக் காலம்

    i.ஆரம்ப காலம்

    ii.பிந்திய காலம்

இந்நாகரீகம் கலை வளர்ச்சி பெறுவதற்கு பின்புலமாக அமைந்த ஈகோ நாகரீகம்/கீரிட்டன் நாகரீகம் முன்மாதிரியாக இருந்தது என ஆய்வாளர்கள் சுட்டுவர். இது மட்டுமன்றி கிரேக்க நாகரீகத்தில் கலை வளர்ச்சிபெற அந் நாகரீகத்தின் அரசியல், பொருளாதார, சமூக, சமய நிலைகளையும் நோக்க வேண்டும். கிரேக்கத்தில் "குடியரசு முறை" (City Ctates) காணப்பட்டது. சலவைக் கல் கிரேக்கத்தில் மிகுதியாகக் காணப்பட்டது. சமூகத்தில் மனிதன் எல்லா விடயத்திலும் முக்கியத்துவப்படுத்தப்பட்டான். அளவீடுகள் கலைகளின் முதன்மை பெற்றன. கணித அளவீடு, அழகு, உணர்வு, உளவு முதலியன கிரேக்க மனிதனின் கலைப் படைப்புக்களில் முக்கிய இடத்ததைப் பெற்றிருந்தது.

இத்தகைய பின்புலத்தின் சூழலில்தான் சாடி ஓவியக் கலை உதயமாகத் தொடங்கியது. கிரேக்கத்தில் Geometric – Archaic Period இல்தான் சாடிகள் வரத் தொடங்கின. இக்காலத்தின் பின் கிடைக்கப்பெற்ற சாடிகளெல்லாம் Arehaic Style பின் தொடர்ந்து வந்தது என்றால் மிகையாகாது. ஆரம்பத்தில் சாடிகள் செய்வதற்கு ஊடகமாக களிமண் பயன்படுத்தப்பட்டது. பின் வெண்கலமும் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதற்கு சான்றுகளும் உண்டு. அந்தவகையில் கிரேக்கரின் அழகுணர்ச்சி மிக்க கலைத் தன்மையை அங்கு மீட்கப்பட்ட மட்பாண்டப் பொருட்களான கைப்பிடிகள், காதுத்துளைகள் கொண்ட நீண்ட குவளைகள், கூசாக்கள் போன்றவற்றில் சமநிலை (Balance), சமச்சீர்மை, அளவு விகிதப்பொருத்தம், சரியான வளைவு போன்ற பண்புகளுடன் காணமுடிகின்றது.



முதலாவது காலகட்டத்தில் சாடிகளின் 6 வடிவங்கள் பிரதான இடத்தை வகிக்கின்றன. முதலாவது காலத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் 6 சாடிகளும் 6 கட்ட வளர்ச்சியைக் காட்டுவதாகச் சுட்டப்படுகின்றது. அவ்வகையில்



முதலாவதாக நீர்ச்சாடி விளங்குகின்றது. இது கேத்திரகணித காலத்திற்கு முற்பட்ட காலக் கலையாகக் கொள்ளப்படுகின்றது. கி.மு.10ம் நுற்றாண்டு காலப் பாரம்பரியத்தினை இது எடுத்துக்காட்டுகின்றது. இது ஒருவகையில் மைசீனியத் தொடர்ச்சியாகவும் கருதப்படுகின்றது. இதில் 3 கைப்பிடிகள் காணப்படுகின்றன. 2 கைப்பிடிகள் நகர்த்துவதற்கும் மற்றைய ஒன்று தூக்குவதற்கும் பயன்படுத்தப்பட்டுள்ளதாக சுட்டுவர்.





2வது சாடி எண்ணெய் வைக்கும் Flask ஆகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. உருவம் ஒடுக்கமான கழுத்துடன் எண்ணெயை மெதுவாக ஊற்றுவதற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ் 2ம் கட்டத்தில் நேர்கோடு, தடிப்பான கோடுகள் யாவும் வருகின்றது. இதில் மிகச் சிறிய உருக்கள் குறியீடாகவும் அருபங்களாகவும் காணப்படுகின்றது. கேத்திரகணித அலங்காரங்களும் அதிகமாக உள்ளது.





மூன்றாவது சாடி கிரேகக்த்தின் நீரையும் திராட்சைப் பழச் சாற்றையும் கலக்க அது பயன்படுத்தப்பட்டது. உடல் அமைப்புப் பெரிது. மனித உருவங்களின் இருப்பு அதிகரித்துக் காணப்படுகின்றது. அதே நேரம் சரிக்குச்சரியாக கேத்திரகணித அலங்காரங்களும் காணப்படுகின்றன. மனிதன் தவிர குதிரை, மரம் போன்றவையும் சித்தரிக்கப்பட்டுள்ளன.



நான்காவது சாடியில் 2 கைப்பிடிகள் காணப்படுகின்றது. 2 பக்கமும் காவிச் செல்வதற்கு இது பயன்படுத்தப்பட்டுள்ளது. ஒரு பெரிய சாடியினுள் திராட்சைச்சாறு கோதுமை, எண்ணெய், தேன் முதலியவற்றை பாதுகாத்து வைக்க இது பயன்படுத்தப்பட்டதாக சுட்டப்படுகின்றது. அத்துடன் இதில் கேத்திரகணித அலங்காரம் குறைந்து உருவ அலங்காரங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றது. இக் கட்டம் கேத்திரகணித தன்மைகளை உடைக்கும் கட்டமாக காணப்படுகின்றது. வெறும் உருவச் சித்தரிப்புக்களாக மட்டுமன்றி கதை சொல்லும் காட்சிகளாக அமைந்துள்ளது.







ஐந்தாவது சாடி குடிப்பதற்குப் பயன்படுத்தப்படும் குவளையாக காணப்படுகின்றது. இச் சாடியில் கதை சொல்லுதலே பிரதான காட்சிகளாக அமைகின்றன. இதில் கிரேக்க நாடகக் கதைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. அடுத்து ஆறாவது கட்டத்ததை எடுத்துக்கூறும்




சாடியாக 'WINE JUG' அமைகின்றது. திராட்சைப் பழச்சாற்றை ஊற்ற இது பயன்படுத்தப்பட்டுள்ளது. அதன் சொண்டுப் பகுதி கூர்மையாகக் காணப்படுவதற்கு காரணம் இலகுவாக Wine ஐ ஊற்றுவதற்கே அவ்வாறு வடிவமைக்கப்பட்டுள்ளது. கதை சொல்லுதலே பிரதான காட்சிகளாக அமைகின்றன. ஓடிசி, ஹோமிரிஸ் காட்சிகளும் கிரேக்க நாடகக் கதைகளும் இவ் 6வது கட்டத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

முதலாவது கால கட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்திய 6 சாடிகளும் 6 கட்ட வளர்ச்சியை எடுத்துக்காட்டியிருந்தன. இதனை தொடர்ந்து பின்வந்த சாடிகளிலும் Arehaic Style ல் அமைந்த பாணியிலேயே காணப்படுகின்றது. அவ்வகையில் கி.மு8ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் எழுத்துருக்கள் கொண்ட சாடி குறிப்பிடத்தக்கது. இதில் கிரேக்க நாட்டு எழுத்துக்கள் யாவும் களிமண் பாத்திரங்களில் நன்கு பதிக்கப்பட்டிருந்தன . இது மட்டுமன்றி விதவிதமான கோலவுருக்கள் கொண்ட மட்பாண்டங்கள் இக் கலையாக்கத்தில் விதந்து குறிப்பிடத்தக்கன. கருமையும் வெண்மையும் கொண்ட மட்பாண்டங்கள்நன்கு சூளையிடப்பட்டு வடிவமைக்கப்பட்டுள்ளன.

வர்ணரீதியாக எவ்வாறு ஆரம்பகால ஆறு சாடிகளும் மாறுபடுகின்றது என்பதை நோக்கும்போது முதலாவது கட்டத்தின் ஆரம்பத்தில் கறுப்பு வர்ணம் பயன்படுத்தப்பட்டுள்ளது. கி.மு.6ம் வரை சாடி ஓவிய மரபு பிரசித்திபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. பொதுவாக அக் காலச் சாடிகளில் வெள்ளை, சிவப்பு, மண்ணிறம் முதலிய வர்ணங்களே பாவிக்கப்பட்டிருந்தன. இவற்றுடன் நீலம், பச்சை முதலியனவும் பயன்படுத்தப்பட்டிருந்தன. கி.மு 6ம் நூற்றாண்டில் கறுப்புவர்ணம் முக்கியம் பெற்றது. சிவப்பு வர்ணம் முக்கியம்பெறும்போது கறுப்பு மண்ணிற வர்ணங்கள் பின்னணியாக அமைந்தது. கி.மு. 6ம் நூற்றாண்டில் இறுகிய தன்மையில் இருந்து விலகி தளர்ந்த தன்மை வருகின்றது. அத்துடன் இவ்வகையான மட்பாண்டங்களில் கலை அலங்கார வேலைப்பாடுகளை நுண்ணிய கூர்மையான கருவிகளைப் பயன்படுத்தி வரைந்துள்ளனர் என அறிய முடிகின்றது.





இவ் ஓவியச் சாடிகளில் அவர்கள் தம் வாழ்க்கை அனுபவங்களை ஓவியமாக்கி வரைந்துள்ளனர். அத்துடன் அக்கால மக்களின் வாழ்க்கை முறை, தொழில்முறை, சடங்குகள் முதலியவற்றினூடாக பின்னிப் பிணைந்துள்ள தன்மையை அச் சாடி ஓவியங்களின் வாயிலாக காணமுடிகின்றது. இதைவிட அதிகளவு நாடகக் காட்சிகள், புராணங்களில் உள்ள வீரர்களின் கதைக் கருக்கள் முதலியன வரையப்பட்டிருந்தன. ஆரம்பகால ஓவியங்கள் எகிப்திய தொடர்ச்சியை கொண்டிருந்தன. முன் பின் கை காலை வைத்தனர். கைகளைப் பொத்தியவாறு வைத்திருத்தல் முதலிய பண்புகளை இச் சாடி ஓவியங்களில் காண முடிகின்றது.

இவ் வகையில் அடுத்து Geometic period ல் அதாவது கிரேக்கத்தின் ஆரம்ப காலத்தில் களிமண்ணால் ஆன சாடிகளில் பாம் இலைகள் , பறவைகள் , கிறுக்கல் அலங்காரங்கள்,



கோட்டுவடிவங்கள் கேத்திரகணித முறையிலான அலங்காரங்கள் முதலியன ஓவியங்களாக வரையப்பட்டுள்ளன. இவை முன்னோக்கிச் சென்று கிரேக்க சாடி ஓவிய மரபில் Classical Period ல் முதன்மையான இடத்தை வகிக்கின்றன. இவை மட்டுமன்றி Geometic Period ல் பலவிதமான வடிவங்களிலும் பலதரப்பட்ட ஓவியச் சித்தரிப்புக்கள் நிறைந்த சாடிகள் கிடைக்கப் பெற்றுள்ளன. அவற்றுள் 2 கைப்பிடிகொண்ட VASE குறிப்பிடத்தக்கது. இதில் Wine/Oil விடப் பயன்படுத்தபட்டது. கி.மு.10 ம் நூற்றாண்டுக்குரியதாக சுட்டப்படுகின்றது. மைசீனியர் பாணியில் இது அமைக்கப்பட்டுள்ளது. Geometric பாணி படிப்படியாக விருத்தியடைந்து இறுக்கமான வடிவ அமைப்பில் அமைக்கப்பட்டுள்ளது. இதல் களிமண்ணை மூடி அதன்மேல் அலங்கார வேலைப்பாடுகள் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது..

அடுத்து இக் காலத்து மனித உருவங்கள் கொண்டு Geomtric பாணியில் அலங்கரிக்கப்பட்ட ஒரு சாடியும் முதன்மைவாய்ந்ததாக விளங்குகின்றது. இதை Dipylon Vase எனவும் சுட்டுவர். இது கி.மு 8ம் நூற்றாண்டுக்குரியது. குறியீடுகளை விட உருவங்கள் கடுமையாக நாகரீக முறையில் ஒழுங்காக வரையப்பட்டுள்ளது. சாடிகளின் கழுத்துக்கு கீழ்ப் பகுதியில் பிரத்தியோக அலங்காரங்கள் அலங்கரிக்கப்பட்டுள்ளன. உருவ அலங்காரங்கள் யாவும் உயரமாகவும் அகலமாகவும் சாடிகளில் நிரப்பப்பட்டுள்ளது.



கிரேக்கத்தின் அடுத்தவகையான சாடியாக The Krater அமைகின்றது. இதுவும் Geometric period ஐ சேர்ந்தது. இது பெரிய உருவமாகும். வாய்ப்பகுதி அகன்ற அமைப்புடையது. இதில் ஆபரணங்களுக்குச் செய்யும் வேலைப்பாடுகளை ஒத்த அலங்கார வடிவங்கள் காணப்படுகின்றன. அத்துடன் தேர் பூட்டிய குதிரையில் உருவங்கள் வருவது போலவும் போர்வீரர்கள் கேடயங்களை காவி வருவது போன்றும் சித்தரிக்கப்பட்டுள்ளது. இதில் குதிரைகள் யாவும் தம் கால்களை ஒழுங்காக வைக்கும் முறையும் காட்டப்பட்டுள்ளது. வீரர்கள் கேடயங்களுக்குப் பின் நிற்கின்றனர். மேல் வரிசையில் வீரர்கள் யாவரும் ஒரே பக்கத்தில் ஒரே மாதிரியாக வரையப்பட்டுள்ளது. இது அக்கால மக்களின் போர்க் காட்சிகளையும் அன்றாட நிகழ்வுகளையும் எடுத்தியம்புகின்றன. இதனூடாக அக் காலத்தில் உள்ளதை உள்ளவாறு கூறும் திறமை இவர்களுடய ஓவியங்களில் பிரதிபலிப்பது நோக்கத்தக்கதாகும்.



Archaic Period இல்தான் சாடிகள் முக்கியத்துவம் வாய்ந்ததாக காணப்பட்டது. அவை இரண்டு பிரதான பகுதிகளாக பிரிக்கப்பட்டிருந்தன.

1.MainLand

2.Eastern Greece

Main Land இல் முக்கியமான சாடிகள் செய்யப்பட்டிருந்தன. பிரதான மட்பாண்ட கூட்டுஸ்தாபனமாக யதென்ஸ் மாறியது.

முதலாவது காலகட்டத்தை தொடர்ந்து கி.மு.5ம் நூற்றாண்டு, கிமு. 4ம் நூற்றாண்டுக்குரிய சாடி ஓவியங்கள் மிகவு அற்புதமான அழகின் முழுமை நிறைந்த வண்ணங்களில் தீட்டப்பெற்றன. ஹெலனிஸ்ரிக் காலத்தில் உலகுசார்ந்த ஓவியங்கள் பெருமளவில் தீட்டப்பெற்றன. அன்றாட வாழ்க்கையின் மனவெழுச்சிகள் திறம்பட படைக்கப்பட்டன. களிமண் சாடிகளில் கை நகங்கள் , ஆணிகள், குச்சிகள் கயிறு, எலும்பு முதலியவற்றை உபயோகித்து கோடுகள் மூலம் சித்திரம் வரைந்தனர்.

இதனை விட மனித வாழ்வே சிறந்தது எனப் போற்றுதல் கிரேக்க மதத்தினரின் முக்கிய கோட்பாடாக அமைந்தது. இயற்கையின் படைப்பில் மனித இயல்பு ஒன்றே சிறந்தது என கிரேக்கர் கருதினர். புற அழகை பெரிதும் வணங்கினர். இதனால் போர்க் காட்சிகள், வீரர்கள், வேட்டையாடுதல், நடனமாடுதல், இசைமீட்பது, கதைச் சித்தரிப்பு முதலிய அன்றாட யதார்த்தமான நிலைமையை சாடி ஓவியங்களில் வரைந்தனர்.


அத்துடன் விலங்குருவங்களையும் வரைந்தனர். இதில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்க விடயம் விலங்குகளின் தலையைப் போன்று சாடிகளின் கழுத்துப்பகுதிவரை முகம் செய்யப்பட்டுள்ளது. இதற்குச் சான்றாக 'Griffin jug' ஐ சுட்டிக்காட்டலாம். இது கி.மு.7ம் நூற்றாண்டுக்குரியது. கிமு.5ம்நூற்றாண்டில் வாழ்ந்த ஓவியர்கள் தம் படைப்புக்களை சாடிகளில் வரைந்து புகழ்பெற்றவர்கள். அவ்வகையில் அன்டோக்கிடிஸ்(Andokides) குறிப்பிடத்தக்கவர். இவர் ஓவியம் வரைந்த இச்சாடியில் "துன்பக்காட்சி"சித்தரிக்கப்பட்டுள்ளது. இச்சாடி 11 அங்குல உயரம் கொண்டது.இவர் ஊதா,வெள்ளை ஆகிய வர்ணங்களைப் பயன்படுத்தியுள்ளார். புதுமாதிரியான படைப்பை உருவாக்குவதே அவரதுநோக்கமாக இருந்தது.





அடுத்து "இயுபுரெண்டஸ்"(Euphronios) என்ற ஓவியரும் குறிப்பிடத்தக்க இடத்தை வகிக்கின்றார். இவர் வரைந்த சாடிஓவியங்கள் சிவப்பு உருவங்களைக் கொண்டமைந்துள்ளன. கிமு.6ம் நூற்றாண்டில் இவர் வாழ்ந்து ஓவியப்படைப்புக்களை சாடிகளில் வரைந்தார். சாடிகளில் இராட்சத உருவங்களை அதிகம் வரைந்துள்ளார். (Anatomy) உடல் கட்டுமானம் வரைந்து புகழ்பெற்றவர். இதில் 2ஆண் உருவங்கள் குத்துச்சண்டை இடுவதாகக் காணப்படுகிறது. அவர்கள் வீரர்களாகக் கருதப்படுகின்றனர். ஒரு ஆண்உருவம் பக்கவாட்டிலும் மற்றையதை நேராகவும் வரைந்துள்ளார்.

அடுத்து "இயூத்திமிடிஸ்" (Euthymides) என்ற ஓவியரும் குறிப்பிடத்தக்கவர். இவர் அனுபவரீதியான வகையில் ஓவியங்களை வரைந்துள்ளார். தசைத்திரட்சிகளை சாடி ஓவியங்களில் வரைந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.





குறிப்பாக கிரேக்கத்தில் சாடிகள் யாவும் cron, Wine, oil, honey, பழரசம் முதலியவற்றைப் போட்டுப் பாதுகாப்பதற்காகவும் சிறுவர்களுடைய விளையாட்டுப் பொருட்களாகவும்,விருந்திற்குக் கொடுக்க உபயோகிக்கப்பட்டதாகவும் இதன் மூலம்தெரியவருகின்றது.

பொதுவாகத் தொகுத்து நோக்குகின்றபோது கிரேக்கத்தில் சாடிஓவியங்கள் சகலதுறைகளிலும் பரந்து இருந்தமையைச் சுட்டமுடியும். அதாவது சாடிகளில் வரையப்பெற்ற ஓவியங்கள் அக்காலமக்களின் வாழ்க்கைமுறை, சிந்தனை,தொழில் முதலியவற்றைச் சித்தரித்துக்காட்டுகின்றது. இச்சாடி ஓவிய வெளிப்பாடுகளை எப்படிவரைந்தார்கள், எவ்வகையான வர்ணங்களை, அலங்காரங்களை உபயோகித்து வரைந்தனர் என்பதனை அக்கால மக்களின் உள்ளார்ந்த உணர்வுகளின் உள்ளக்கிடக்கையினை சுட்டிக்காட்டுவதன் மூலம் அவதானிக்கமுடிகின்றது.

## Foot Notes

1. Gardner,ArtThrouth the Ages,12 Edition, p . 108,120-124
2. Edith Tomory,A History of Fine Arts in India & the West, p . 298,313,314
3. சபா ஜெயராஜா, கலையும் ஓவியமும், p . 24-25
4. பிரிட்டானிக்கா தகவல் களஞ்சியம், தொகுதி 01, p . 848-849

## References


1. Gardner,ArtThrouth the Ages,12 Edition, 2005
2. Edith Tomory,A History of Fine Arts in India & the West, Orient Longman Privat Limited,1982
3. சபா ஜெயராஜா, கலையும் ஓவியமும், போஸ்கோ பதிப்பகம்,1999
4. பிரிட்டானிக்கா தகவல் களஞ்சியம், தொகுதி 01, வாசன் பதிப்பகம். 2007



**Mr.R.Pragash**
Lecturer(prob)
Visual & Technological Arts

# இசைக் கல்வி பயிலும் மாணவர்களின் இடைவிலகலும் அதற்கான காரணங்களும்

*இசைத் துறையில் ஆர்வக் குறையுடைய மாணவர்களை ஊக்குவித்தலில் உள்ள குறைபாடுகளும் அவற்றை நிவர்த்தி செய்வதற்கான சில வழிமுறைகளும்.*

இசை தனிமனிதனை ஒழுங்குடன் நடக்கும் மனப்பாங்கினை விருத்திசெய்கிறது. சாகித்தியம் விளங்காதபோதும், இசையைக் கேட்டமாத்திரத்தில் இன்பத்தைத் தருகிறது. இசையின் அழகியல் அம்சங்களை ரசித்து மகிழும்படியாக இன்று பல்வேறு ஊடகங்கள் துணைபுரிகின்றன. இத்தகைய நிகரற்ற இசைக் கலையானது எல்லாதேசத்து மக்களையும், எக்காலத்திலும் ஒன்று சேர்க்கும்படியான நியதிகளைக்கொண்டு வளர்க்கப்பட்டு வந்துள்ளது.

சிறந்த அறிவாளிகளைக் "கருவில் உருவான திரு" என்ற அடைமொழியுடன் அழைப்பர். ஒரு குழந்தை தாயின் வயிற்றில் இருக்கும்போதே இசையைக் கேட்கப் பழகிக்கொள்கிறது. கருவில் பெற்ற கேள்விஞானம் பிறப்பின் பின் விருத்தியாகி அதன் நாளாந்த செயல்களில் பிரதிபலிக்கிறது. இதனால் தாயின் வயிற்றில் இருக்கும்போதே ஒரு குழந்தைக்கு இசைப் பயிற்சிகளையும், இசைப்பாடங்களையும் பெற்றோர் வழங்க முடியும். அதன் பலனாக பிற்காலத்தில் அக்குழந்தை சிறந்த ஒரு பாடகனாகவோ, இசை வித்துவானாகவோ ஆகிவிடுகிறான்.

இளஞ்சிறார்களின் கவனத்தை இசை ஈர்க்கிறது. அவர்கள் கேட்கும் இசைக்கேற்ப அசைவுகளைக் காட்டுகின்றனர். தாயின் தாலாட்டைக் கேட்ட பிள்ளை, வளர்ந்து வரும்போது அந்த இசைக்கு வசப்பட்டு விடுகிறது. தான் விளையாடும் விளையாட்டுப் பொருட்களில் இசைக் கருவிகளைச்செய்து அவற்றை இசைப்பதாகப் பாவனை காட்டுகிறது. ஆடல் பொம்மைகளுடன் சேர்ந்து தானும் ஆடப்பழகுகிறது. இவை அவர்களிடம் காணப்படும் இசை ஆர்வத்திற்கான அறிகுறிகளாகும். இவற்றைப் பெற்றோர் கவனிக்கத் தவறுவது மட்டுமல்ல கருத்தில் கொள்வதும் இல்லை. பள்ளிப்பருவத்தில் பிற விடயதானங்களின் கவனஈர்ப்புக் காரணமாக இயற்கையாக அவர்களிடம் காணப்பட்ட இசையார்வம் இலைமறை காயாகி விடுகிறது.

இவ்வாறு இசைத்துறையில் மாணவர்களின் ஆர்வம் குறைவடைவதென்பது தற்காலத்தில் பொதுவானதாக இருக்கிறது. இதற்குப்பல காரணங்கள் காணப்படுகின்றன. எனினும் அதன் அடிப்படைகள் வேறுபட்டனவாக உள்ளன. சில விசேஷ திறன்களைக் கையாள்வதன் மூலம் இக் குறையை நிவர்த்திசெய்யலாம். இசையைக் கற்கும் எந்தவொரு மாணவனும் இயற்கையான ஆர்வத்தினாலேயே இத்துறைக்கு வருகின்றான். ஆனால் குறிப்பிட்டதொரு இலக்கில் அவனது ஆர்வம் குன்றத்தொடங்குகிறது. இது அம்மாணவனை அவனது இயல்பு நிலையிலிருந்து பாதிக்கின்றது. இத்தகையதொரு நிலையில் அவனது பெற்றோரின் பங்களிப்பு, மாணவனது பங்களிப்பு எவை, எவை என்பதனைத் தெளிவுபடுத்தல் வேண்டும். இத்துறையில் ஒவ்வொருவருடைய கருத்துக் கணிப்புக்களும். அனுபவங்களும்

வேறுபட்டனவாக இருக்கலாம்.

இந்த வகையில் இத்துறையில் மேற்குலக நாடுகளில் செய்யப்பட்ட சில ஆய்வுகளின் அடிப்படையில் பின்வரும் தகவல்கள் வெளியாகியுள்ளன. அவை:

- இத்துறையில் தொழில் வாய்ப்புக் குறைவு
- பிறதுறைகளில் உயர்கல்விக்கான வாய்ப்பினைத்தேடுதல்
- தொடர்ந்து கற்பதற்கு நிதி உதவி அரசாங்கத்தால் கிடைக்காமை
- பிரத்தியேக இசைக் கல்லூரிகளில் கல்விபயில வாய்ப்பின்மை
- பொழுது போக்கிற்காக இதனைக் கற்பவர்கள் ஏனையோருக்குக் கற்றுத்தருவதற்கு முன்வராமை, போன்றவை இதற்கான காரணங்களாக அமைகின்றன.

மேலும், பத்துவருடங்கள் பயிற்றப்பட்ட இசைத்துறை மாணவர்களில் மிகச் சொற்பமானவர்களே(1%) அத்துறையைத் தொழிலாகக்கொள்கின்றனர். ஒருபிரிவினர்(4%) பொழுதுபோக்கிற்காக இதனைப் பயில்கின்றனர். பெரும்பாலானோர்(95%) இக் கற்கை முடிவில் மீண்டும் அத்துறையில் பயிற்சிகளை மேற்கொள்ளவோ, இசைக்கருவிகளை வாசிக்கவோ முன்வருவதில்லை. முழுவதுமாக அத்துறைக்கு முற்றுப்புள்ளி வைத்து விடுகின்றனர் என்பதும் தெரியவந்துள்ளது. ஆகக்குறைந்த பயிற்சிக்கால எல்லையாக 18 மாதங்களே எனவும் கணிக்கப்பட்டுள்ளது. அதிலும் தொடர்ந்துகற்போர் தமது பருவ முதிர்வு வயதுகளில்(11,12) இம்முயற்சியைக் கைவிடுகின்றனர். கைவிட்டுப் பிற துறைகளைத் தமது உயர்கல்விக்காகத் தேர்ந்தெடுக்கின்றனர். சில மாணவர்கள் ஆர்வமுடன் இதனை முழுமூச்சாகக்கற்றுத் தேசியமட்டங்களில் பரிசில்களைப் பெறுவதுடன் தங்கள் கற்கையை முடித்துக்கொள்கிறார்கள். இக்கல்விக்கான உயர்கல்வி நிதி உதவிகள், அரச ஊக்குவிப்புக்கள் கிடைப்பதில்லை.அதிலும் அரச கல்லூரிகளில் இத்துறைகள் முடங்கிக்கிடப்பதுவே பெரும்பாலான உண்மையாகும். பெரிய முதலீடுகளுடன் இசைக்கருவிகளைக் கொள்வனவு செய்துவிட்டுப் பேசாமல் இருந்துவிடுகின்றனர்.

இதனை நிவர்த்தி செய்யவேண்டுமெனில் இசைத்துறை அனுபவசாலிகள்,கல்விமான்கள், இரசனையுடையோர் ஆகியோரின் ஆக்கபூர்வமான கருத்துக் கணிப்புக்கள் பெறப்பட்டு விழிப்புணர்வுப் பயிற்சிப் பட்டறைகளை நடாத்தி ஆர்வலர்களை இனம் காணவேண்டும். அத் தரவுகளின் அடிப்படையில் முன்னேற்றமான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். சிறிய வயதில் இசைக்கு ஆர்வத்தையும் உற்சாகத்தையும் ஏற்படுத்திக் கொடுப்பதென்பது மிகவும் முக்கியமாகும். பெற்றோரின் பங்களிப்பு இதில் முக்கியத்துவம் பெறுகின்றது. அவர்களது கவனிப்பு இதில் வலிமையானதாக இருத்தல் வேண்டும். மாணவனின் இசைத்தூண்டுதலை வலுப்படுத்தும் அதேவேளை பெற்றோரின் கவனக்குறைவு மாணவனை இசைத்துறையில் முன்னேறத்தடை விதிக்கும்.

தனது பிள்ளையைத் திறமையான இசையாளனாக ஆக்கவிரும்பும் ஒவ்வொரு பெற்றோரும் தமது இலக்கை அடையும் வரைக்கும் மாணவனுடன் சேர்ந்து கடுமையாக உழைக்கவேண்டும். அவனது நாளாந்த பயிற்சியில் மிகுந்த கவனமெடுத்தல் வேண்டும். அவனது அடிப்படைத்தேவைகளைப் பூர்த்தி செய்தல் வேண்டும். இசைக்கருவியைப் பெற்றுக்கொடுத்தல், பயிற்சிக்கான வசதிகளை வீட்டில் ஏற்படுத்திக்கொடுத்தல்,

குடும்ப அங்கத்தவர்களுக்கு அவனது முன்னேற்றத்தைத் தெளிவுபடுத்தல், பாடநேரங்களில் குறிப்பெடுத்தல், பயிற்சியின்போது மேற்பார்வைசெய்தல் போன்றவை அவனை அக்கறையுடன் பயிற்சிபெறத்தூண்டும். இசைத்துறையில் உயர் நிலையை அடையவேண்டுமெனில் கடும் உழைப்பும், நாளாந்த பயிற்சியும் தேவை."முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்" என்பது முது மொழி

மேலும், ஒரு இசைத்துறைமாணவனை முறையாகப் பயிற்றுவிப்தென்பது மிகவும் சிரமமான காரியமாகும். இதற்கு அதிகளவு பணம், அதிகளவு நேரம்(காலம்), கடும் உழைப்பு என்பன அத்தியாவசியமாகும். உதாரணமாகப் பிரபல வயலின் வித்துவான்கள் தமது பயிற்சித்துறையில் 10,000 மணித்தியாலங்களுக்குமேல் செலவழித்துத் தனிப்பயிற்சியை 21 வயதளவில் முடித்துக்கெள்கின்றனர் என்பதும், ஒருதேசீய மட்டத்தில் அல்லது சர்வதேச மட்டத்தில் ஒரு வித்துவான் சபையில் இவ் இசைக்கருவியை வாசிக்க அவனுக்குக் குறைந்தது 10 வருடங்களாவது வேண்டும் என்பதும் ஆய்வாளர் கருத்துக்களாகும். இத்தகையதொரு சாதனை தற்காலத்தில் மிகவும் கடினமும் சிக்கலும் கொண்டதாகும். இதனால் இத்தகையதொரு காலத்தில் பெரிய முதலீட்டைத் தனி ஒருவருக்குச் செய்வதென்பது இயலாத காரியம். இக்காரணங்களுக்காக இத்துறையில் பணிபுரியும் ஆசிரியர்கள், பெற்றோர், மாணவர்கள் இதில் ஆர்வக் குறையைக் காட்டுகின்றனர் எனலாம். இச்சிக்கல்களைப், பிரச்சனைகளைப் புரிந்துகொள்ளவேண்டியது அவசியமாகும்.

இவற்றினடிப்படையில் எத்தகைய தூண்டுதல்கள் இசைத்துறை மாணவர்களை இத்துறையில் ஆர்வப்படுத்துவதற்கு அல்லது ஊக்குவிப்பதற்கு உதவும் என்று சிந்திக்க வேண்டும். முதலில் இசையைப்பாடவோ அல்லது ஒரு வாத்தியத்தை வாசிக்கவோ ஒருவர் விரும்புதல் வேண்டும். அதாவது சுயவிருப்பம் உடையவராக இருத்தல் வேண்டும். அதனைக் கற்பிப்பவர், சபையில் மாணவனை அறிமுகப்படுத்துபவர் என்போரின் முழு ஒத்துழைப்பும் மாணவனுக்கு அவரின் சுயபயிற்சியில் துணைசெய்யவேண்டும். மாணவர் தமது சுயதிறனை அளக்கும் கருவியாகத் தமது ஒத்தவயதினரை(peer group) அணுகவேண்டும். அவர்கள் நேர்மையானவர்களாக, சரியான தீர்மானம் உடையவர்களாக அதேநேரம் தரமான கற்பித்தலுக்கு ஊக்கம் கொடுப்பவர்களாக இருத்தல் வேண்டும். தரக்குறைவான கற்பித்தலையும் நிகழ்ச்சிகளையும் தடைசெய்பவர்களாகவும் இருத்தல்வேண்டும். அதற்கான அளவுகோல்களாகக் குறுகியகால, மத்தியகால, நீண்டகால எல்லைகளாகப் பயிற்றப்படும் காலங்கள் அமைதல் நன்மை பயக்கும்.

பயிற்றுவிப்பாளர்கள் இத்துறை மாணவர்களை வயதினடிப்படையிலும், அவர்களின் தராதரங்களின் அடிப்படையிலும் பிரித்துக் கற்பித்தல்வேண்டும். இதில் இளஞர்கள் ஆசிரியர்களுடன் ஒத்துழைப்பர், உற்சாகமாக இருப்பர், நல்ல பலாபலன்களைக் காணலாம். வயதில் மூத்தோர் தமது சுயபயிற்சி, கெட்டித்தனங்கள்,ஞானம், அனுபவங்களால் மிளிர்வர். இரு பிரிவினர்க்கும் ஆசிரியர்கள் மிகுந்த கவனமெடுத்துப் போட்டி மனப்பான்மையுடன் அவர்களைப் பயிற்றுவித்தல் வேண்டும். இதனால் பெறுமதியான பலாபலன்கள் கிடைக்கும். மூத்தோர் இளைஞருடன் ஒத்துழைக்கிறார்களா அல்லது தமது சம வயதினருடன் மட்டும்தான்

ஒத்துழைக்கிறார்களா என்பதில் கவனமெடுத்தல்வேண்டும். அப்போதுதான் அம்மாணவர்களின் வெற்றி நிச்சயமாகும். திறமையான நிகழ்ச்சிகளைத் தயாரிப்பதற்கு அனுகூலமாகவுமிருக்கும்.

பாடங்கள் ஒவ்வொன்றாக முடிக்கப்படல் வேண்டும். தனியொருவரின் திறமையில் அதிக கவனமெடுத்தல் கூட்டுநிகழ்ச்சிகளில் அவரை இணைத்துக்கொள்வதற்கு உதவியளிக்கும். ஒவ்வொரு கட்டத்திலும் தொகுதி தொகுதியாகப் பாடல்களைக் கற்பித்தல் நன்று. பின்பு கூட்டாக அவர்களை இணைத்துப் பழக்குதல் வேண்டும்.

ஆசிரியர்கள் அடிக்கடி இசைநிகழ்வுகளைத் தயார் செய்து சிறியளவில் மேடையில் பாடவோ,வாசிக்கவோ மாணவர்களைப் பழக்குதல் வேண்டும். கற்றவற்றைச் சிறிய அளவுகளில் வாசித்தல் என்பது மாணவர்களை ஊக்குவிக்கும் ஒரு செயற்பாடாகும். தனது திறமைகளில் அவருக்கு நம்பிக்கை ஏற்பட இது சிறந்ததொரு வழியாகும். போட்டிகளுக்கும், போட்டிகளுக்கு மேற்பார்வையாளராகவும் செயற்பட அனுமதியளிக்கப்படல் வேண்டும். தமது கற்றல் தராதரத்தினின்றும் தனது கற்கையின் அளவினின்றும் தம்மைத்தாமே கணித்துக்கொள்ளல் வேண்டும். தமது தராதரத்தை நிர்ணயித்துக் கொள்ளல் வேண்டும்.இத்தகைய பயிற்சிகள் மாணவனது முதல் அரங்கேற்றத்திற்குத் துணையாகவிருக்கும். இதனால் அவர்கள் தமது முதல் அரங்கேற்றத்தில் ஆர்வத்துடன் கலந்துகொள்வர். ஆசிரியர்கள் மிகுந்த ஊக்கம்கொடுக்க வேண்டும். தான் கற்பித்த அடிப்படை அறிவினையும், சகல நுணுக்கங்களையும், நுண்ணறிவுகளையும், இசையின் பிரம்மாண்ட தத்துவம், இசையின்பம், நோக்கம் எல்லாம் மிளிர மாணவனின் ஆற்றலை வெளிக்கொண்டுவர வேண்டும்.

இத்தகைய பயிற்சிகள் மாணவனது முதல் அரங்கேற்றத்திற்குத் துணையாகவிருக்கும். இதனால் அவர்கள் தமது முதல் அரங்கேற்றத்தில் ஆர்வத்துடன் கலந்துகொள்வர். ஆசிரியர்கள் மிகுந்த ஊக்கம்கொடுக்க வேண்டும். தான் கற்பித்த அடிப்படை அறிவினையும், சகல நுணுக்கங்களையும், நுண்ணறிவுகளையும், இசையின் பிரம்மாண்ட தத்துவம், இசையின்பம்,நோக்கம் எல்லாம் மிளிர மாணவனின் ஆற்றலை வெளிக்கொண்டுவர வேண்டும்.

இது தவிர இசை வரலாற்றை மாணவனுக்கு அறிவுறுத்தல் வேண்டும். இசையானது மாணவனின் வாழ்வின் நேர்மையான மூலப்பொருளாக (element) இருக்கச்செய்தல் வேண்டும். வீணே ஆசிரியர் தமது வித்துவத்தினை மாணவரிடம் திணித்தலாகாது. இவ்விடயம் கண்டிப்பாகக் கருத்தில் கொள்ளப்படல் வேண்டும். அவரது வீட்டில், குடும்பத்தில், சபையில் அவரது திறனை வெளிக்கொண்டுவருவதற்கு ஆசிரியர், மாணவனுக்கு ஒத்துழைப்புக் கொடுத்தல் வேண்டும்.

ஆரம்ப பாடசாலைகள், இடைநிலைப் பாடசாலைகள், பல்கலைக் கழகங்களிலும் இத்தகைய பயிற்சிகளைக் கையாள்வதன் மூலம் அதிகளவு பலன்களைப் பெறலாம். இந்தவகையில்,

ஆரம்ப பாடசாலைகளில்:

- தலைமை ஆசிரியர், இசை ஆசிரியருடன் இணைந்த கலந்துரையாடல்
- கேள்விக்கொத்து மூலம் விபரங்கள் சேகரித்தல்
- இசை நிகழ்வுகளைப் பொதுமைப் படுத்தல்
- இசைப்போட்டிகள் நிகழ்த்திப் பரிசில்கள் வழங்கல்
- வருடாந்த இசைவிழாக்கள் நடத்தல்
- சிறுவர் இலக்கியப் பாடல்களை அறிமுகம் செய்தல்
- பாடல் ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளித்தல்.
- இசை ஆசிரியர்களின் இசை நிகழ்வுகளை நடாத்துதல்


போன்ற முன்னேற்றத்திற்கான நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் இசை மாணவரின் இடைவிலகல்களைக் கட்டுப்படுத்தி சுயமுயற்சிகளில் ஈடுபடுத்தலாம். இவர்களை உரியநேரத்தில் இனம் கண்டு அவர்களுக்குத் தகுந்த வாய்ப்புக்களையும், பயிற்சிகளையும் அளித்தால் உயர்தரமுள்ள இசைவிற்பன்னர்களையும், வாத்தியக் கலைஞர்களையும் கொண்ட சமுதாயத்தை உருவாக்கமுடியும்.


உசாத்துணை

http://www.scena.org/lsm/sm10-1/Teacher-motivate.htm
***by Eric Ginestier*** / September 9, 2004
http://www.scena.org/lsm/sm10-1/Education_en.htm
***by Noémie L. Robidas*** / September 9, 2004
http://www.reversespins.com/effectsofmusic.html
by Kristian David Olsonavid Oslo /2/22/96
http://www.articlealley.com/article_1327687_48.html
by: teacher /06th January 2010.



**Mrs.Jayanthi Dissanayake**
Lecturer (prob) Music

# நுண்கலையுள் இசைக்கலை

மனிதனுடைய நல்வாழ்விற்குத் துணை செய்யும் பல்வகைத் தொழில்களையும் 'கலைகள்' என்று கூறலாம். மனிதனுடைய தொழில்களுள் உழவு, வணிகம், மருத்துவம், நெசவு முதலிய தொழில்கள் இன்றியமையாத் தொழில்களாக உள்ளன. இத்தொழில்கள் அனைத்தும் கலையின் பாற்பட்டனவையே ஆகும். பல்வகைத் தொழிலின் அடிப்படையாகத் தோன்றிய பல்வகைக் கலைகளையும் பண்டைத் தமிழர் அறுபத்தி நான்காக வகுத்துப் போற்றி வாழ்ந்துள்ளனர். இதனை,

'எண்ணென் கலையுமிசைந்துடன் போக'

என்ற சிலப்பதிகார அடியால் குறிப்பிடலாம்.

இவ் அறுபத்து நான்கு கலைகளேயன்றி அவற்றைப் பின்பற்றிய வேறு பல கலைகளும் உள்ளன. பல்வகைக் கலைகளுக்கெல்லாம் தெய்வமாக விளங்கும் தேவியை 'கலைமகள்' என்றே அழைக்கின்றோம். கலைமகள் என்னும் தேவியே கலைகளை அருளுபவள் என்பது முன்னோரின் கூற்றாகும். இதனை

'ஆய கலைகள் அறுபத்து நான்கினையும் -ஏய
உணர்விக்கு மென்னம்மை - தூய
உருப்பளிங்கு போல்வாளென்னுள்ளத்தினுள்ளே
இருப்பளிங்கு வாராதிடர்' என்னும் பாடற்செய்யுளால் உணர்த்தப்படுகின்றது.

***கலைகளின் வகை***

பல்வகைக் கலைகளையும் தொழில் புரிவோர் காரணமாகவும், பண்புச்சிறப்புக்காரணமாகவும் வகைப்படுத்தலாம். தொழில் புரிவோர் காரணமாக வகைப்படுத்துங்கால், அந்தணர்க்குரிய கலைகள், அரசர்க்குரிய கலைகள், வணிகர்க்குரிய கலைகள், வேளாளர்க்குரிய கலைகள், மகளிர்க்குரிய கலைகள், பொதுமைக் கலைகள் என வகைப்படுத்தலாம். பண்புச்சிறப்புக் காரணமாக வகுக்குங்கால் நுண்கலைகள் என்றும் பிற கலைகள் என்றும் இரு பிரிவாக பிரிக்கலாம்.



நுண்கலைகள் அவையாவன. கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, இசைக்கலை, காவியக்கலை என்பனவாகும். இந்நுண்கலைளை 'கவின் கலைகள்' என்றும் 'இன்கலைகள்' என்றும் நன்கலைகள்' என்றும் கூறலாம். இத்துணைப் பெயர்களுள் இக்கலைகளின் பண்புச்சிறப்புக் காரணமாகவே தோன்றியனவாகும். பிற கலைகள் என்பதனுள் நகரமைப்புக்கலை, வணிகக்கலை, மருத்துவக்கலை, போர்க்கலை, சோதிடக்கலை முதலிய பல கலைகள் அடங்கும்.

*நுண்கலைப் பண்பு*

மனிதனுடைய நுண்ணறிவோடும் திறமையோடும் வெளிப்படுத்துவது நுண்கலை. அந்நுண்கலை மனிதனுடைய உள்ளத்தில் உணர்ச்சியை எழுப்பி இன்பத்தையும், நிறைவையும், கற்பனையையும் எழுப்பும் பண்பைக் கொண்டதாகும். மனிதன் தன்னுடைய நுண்ணறிவாலும், மனவியல்பாலும், கற்பனையாலும் நுண்கலைகளைப் படைத்து அவற்றின் மூலம் உணர்ச்சியையும் இன்பத்தையும், அழகையும் பெறுகின்றான். நுண்கலைகளின் அருமைப்பாட்டை நுண்ணிதாக உணரப்படுதலின் 'நுண்கலைகள்' என்ற பெயரினைப் பெற்றன. நுட்பங்கள் மிகப் பெற்ற நுண்ணிதின் உணரப்படுகின்ற நுண்கலைகள் மிகப் பெற்ற நாடே நனி சிறந்த நாகரிக நாடாகும். நாகரிகம் பெற்ற மக்கள் உலகில் எங்கெங்கு வாழ்கின்றனரோ அங்கங்கெல்லாம் நுண்கலை உண்டு என்று தெள்ளத் தெளிவாகக் கூறலாம்.

நாகரிகம் பண்புற்று விளங்கும் நாடுகளில் நுண்கலைகள் நன்கு வளர்ச்சியடைந்திருக்கின்றன. ஆனால் நாகரிகமுற்ற அனைத்து நாடுகளிலும் ஒரே விதமான நுண்கலைகள் வளர்வதில்லை. நாடுகள் தோறும் வேறுபட்ட நுண்கலைகளையே காண்கின்றோம். வெவ்வேறு நாடுகளில் வேறு வேறு விதமான நுண்கலைகள் தோன்றி வளர்ந்திருப்பினும், அவற்றின் பண்புச் சிறப்பு ஒரே வகையில் ஒத்து இருப்பதனைக் காணமுடிகின்றது என்று கூறலாம். அந்தந்த நாட்டின் இயற்கையமைப்பு, தட்பவெப்பநிலை, பழக்கவழக்கங்கள், மனநிலை, சமயக் கொள்கை, வாழ்க்கை முறை முதலியவற்றிற்கேற்ப நுண்கலைகள் வெவ்வேறு விதமாக உருவடைந்து வளர்ந்துள்ளன. இக்காரணங்களால்தான் நாகரிகமும் வேறுபடுகின்றது. நுண்கலைகள் வேறுபட்டிருப்பின் நாகரிகம் வேறுபட்டிருக்கும் என்றும், நாகரிகம் வேறுபட்டிருப்பின் நுண்கலைகள் வேறுபட்டிருக்கும் என்றும் திட்டவட்டமாகக் கூறலாம். மேற்கூறிய காரணங்களால்தான் நம் நாட்டு நுண்கலைகளும், கிரேக்க நாட்டு நுண்கலைகளும், சீன நாட்டு நுண்கலைகளும், உரோம நாட்டு நுண்கலைகளும், பிறநாடுகளின் நுண்கலைகளும் வேறு வேறு வகையில் வளர்ச்சியடைந்துள்ளன என்று கூறலாம். அனைத்து நாடுகளின் நுண்கலைகளும் உருவத்திலும், வளர்ச்சியிலும் எத்தனை வேறுபாடுகளைக் கொண்டிருப்பினும் உள்ளத்தில் உணர்ச்சியை எழுப்பி, அழகுக் காட்சிகளை நல்கி, இன்பத்தை வழங்கும் பண்பில் ஒத்து விளங்குகின்றது என்று கூறலாம்.

*நுண்கலை விளக்கம்*



கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, இசைக்கலை, காவியக்கலை என்ற ஐந்தும் நுண்கலைகளாகும். இவற்றுள் கட்டடக்கலையை சிற்பக்கலையுடன் இணைத்து சிற்பக் கலை என்று கூறுவோரும் உளர். ஆனால் கட்டடக்கலை வேறு, சிற்பக்கலை வேறு. காவியக்கலை என்பதனுள் நாடகமும், நடனமும் அடங்கும். எனவே இதனை நடனக்கலை என்றும், நாடகக்கலை என்றும் கூறலாம். பண்டைத் தமிழர் இசைக்கலையையும், காவியக்கலையையும் கொண்டு இயல், இசை, நாடகம் என்று தமிழை முக்கூறுபடுத்தினர். இயற்றமிழ் என்பது காவியக்கலையாகும். செய்யுள் நடையிலும், உரை நடையிலும், காவியம் அமைப்பதே இயற்றமிழ் எனலாம். செய்யுளை இசையோடு பாடுவது இசைத்தமிழ் எனலாம். இயலும் இசையும் கலந்து ஏதேனும் கருத்தையோ, அல்லது கதையையோ தழுவி வருவது நாடகத்தமிழ் எனலாம். நாடகத்தமிழில் நடனம், கூத்து என்பவையும் அடங்கும் எனவே நுண்கலைகள் ஐந்தையும்விரித்துக் கூறுமிடத்து நாடகக்கலை, நாட்டியக்கலை என்ற இரண்டும் சேர்ந்து ஏழு என்றும் கூறலாம். கட்டடக்கலை என்பது கண்களால் கண்டு இதயம்

குளிரத்தக்க நுட்பமான வேலைப்பாடுகளைக் கொண்டது. கட்டடம் பருப்பொருளாக உள்ளபடியால் சேய்மையினின்றும் பார்த்து மகிழத்தக்கதாகும்.

சிற்பக்கலை என்பது உலகில் உள்ள இயற்கைப் பொருள்களின் வடிவத்தையும், உலகில் இல்லாத பொருள்களைக் கற்பனையால் உருவம் கொடுத்தும் அழகு பட அமைப்பதாகும். சிற்பக்கலையுள் விலங்கு, பறவை, தாவரம் முதலிய உயிர் வகைகள் மிகுதியாக இடம்பெறும். இக்கலை கட்டடக்கலையினும் நுட்பம் வாய்ந்தது. இச்சிற்பக்கலையையும் கண்களால் கண்டு அதன் அருமைப்பாட்டினை நுண்ணிதின் உணர்ந்து மகிழலாகும்.

ஓவியக்கலை என்பது மேற்கூறிய இரு கலைகளிலும் நுட்பம் உடையது. உலகில் புலனாகின்ற பொருள்களின் வடிவத்தையும் பல்வகை வண்ணங்களால் அழகுமிக எழுதப்பெறுவதாகும். சிற்பக்கலையை அருகில் நின்று கண்டு மகிழ்தலைப் போன்றே நுண்ணிதின் அருமைப்பாட்டினையறிந்து இன்புறுதலைப் போன்றே இக்கலையையும் கண்டு இன்புறவியலும்.


மேற்கூறிய மூன்று கலைகளும் கண்களால் கண்டு மகிழ்ந்தமை போன்று கண்ணுக்குப் புலனாகாத கலை இசைக்கலை. இசைக்கலையைக் காதினால் கேட்டு நுண்ணறிவால் அதன் நுட்பமுணர்ந்து இன்புறத்தக்கதாகும். மேற்கூறிய மூன்று கலைகளினும் மிகவும் நுட்பம் வாய்ந்த கலை இசைக்கலையே ஆகும்.

காவியக்கலையும் கண்ணுக்குப் புலனாவதின்று காதினாலேயே கேட்டு இன்புறக் கூடும். காதினால் கேட்டு இன்புறக் கூடுமாயின் கேட்பதனால் மட்டும் இன்புற வியலாது. இன்புறுதற்கான மனவுணர்வும் அறிவுப் பெருக்கமும் இருத்தல் வேண்டும். இசைக்கலையில் அறிவு இல்லாதோரும் கேட்டு இன்புற முடியும். காவியக்கலையில் அங்ஙனம் முடிவதில்லை. எனவே மேற்கூறிய நால்வகைக் கலைகளினும் நுட்பம் வாய்ந்த கலையாகக் காவியக்கலை விளங்குகின்றது. இசைக்கலையோடு தொடர்புடைய நடனம், நாட்டியம், கூத்து என்பவையும் காவியக் கலையோடு தொடர்புடைய நாடகம் ஆகியவையும் கண்களால் கண்டும், காதுகளால் கேட்டும் இன்புறத்தக்கவையாக விளங்குகின்றன.

*முதன்மை பெறும் கலைகளில் இசைக்கலை*

நுண்கலைகளுள் இசைக்கலை முதன்மையான கலையாக மிளிர்கின்றது. பலவகையான காரணங்களால் இசைக்கலை நுண்கலையுள் தலைமையிடத்தைப் பெறுகின்றது. அக்காரணங்களை பின்வருமாறு நோக்கலாம்.

1) இசைக்கலை கலைஞர்க்கும் இரசிகர்கட்கும் ஒரே நேரத்தில் இன்பம் பயக்க வல்லதாகும். இந்த எழில் நிலை அனுபவம் நுண்கலையுள் பிற கலை எதற்கும் இல்லை. பிற கலைகள் அனைத்தும் கலைஞர்கள் இயற்றி முடித்த பின்னர் பிறரால் கண்டும் கேட்டும் மகிழத்தக்க கலையாகும். இசைக்கலையொன்றே நிகழும் போது இசைப்போர்க்கும் இரசிப்போர்க்கும் இன்பமூட்டும் எழில் கலையாக வியங்குகின்றது.



2) இசைக்கலை இறைவனின் எழில் கலையாக மிளிர்கின்றது. இசையின் ஒலிக்கோர்வையே இறைவனின் எழில் உருவம் ஆகும். இறைவனே இசையின் வடிவமாக உள்ளான். இத்தகைய விழுமிய நிலை நுண்கலைகளுள் வேறெந்தக் கலைக்கும் இல்லை.

3) நுண்ணுணர்வு உடையோரும், நுண்ணுணர்வு இல்லாதோரும், கற்றோரும், கல்லாதேரும் கேட்டு இன்புறும் பேற்றினைக் கொண்ட கலையாக

இசைக்கலை விளங்குகின்றது. காவியக்கலையை நுண்ணறிவில்லார் கேட்டுணர்ந்து மகிழவியலாது.

4) பிணியாளர்களின் பிணிக்கொடுமையை குறைத்துக் குணப்படுத்த வல்ல கலையாக இசைக்கலை திகழ்கின்றது. நோய்க்கு மருந்தாகும் பேற்றினைப் பெற்ற கலையாக இசைக்கலை மிளிர்கின்றது. இக்கொடை வேறெந்த கலைகளுக்கும் கிடையாது.

5) இயங்கு திணைப்பொருள், நிலைதிணைப் பொருள் ஆகிய இருவகைப் பொருள்களும் இசைக்கலையொன்றினையே கேட்டு இன்புறுகின்றன. மனித இனம் மட்டுமே பிற கலைகளை விரும்பி மகிழ்கின்றது. பிற உயிரினங்களையும், அஃறிணைப் பொருள்களையும் ஈர்த்து உருக்க வல்ல தன்மை இசைக்கலைக்கு மாத்திரமே உண்டு.

6) இறைவன் இசைவடிவானவன். திருமால் சங்கினை தனது இசைக் கருவியாக தாங்கி இருக்கிறான். கண்ணன் குழலிசைக்கும் பண்பினைக் கொண்டவனாக இருக்கின்றான். எனவே அனைத்து தெய்வங்களுக்கும் ஏற்புடைய கலையாக உள்ளது இந்த இன்னிசைக் கலையே எனலாம்.

7) கலைகளை அருளுபவள் கலைமகள் என்னும் தெய்வம். அத்தெய்வம் தன்கையில் தாங்கியிருப்பது இன்னிசைக்கருவியாகிய வீணை. இதினின்றும் கலைமகளுக்கும்இசைக்கலைக்கும் உள்ள தொடர்பு இனிதே புலனாகின்றது. பிற கலைகளின் தொடர்பை உணர்த்தும் தன்மை கலைமகளிடம் இடம்பெற வில்லை எனலாம்.

8) இறைவனை வழிபடுவதற்கென்று பல முறைகள் உள்ளன. அவற்றுள் இசை வழிபாட்டு முறையும் ஒன்று. பிற வழிபாட்டு முறைகளினும் நின்று இசை வழிபாட்டு முறை மேலானது. இறைவனும் இசை வழிபாட்டு முறையினையே பெரிதும் விரும்புகின்றான். இசைக்கலைக்கு கிடைத்த இந்த கொடை வேறெந்தக்கலைக்கும் கிடைக்கவில்லை எனலாம்.

9) இசைக்கலை உள்ளத்தைத் தூய்மைப்படுத்தி அமைதியையும் இன்பத்தையும் கொள்ளை கொள்ளச் செய்கின்றது. உலகு, உயிர், கடவுள் அனைத்தையுமே உவகையுறச் செய்கின்றது. இத்தன்மை வேறெந்த கலைகளுக்கும் கிடையாது.

ஆகவே இசைக்கலையை தெய்வீகக் கலை என்று போற்றி வளர்த்து வருகின்றனர். ஏனெனில் தெய்வத்தினிடம் அதிகம் ஈடுபாடு கொண்ட கலையாதலாலும், தெய்வம் விரும்புகின்ற கலையாதலாலும் இக்கலை தெய்வீகக்கலையாக மதிக்கப்படுகின்றது இத்தகைய தெய்வீகப்பண்பு வேறெந்தக் கலைகளுக்கும் அமையவில்லை. எனவே ஒட்டுமொத்தமாக நோக்கின் மேற்கூறிய காரணங்களால் நுண்கலையுள் இசைக்கலை முதன்மையான கலையாக போற்றி வளர்க்கப்பட்டும், மதிக்கப்பட்டும் வருகின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகக் கொள்ளப்படுகின்றது.

உசாத்துணை நூல்கள்


1) தமிழர் இசை : டாக்டர் ஏ.என். பெருமாள் - உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் சென்னை.

2) இசையியல்:வெற்றிச் செல்வன்- மணிவாசகர் பதிப்பகம் - சென்னை.

3) இந்திய இசைக்கருவூலம் : டாக்டர் கே.ஏ. பக்கிரிசாமி - குசேலர் பதிப்பகம் - மதுரை



ஸ்ரீமதி.
***ஜயந்தினி விக்னராஜன்***
M.A.M.Phil
விரிவுரையாளர்
இசைத்துறை

# சுவாமி விபுலாநந்தர் நோக்கில்

## சுவாமி விபுலாநந்த அழகியற் கற்கைகள் நிறுவகம்

சமூகம் முரண்பாடுகளையும், மாற்றங்களையும் கொண்டுள்ளது. சமூகத்தின் முரண்பாடு களையும், மாற்றங்களையும் இனங்கண்டு தம் காலத்தில் அதற்கான வழிவகைகளைக் கூறிச்செல்வர் சிந்தனையாளர்கள். இவர்களுள் அறிஞர், கலைஞர், துறவிகள் முக்கிய இடம் பெறுவர். சுவாமி விபுலாநந்தர் இம் மூவரும் ஒன்றிணைந்த ஓர் அற்புத கலவை. அவர் சிந்தனைகள் கணிப்பிற்குரியன. வழிகாட்டற்குரியன.

சுவாமி விபுலாநந்தர் காலச் சூழல்

சுவாமி விபுலாநந்தர் 1842-1947 வரை வாழ்ந்தவர். தனது 55வயதிலே காலமானார். அவர் வாழ்ந்த காலப்பகுதி தென்னாசியாவில் மிகமுக்கியமான காலப்பகுதியாகும். முரண்கள் மலிந்த காலமது. இந்திய அரசியலில் வெள்ளையரும், சுதேசிகளும் முரண்பட்டுக் கொண்டனர். அத்தோடு இந்திய இந்துக்களும், இந்திய முஸ்லிம்களும் முரண்பட்டுக் கொண்டனர். தமிழ்நாட்டு அரசியலில் பிராமணரும், பிராமணர் அல்லாதோரும் முரண்பட்டுக் கொண்டனர். இலங்கையில் சிங்கள தேசியவாதமும், தமிழ் தேசியவாதமும் முரண்பட ஆரம்பித்த காலம். அதே நேரம் பௌத்த, இந்து, கிறிஸ்தவ முரண்பாடுகள் பனிமூட்டமாகத் தெரிந்த காலம் அது.

உலகியலில் பழைய இலக்கியமும், நவீன இலக்கியமும் சாதியால் உயர்ந்தோரும், தாழ்ந்தோரும், துறவு நெறியும் உலகியல் நெறியும் முரண்பட்டு நின்ற காலங்கள் அவை.

இம்முரண்பாடுகளை சுவாமி விபுலானந்தர் எவ்வண்ணம் புரிந்து கொண்டார், எவ்வண்ணம் முகங்கொடுத்தார், எவ்வண்ணம் தீர்வு கண்டார் என்பதை அறிதல் நமக்குப்பயன் தரும். இம்முரண்பாடுகளை அவர் கையாண்ட முறைமையினை கீழ்வரும் அவரது கூற்று விளக்கும்.

"பழமையும், புதுமையும், துவைதமும்
அத்வைதமும், பௌதீக விஞ்ஞானமும்
மெஞ்ஞானக் காட்சியும், மேற்றிசை
யறியும் கீழ்த்திசைச் சமயமும், மன
மொடுங்கிய தியான நிலையும், மன்
பதைக்குத் தொண்டு செய்தலும்
சமரசப்பட வேண்டிய காலம் இது."

என்பது அவரது கூற்று.

முரண்களுள் சமரசம்

முரண்களைக் காணுதல், முரண்வழிச் செல்லாது முரண்களுக்குள் காணப்படும் நல்லனவற்றை இணைத்துச் சமரசம் காணுதல் இதன் மூலம் மனுக்குலத்துக்கு (மக்கள்) சேவை செய்தல். இதுவே அவரது சிந்தனையும், செயற்பாடுமாகும்.

இத்தகைய சிந்தனைகள் உருவாக அவருக்கு அவரது மரபுவழிக்கல்வி, ஆங்கிலக்கல்வி, வடமொழிக்கல்வி, பன்மொழி அறிவு, விஞ்ஞான கணித அறிவு, இராம கிருஷ்ண மடத் தொடர்பு என்பன பண்புலமாக அமைந்தன.

காலத்தோடு ஒட்டிச்சிந்திப்பவர்கள் சிந்தனையாளர்கள். காலத்தை மீறித் தொலைநோக்கில் சிந்திப்போர் மேதைகள். சுவாமி விபுலானந்தரின் சிந்தனைகள் தொலை நோக்குடைய சிந்தனைகளாகும்.

தனித்துவத்தை விட்டுக் கொடுக்காது தமிழ் மக்கள் முரண்களுக்குள் சமரசமாக வாழ வேண்டும் என்பதும், தமிழர்கள் சாதிபேதமற்று அறநெறிமிக்கோராயும், பரந்த மனப்பாங்குடையோராயும் வாழவேண்டும் என்பதும் சமூக நோக்கு பற்றிய அவரது சிந்தனைகளாகக் காணப்படுகின்றன.

அவரது கட்டுரைகளிலும், நூல்களிலும் இக்கருத்துக்களையே காணுகிறோம்.

யாழ்நூல்

அவரது புகழ் பெற்ற ஆராய்ச்சி நூலான யாழ்நூல் தமிழரது இசைபற்றிக் கூறுகிறது. ஆபிரகாம் பண்டிதர் முதலானோர் இதுபற்றி முன்னரேயே பேசினோராயினும் விஞ்ஞான ரீதியாக ஆராய்ச்சி முறையியலுக்கூடாக தமிழர் இசையை நிறுவியர் சுவாமி விபுலானந்தர் அவர்களே.

இந்நூல் கர்னாடக இசை தமிழர் இசையாகக் கருதப்படமுன்னர் தமிழர் மத்தியில் இருந்த பண்ணிசையான தமிழிசை பற்றிக் கூறுகிறது. அத்தோடு அழிந்தொழிந்து போன பண்டைய தமிழரின் இசைக்கருவியான யாழ் கருவிகளையும் உருவாக்கிக் காட்டினார் சுவாமி.

மதங்க சூளாமணி

அவரது நாடக நூலான மதங்க சூளாமணி நாடக இலக்கியம் பற்றிக் கூறுகிறது. தமிழரின் நாடகக் கோட்பாடுகளையும், வடமொழி நாடகக் கோட்பாடுகளையும் தருவதுடன் சேக்ஸ்பியரின் நாடகங்களை அக்கோட்பாடுகளின் பின்னணியில் வைத்து இந்நூல் பார்க்கிறது.

அவரது இலக்கியக் கட்டுரைகள் தமிழ் இலக்கிய மரபையும், விமர்சன மரபையும் அழுத்திக்கூறுவதுடன் மேற்கத்தைய இலக்கியங்களையும், விமர்சனங்களையும் தமிழர்க்கு அறிமுகம் செய்கின்றன.

கட்டுரைகள்

கலை பற்றிய அவரது கட்டுரைகள் தமிழ் மக்களுக்கான அழகியல் கலைப்பாரம்பரியம் என்பன பற்றிப் பேசுன்றன. வளர்ந்து வரும் உலகப்போக்குகளை தம்வயப்படுத்தி நமது மரபினடியாக தன்வயமாக்கி உள்வாங்க வேண்டும் என்பதே அவர் நோக்கு. நவீனத்தை அவர் வரவேற்றார். நவீனம் நமது மரபுகளை அழித்து விடக்கூடாது என அவர் விரும்பினார்.

சிந்தனைகளின் சாரம்.

இவர் எழுத்துக்களிலும், வாழ்விலும் காணப்படும் தன்மைகள் பின்வருமாறு சமரசப்போக்கு, இசை நாடகம், ஓவியம், சிற்பம், இலக்கியம் என்பவற்றில் கீழ் நாட்டுத் தனித்துவம், விஞ்ஞான பூர்வமான ஆராய்வு அணுகுமுறை, சகலரும் சமனாக வாழும் சமநீதி மனுக்குல (மக்கள்)த்துக்குச் சேவை செய்தல்.

அவரின் சிந்தனைகளில் சாராம்சங்களைப் பின்வருமாறு வகுக்கலாம்.

1.உலக விடயங்களுக்கு பரிட்சயமாதல். (Expose)
2.தனித்துவங்களைப் பேணல், வளர்த்தல்.
3.உணர்ச்சிமயமாக அன்றி அறிவுமயப்பட்ட ஆராய்ச்சி அணுகுமுறை.
4.மக்களுக்குச் சேவை.

அவர்காட்டிய இத்தனை விடயங்களும் சுவாமி விபுலாநந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்திற்கு நான்கு விளக்குகள் போல வழிகாட்ட வேண்டும். இன்றைய இருள்சூழ்ந்த சூழ்நிலையினின்றும் மீள்வதற்கு விபுலானந்தர் தந்த விளக்குகளைக் கையில் எடுத்துக்கொள்வது நன்று.

## அழகியற் கற்கைகள் நிறுவக வரலாறு

### அமைச்சின் கீழ்

விபுலாநந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் வரலாறு அதனைப் புரிந்து கொள்ள நமக்கு உதவும்.

இக்கல்லூரி இசை நடனக் கல்லூரி என்ற பெயரில் 1982ல் ஆரம்பிக்கப்பட்டது. அன்று இந்து கலாசார அமைச்சராக இருந்த செல்லையா இராசதுரை தமிழக அரசின் உதவியுடன் இதனை ஆரம்பித்தார். யாழ்ப்பாண இராமநாதன் நுண்கலைக் கல்லூரி போல ஒன்றை இங்கு நிறுவுவதும் கர்நாடக இசையையும், பரத நாட்டியத்தையும் இம்மண்ணில் வேரூன்றச் செய்வதுமே அவரது அன்றைய நோக்காக இருந்தது. அதனால் இக்கல்லூரி அவரது அமைச்சான இந்து கலாசார அமைச்சின் கீழ் இருக்கவேண்டியதாயிற்று. இத்தகைய ஒரு கல்லூரியை இம்மண்ணில் உருவாக்கிய செ.இராசதுரை மிகப்பெரும் மதிப்பிற்கும், நன்றிக்கும் உரியவர்.

அவருக்குப்பின் இவ்வமைச்சின் அமைச்சராக பி.பி.தேவராஜ் வந்தார். இக் கல்லூரியை முன்னேற்ற அவரும் குறிப்பாக அவரது செயலாளரான சண்முகலிங்கமும் பல பணிகள் செய்தனர். கல்லூரியின் பாடத்திட்டத்தை ஒழுங்கமைத்தவர் சண்முகலிங்கம்.

அக்காலத்தில் இவ்விசை நடனக்கல்லூரி வழங்கிய பட்டங்கள் கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்படாமயினால் இதனை கிழக்குப்பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்டு போராட்டத்தை மாணவர் ஆரம்பித்தனர்.

### பல்கலைக் கழகத்துடன் இணைப்பு

1999ல் இது கிழக்குப்பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்டு இதனைப் பல்கலைக்கழக அந்தஸ்திற்கு உயர்த்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்கான முயற்சிகளை கிழக்குப்பல்கலைக் கழகம் மேற்கொண்டது.

2001லிருந்து 2004வரை என்னை இதன் இணைப்பாளராகக் கிழக்குப்பல்கலைக் கழகம் நியமித்தது. அக்காலகட்டத்தில் பல்துறை அறிஞர்களையும் சந்தித்து இதன் புணருத்தாரணத்தை மேற்கொள்ளும் பாரிய பணியை பல்கலைக் கழகம் எனக்களித்தது.

<u>பெயர் மாற்றம்.</u>

இசை நடனம் மட்டும் கற்பிக்கும் இடமாக மாத்திரமன்றி நாடகம், ஓவியம், சிற்பம், படப்பிடிப்பு, சினிமா முதலான தொழினுட்பக் கலைகளைக் கற்பிக்கும் மிகப்பெரும் நுண்கலைப் பல்கலைக் கழகமாக இதனை மாற்ற நாம் நினைத்தோம். இசை, நடனக் கல்லூரி என்ற பெயரை அழகியற் கற்கைகள் நிறுவகம் என மாற்ற முயற்சித்த வேளை அது இசை நடனக் கல்லூரியாகவே இருக்க வேண்டும் என்று அடம்பிடித்தோரும் உண்டு.

பல்வேறு கலைகளையும் கற்பிப்பதுடன் அக்கலை பற்றிய பரந்து ஆழ்ந்த அறிவையும், ஆராய்ச்சி மனப்பங்கையும் மாணவர் பெற வேண்டும் எனத்தீர்மானித்தோம். இதற்கான மனுக்களும், பாடத்திட்டங்களும், எதிர்காலத்திட்டங்களும் தயாரிக்கப்பட்டு பல்கலைக் கழகமானிய ஆணைக்குழுவுக்கு அனுப்பப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்டது. மக்கள் பெரும் ஆதரவு வழங்கினர். துறைசார் அறிஞர்களின் துணையுடன் பாடவிதானங்கள் தயாரிக்கப்பட்டன.

ஏற்கனவே இந்த நடனம், இசை சொல்லிக்கொடுத்த ஆசிரியர்களைப் பாடசாலைகட்கு அனுப்புவதா? இங்கும் தொடர அனுமதிப்பதா என்ற பிரச்சினை எழுந்தது. அவர்களை விரிவுரையாளர்களாக அன்றி போதனாசிரியர்களாக (instructors) வைத்து விரிவுரையாளர்களாக்கலாம் என்ற யோசனைகளும் முன்வைக்கப்பட்டன.

நிறுவகத்திற்கான சட்ட திட்டங்கள் நிர்வாக அமைப்பு முறை என்பன கெசற் பண்ணப் பட்டதுடன் 3 துறைகளை (இசைத்துறை, நடன நாடகத்துறை, தொழினுட்ப கலைத்துறை) ஆரம்பிப்பதற்கான அனுமதிகளும், வசதிகளும் தரப்பட்டன.

இதன் முதல் பணிப்பாளராக ஏற்கனவே இங்கிருந்த ஒருவரையே வைக்க வேண்டும் என்பதும் கெசற் பண்ணப்பட்டிருந்தது. அதற்கிடையே 2005இல் இப்பணிப்பாளர் நியமிக்கப் பட்டார்.

<u>வேகக்குறைவு ஏன்?</u>

கிழக்குப் பல்கலைக் கழகம் நினைத்ததற்கமைய இந்நிறுவனத்தின் வளர்ச்சிவேகம் குறைவாக இருப்பது நம் அனைவருக்கும் மனவருத்தம் தரும் செய்தியாகும். வேகக்குறைவிற்கும், வளர்ச்சியின்மைக்குமான காரணங்களைக் கண்டறிந்து அதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

<u>சுவாமி விபுலானந்தரின் சிந்தனைகள் இவ்விடத்தில் நமக்கு வழிகாட்டும்.</u>

வளர்ச்சிக்கான வழிகள்

<u>ஆசிரிய ஆளுமை</u>

நான் முன்னரே கூறியபடி இங்கு பயிற்றுவிக்கும் ஆசிரியர்களும், கற்கும் மாணவர்களும் தம்மை உலகுசார் அறிவை மென்மேலும் வளர்த்துக் கொள்ள வேண்டும். அதற்கான விரிவுரைகள், பயிற்சிப்பட்டறைகள், அறிஞர்கள் அழைப்பு என்பன மேற்கொள்ளப்பட வேண்டும்.

<u>பாட ஒருங்கிணைப்பு</u>

சுவாமி விபுலானந்தர் இசை, நடனம், நாடகம், ஓவியம், சிற்பம், இலக்கியம் யாவற்றையும் ஒருங்கிணைத்துப் பார்த்தவர். இவை பாடநெறிகளாக இங்கு கற்பிக்கப்படுகின்றன. ஒருங்கிணைந்து வலிமையாக முன்னேற வேண்டிய இப்பாட

நெறிகளும், துறைகளும் தனித்தனியாக இயங்குவதும், தம்முள் முரண்பட்டுக் கொள்வதும் நிறுவகத்தின் வளர்ச்சிக்கு ஒரு போதும் உதவப்போவதில்லை.

புதிய மரபுகள்

இந்நிறுவனம் பல்கலைக்கழக போன்றது பாடசாலையும் அன்று அது ஓர் அழகியற் கற்கைகள் நிறுவகம். புதிய மரபுகளுடன் உருவாகும் ஒரு நிறுவகம். மாணாக்கரும், ஆசிரியரும் தம் சொல்லாலும், செயலாலும், நடத்தைகளாலும் நடை, உடை, பாவனைகளாலும் ஒரு புதுப்பண்பாட்டு மரபினை இதற்கென உருவாக்க வேண்டும். சிவானந்த வித்தியாலய மாணவர்களை சுவாமி விபுலானந்தர் உருவாக்க விரும்பிய மாதிரிகளை நாம் சிந்தித்துப் பார்க்கலாம்.

மறைந்த கலைகளை மீட்டெடுத்தல்.

சுவாமி விபுலானந்தர் கூறிய தனித்துவம் பேணும், காணும் போக்கினை இந்நிறுவகம் மேற்கொள்ள வேண்டும். சுவாமி விபுலானந்தர் தமிழிசை கண்டது போல மறைந்த யாழை மீட்டுக் கொணர்ந்தது போல தமிழிசையை இங்கு வளர்ப்பதும், இந்த மண்ணிற்குரிய இசை வளங்களையும், மறைந்த மண்சார்ந்த வாத்தியக்கருவிகளையும் மீட்டெடுப்பதும் இந்நிறுவகத்தின் நீண்ட பயணத்தில் செய்ய வேண்டிய கருமங்களாகும்.

புதிய காற்றுகள் புகட்டும்

சுவாமி விபுலானந்தர் கூறிய முரண்பாடுகளைக் காணுதலும், அதனிடையே சமரசம் காணுதலும் இங்கு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். நிறுவகத்தின் மூடப்பட்ட யன்னல்கள் வெளிக்காற்றுகளுக்குத் திறந்து விடப்பட வேண்டும். எங்கொல்லாம் சிறப்புண்டோ, எங்கெல்லாம் திறமையுண்டோ அதையெல்லாம் இங்கழைத்து மாணாக்கரையும், தம்மையும் அறிவுடையோராக வளர்த்தெடுக்கும் பரந்த மனப்பாங்கை கற்றுக்கொள்ள வேண்டும்.

பல்லாயிரக்கணக்கான கண்கள் நமது செயல்பாடுகளைக் கண்காணித்துக் கொண்டுள்ளன என்ற பயமும் மக்களின பணத்தில்தான் நாம் சம்பளம் பெறுகிறோம். அந்த மக்களின்குழந்தைகட்குத்தான் நாம் கற்பிக்கின்றோம் என்ற விழிப்புணர்வும், பொறுப்புணர்வும் இங்கு கற்பிக்கும் ஒவ்வொரு ஆசிரியர் மனதிலும் இருக்க வேண்டும்.



50 வருடகாலத்திட்டம்

இத்தனைக்கும் மேலாக இந்நிறுவகத்திற்கு 50வருட காலத் தொலைநோக்கிலான ஒரு பெரும் திட்டம் வரையப்பட வேண்டும்.

2005ல் 4 துறைகளுடன் (இசை, நடனம், நாடகம், கட்புலத் தொழினுட்பக்கலை) ஆரம்பிக்க இந்நிறுவகம் 2010ல் மேலும் ஒரு துறையையாவது தோற்றுவித்திருக்க வேண்டும்.இசைத்துறை காலம் தோறும் உணர்ந்து கர்நாடக இசை, பண்ணிசை, நாட்டார் இசை, மேற்கத்தேய இசை எனப்பல துறைகளாக வேண்டும். அத்தோடு வாத்தியங்களுக்கென தனித்தனித் துறைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

நாடகமும், கட்புலத் தொழினுட்பக் கலைகளும் பல்வேறு துறைகளாக வளர வேண்டும்.

இதற்கான நிபுணத்துவ ஆலோசனைகள் செயற்பட வேண்டும்.

2050ல் இசை, வாத்தியம், நடனம், நாடகம், ஓவியம், சிற்பம், தொழினுட்பம், கலைகள், கைவினைக்கலைகள் என்ற ஒவ்வொரு நெறியும் தமக்குள் பல்வேறு துறைகளை உள்ளடக்கிய ஒவ்வொரு பீடமாக வளர்ந்து இவ் 8 பீடங்களையும் உள்ளடக்கிய ஒரு பெரும் பல்கலைக்கழகமாக, நுண்கலைக்குரிய முழுமை பெற்ற பல்கலைக்கழகமாக விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம் 2050ல் நிமிர வேண்டும்.

கனவு மெய்ப்பட வேண்டும்.

இது ஒரு கனவுதான். பாரதி பாடினான். "கனவு மெய்ப்பட வேண்டும்" என்று கதைகள் தான் நிஜங்கள் ஆகின்றன. விபுலானந்தர் என்ற விளக்கை கையிலேந்தி அறியாமை, மனக்காழ்ப்பு, குரோதம் என்ற இருள் கிழித்து நீங்கள் முன்னேற வேண்டும். அதற்குத் தேவையானவை

அர்ப்பணம், அர்ப்பணம், அர்ப்பணம்.
உழைப்பு, உழைப்பு, உழைப்பு
, விடாமுயற்சி



பேராசிரியர்.சி.மௌனகுரு

விபுலானந்த விளக்கேந்தி,
இருள்கிழிந்தது (முன்செல்க)



HJ

Haseena

JEWELLERS

Hutha Mosque Road
Valaichchenai
Tp. 0652257395, 0773837542

The 2010 AWARDS
SVIAS, Eastern University, Sri Lanka

Annual Magazine of Students' Union
Swamy Vipulananda Institute of Aesthetic Studies
Eastern University - Sri Lanka

ISSN 2012 - 9475
9 772012 947000

Visual Creation 0752822915